# தமிழரசு

16-4-1978 50காசு

27 APR 1978

சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக்
கட்டப்பட்டது!

● கண்கவர் வண்ணம்
● துல்லியமான பூச்சு
● அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
● காங்க்ரீட் சுண்ணும்புக் கலவை வேலைக்குகந்தது.
● அதிக உழைப்பு உறுதி
● கந்தக நீர் மற்றும் அமில மண்ணுல் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

ARASU CEMENT
TIDCO

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்போரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணுசாலை, சென்னை — 600 002.

## இந்த இதழில் :-

### வணக்கம்.

தமிழ்ப் புத்தாண்டு இதழ், இவ்விதழ். இப்புத்தாண்டிலே, வளனும் வசியும் பெருகி, தமிழ்ச் சமுதாயம் வாழ்வாங்கு வாழ, "தமிழரசு"வின் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இவ்விதழ் தனிச்சிறப்புப் பெற்று மிளிர்கிறது. "தமிழுக்கும் அமுதென்று பேர்!—அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என எழுச்சி முரசு கொட்டிய புத்துலகம் கண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாருக்குத் தமிழக அரசின் சார்பில் முதன் முறையாக இத்திங்கள் 29,30 ஆம் நாட்களிலே சீரோடும் சிறப்போடும் விழா எடுக்கப்படுகிறது. புரட்சிக் கவிஞர் பிறந்ததும் சித்திரைத் திங்கள்; மறைந்ததும் சித்திரைத் திங்களிலே தான்! "எங்கும் தமிழ்—எதிலும் தமிழ்" என சனவரித் திங்களில் சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முழக்கமிட்டார்கள். தமிழ் வளர்ச்சியே இவ்வரசின் தலையாய இலட்சியம். அந்த மாபெரும் இலட்சியம் நிறைவுபெற, "தமிழரசு" தன்னாலான சிறு தொண்டினை ஆற்றிட வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பேருவகை கொள்கிறோம், தமிழ் வளர்ச்சி இதழாகவும்—புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் சிறப்பிதழாகவும் மலர்ந்துள்ள இவ்விதழினை, தமிழன்னையின் திருவடிகளிலே சிறு காணிக்கையாகப் படைக்கின்றோம். முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் போன்ற தமிழ்ப் பேரறிஞர்களின் கட்டுரைகளும், புலவர் பெருமக்களின் கவிதைகளும், புரட்சிக் கவிஞர் பற்றிய சுவையான தகவல்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

27 APR 1978

"அண்ணா எனும் இலக்கியவாதி" தொடர்கட்டுரையில் தன்னைப் பற்றிய கடுமையான விமர்சனங்களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளும் பண்பாளராக அண்ணா இருந்தார்" என்ற கருத்துக்கு வலுவூட்டுகிறார் கட்டுரை ஆசிரியர். 'தமிழரசு' மே முதல் நாள் இதழ் - தொழிலாளர் நல இதழாக வெளிவரும்.

புரட்சிக்கவிஞர் குறித்துப் பெறப்பட்ட கட்டுரைகள் அனைத்தையும் இவ்விதழில் வெளியிட இயலவில்லை. அதனால் இந்த இதழில் இடம் பெறாதவை அடுத்த இதழில் இடம் பெறும்.



### தொலைக்காட்சியில் பாரதிதாசன்!

25.4.78 செவ்வாய் மாலை 6.30 மணிக்கு 'வாழ்க்கைக் கல்வி' என்னும் தொடரில், 'சான்றோர் சரிதம்' என்னும் தலைப்பில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இடம் பெறுகின்றன.

29.4.78 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கதை, உரையாடல் எழுதி, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பெற்ற 'பொன்முடி' என்னும் திரைப்படம் காண்பிக்கப்படவிருக்கிறது.

# தமிழரசு

மலர்: 8 இதழ்: 20

16—4—1978


### உள்ளே


| | |
|---|---|
| புரட்சிக் கவிஞருக்குப் புகழ்மாலைகள் | 2 |
| தமிழுக்குத் தொண்டு செய்வோம் | 4 |
| பாவேந்தரும் பாரதியாரும் | 5 |
| அந்தக் கனவு | 6 |
| பாவேந்தர் பாரதிதாசன் தமிழுக்குத் தந்தவை | 7 |
| எனது நாடு | 9 |
| பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள் | 10 |
| ஒட்டடா ரதத்தை! | 13 |
| புரட்சிக் கவிஞர் | 15 |
| புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | 17 |
| கடும்புயலில் ஒரு கருங்குயில் | 22 |
| பாரதிதாசன் என் ஆசான் | 26 |
| பாரதிதாசன் என் அரசன் | 27 |
| பாரதிதாசன் என் தாய் | 28 |
| பாரதிதாசன் என் அண்ணல் | 29 |
| பாரதிதாசன் என் தலைவன் | 30 |
| புரட்சித் தீயின் போர்ப் பொறிகள் | 31 |
| பாவேந்தரும் பைந்தமிழும் | 33 |
| அண்ணா எனும் இலக்கியவாதி | 39 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 41 |
| கத்தரிக்காய் வெண்டைக்காய் விரதம் | 43 |
| தமிழ்மணம் கமழட்டும் | 45 |

# புரட்சிக்

## சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி....

'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் புத்தகம் தமிழ் நாட்டுக்கு ஒரு சிறந்த பொக்கிஷமாகும். இது, படிப்போருக்குக் கவியா வசனமா என்று மலைக்கும் படியான ஓர் அற்புதக் கவித் திரட்டு என்றுதான் சொல்லவேண்டும்.

கவிதைகளின் அமைப்புப் பெருமை இங்ஙனம் இருக்க, கவிகள் கொண்ட கருத்துக்களோ முற்றிலும் சமூக சமயச் சீர்திருத்தக் கருத்துக்களேயாகும். சிறப்பாக மூடநம்பிக்கைகளை அகற்றும் தன்மையில், மிகமிகப் பாமர மக்களுக்கும் பசுமரத்தில் ஆணி அறைந்தது போல் விளங்கும்படியும் பதியும் படியும் பாடப்பட்டிருப்பதுடன், கவி நயமோ புலவர்களுக்கு ஒரு நல்விருந்தாகவும் அமைந்துள்ள அரும் புத்தகமாகும்.

தோழர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்நாட்டிற்குப் புதியவரல்ல. அவர் சென்ற பத்து ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றார். மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும், சந்தோஷ வாழ்க்கைக்கும் இன்றியமையாத புரட்சியான பல சீர்திருத்தங்களை ஆதரிப்பது மட்டுமின்றி, அவைகளை ஜன சமூகத்தில் பல வழிகளிலும் பரப்ப வேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர்; சிறப்பாகவும், சுருக்கமாகவும் கூற வேண்டுமானால் பாரதிதாசன் அவர்கள் ''சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி'' என்றுதான் கூறவேண்டும். இந்த ஒரு காரணத்தினாலேயே, அவர் இன்று தமிழ் நாட்டின் சிறந்த கவியாய் இருந்தும், அவருடைய புகழ் போதுமான வரையில் பரவாமலிருக்கிறது. ஆனால் அவர் மட்டும் வெறும் புகழை விரும்புவாரானால், காலத்திற்கும், பாமர மக்கள் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டு மிகச் சிறந்த கவி என்ற பெயரை எளிதில் பெற்று விடலாம். ஆனால், உண்மை, நியாயம், அறிவு முதலியவற்றைச் சிறிதும் விட்டுக் கொடுக்க இசையாத இயற்கையான ஒரு பிடிவாத முடையவராதலால் அவர் புகழை எதிர்பாராமல், தம் கொள்கைகளில் விடாப்பிடியாய் இருந்து வருகிறார். இக்குணத்தை நான் அவரிடம் பல தடவைகளில் கண்டிருக்கின்றேன்.

இத்தகைய ஒருவரால் எழுதப்பட்ட இப்புத்தகத்தை உண்மைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சிறப்பாகச் சமூகப் புரட்சிக் கருத்துடையவர்களும், சமூகச் சீர்திருத்தத் தொண்டு செய்பவர்களும் வாங்கி அனுபவித்து, அதன் கருத்துக்களை மக்களிடையில் பரப்ப வேண்டியது. மிக்க அவசியமாகும்.

இப்பாட்டுக்களைப் பாடிய தோழர் பாரதிதாசன் அவர்களுக்கும் இவைகளைத் திரட்டி வெளியாக்கிய தோழமையர் குஞ்சிதம் குருசாமி அவர்களுக்கும் சீர்திருத்த உலகம் கடப்பாடுடையதாகும்.

—தந்தை பெரியார்
1—1—1938.

## வீரராகத் திகழ.... தமிழராக வாழ...!

''முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் ஒரு முழுமதி போல''—தமிழ்நாட்டில் தோழர் பாரதிதாசனின் கவிதை தோன்றியுள்ளது.... புரட்சிக் கருத்துகள் அவரது உள்ளத்தில் பொங்கிப் பூரித்து, புதுமைக் கவிதைகளாக வெளிவருகின்றன.. இயற்கையின் எழில், காதல் மேம்பாடு, கலை நுணுக்கம் முதலியனபற்றி அவர் இயற்றியுள்ள கவிதைகள் படிப்போரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தும்—ஆனால் புத்துலகக் கரை கொண்டு போய்ச் சேர்க்கும்.... வீரச்சமுதாயம், 'கடவுள்', 'மதம்' என்னும் கட்டறுத்து காதல், கவிதை, கலை எனும் நறுமணச் சோலையில் உலவும் நல்ல சமுதாயம், ''ஓடப்பர்'' இல்லாது ''ஒப்பப்பர்'' உள்ள சமுதாயம், வஞ்சகத்தை வீழ்த்த வாளெடுக்கத் துணியும் தீரச் சமூகம்—இது கவியின் இலட்சியம். இது பலப்பல பரிமளத்துடன் பாக்களாக வந்துள்ளன. ஒவ்வொன்றும் உள்ளத்துக்கு உல்லாசமும், உறுதியும் தருவன..... முத்தும், பவளமும், வைரமும், தங்கப் பேழையில்

# கவிஞருக்குப் புகழ்மாலை

இட்டுத் தருவதுபோல், பாரதிதாசனின் கவிதைகளைத் திரட்டி அழகிய வடிவினதாக, சென்னை 'தமிழ் நூல் நிலைய'த்தார் வெளியிட்டுள்ளனர். இளைஞர்கள் ஒவ்வொருவரும் இதனைப் பெறவேண்டும்! இதனைப் பெற வேண்டும்—பேறு பெற அல்ல — புத்துலகக் கருத்து பெற, புதுமைச் சுவையை உண்ண, வீரராகத் திகழ! தமிழராக வாழ!!

—பேரறிஞர் அண்ணா.

## பாச்சுவை பாரதிதாசன் வாழ்க !

திருச்சியில் ஒரு மணி விழா நடைபெற்று வருகிறது. அது தமிழ் விழா, தமிழ் நாட்டு விழா, தமிழ்ப் பாட்டு விழா. அவ் விழாவை, இயல் வாழ்த்துகிறது; இசை வாழ்த்துகிறது; நாடகம் வாழ்த்துகிறது.

மணி விழாவுடையார் யார்? புதுவைத் தோன்றல் சுப்புரத்தினம்-பாரதிதாசன்; அவர் வாழ்க!

கடவுள் பாட்டு, கருணை பாட்டு, நிபுலை பாட்டு, வெண் வீதி பாட்டு, ஞாயிறு பாட்டு, திங்கள் பாட்டு, நானிலம் பாட்டு, எல்லாம் பாட்டு—பாட்டே!

எல்லாவற்றையும் பாட்டாக நோக்கும் நெஞ்சில் பாட்டு முகிழ்க்கும். அதனை எழுத்தோவியமாக அமைக்கும் பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை. தோழர் பாரதிதாசனுக்கு அப்பேறு எளிதில் வாய்த்தது. இது கருவிலுற்ற திருவேயாகும்.

தோழருடன் சிறிது நேரம் பேசினும் அவர்தம் குழந்தை மனம் புலனாகும். குழந்தை மனம் பாட்டுப் புலம் என்பதை விளக்க வேண்டுவதில்லை.

புதுவைத் தமிழ் வைப்பு கனக-சுப்புவினிடத்திருந்து பொங்கி வழிந்த பாமணிகள் பலப்பல. அவற்றுள், கருத்து வேற்றுமை உண்டு. வேற்றுமை என் நெஞ்சைக் கவர்வதில்லை; பாட்டே என் நெஞ்சைக் கவரும். இது சுப்புவின் பாட்டுத் திறம் என்று கூறுது வேறென்ன கூறுவது?

பொதுமைப் பொழில்—புதுமை மலர்—தமிழ்த் தேன்—பாச்சுவை—பாரதிதாசன் வாழ்க! வாழ்க! வாழ்க பல்லாண்டு!

தமிழ்த் தென்றல்

திரு. வி. க.

"....இக்காலத்திற் பல துறைகளிலுஞ் சீர்திருத்தம் வேண்டி நிற்கும் நம் தமிழ் மக்கட்குப் புது முறையிற் பாடப்பட்டிருக்கும் பாரதிதாசனின் பாட்டுகள் கிளர்ச்சியினையும் மகிழ்ச்சியினையும் பயந்து, சீர்திருத்தங்கள் பலவற்றிற்கு வழி காட்டும்"

—மறைமலையடிகள்.

## உயிர்க் கவி பாரதிதாசன்

...பாரதிதாசன் ஆவேசக் கவி; அவர் (அழகு) அலங்காரக் கவி அல்ல. வெறும் ஜோடிப்பு வேலை செய்பவர் அல்ல. அகராதியைக் கொண்டு 'கவி கட்டும்' மேஸ்திரி அல்ல. உண்மைக் கவிதையைக் கண்டு மனம் பொங்கும் 'புலவர்' அல்ல. ஆவேசத்தையும் உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க் கவி பாரதிதாசன் என்பது, எனது தாழ்மையான எண்ணம். அவர் கையாளும் சொற்களின் எழிலையும் பசையையும் விசித்திரத் தன்மையையும் கண்டு அனுபவிப்பவர்கள் நான் சொல்லுவதை ஆதரிப்பார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

பாரதிதாசன் தமிழ் நாட்டின் பொக்கிஷம். அந்தப் பொக்கிஷத்தைத் தமிழர்கள் அனைவரும் போற்றுவார்களாக! இந்தக் காவியத்தைப் படித்துப் "பேரின்பம்" அடைவார்களாக! அவருடைய கவிதையை வாசித்து, உயிரும் உணர்ச்சியும் பெறுவார்களாக!

—வ. ரா.

3—1—1938

## வீரத் தமிழ்ச் சொல்லின் சாரம்!

பாரதியார் கூறும் 'வீரத் தமிழ்ச் சொல்லின் சார'த்தைப் பாரதிதாசன் பாடல்களில் சிறப்பாகக் காணலாம். கருத்து வேற்றுமையுடையவர்களும் பாரதிதாசன் கவிப் புலமைக்குத் தலைசாய்த்து வணங்குகிறார்கள்.

—பரலி சு. நெல்லையப்பர்

24—4—'51

27 APR 1978

# தமிழுக்குத் தொண்டு செய்வோம்!

தமிழ் கற்ற—தமிழைப் பரப்புகிற—புலவர்கள் ஏழ்மையில் வாழ்ந்து தான் தீரவேண்டும் என்ற சமுதாய அமைப்பு இருக்குமானால் அதை மாற்றி அமைக்க இந்த அரசு பாடுபடும். தமிழ் கற்ற புலவர்களின் குடும்பமும்–சுற்றுச் சார்பும்–மகிழ்ச்சியோடு இருக்க நாங்கள் பாடுபடுவோம்.

தமிழ் கற்ற புலவர்களை தமிழக அரசு கைவிடாது. அவர்கள் வறுமையில் வாழ, இந்த அரசு இடம் கொடுக்காது என்பதையும் உறுதியோடு சொல்லிக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் தமிழ் கற்றவர்களுக்கு—தமிழுக்குச் சொந்தக்காரர்களுக்கு—முதலிடம் அளிக்கப்படும். அப்படி அளிக்கப்பட்டால் நான் ஆச்சரியப்படமாட்டேன். அத்தகைய நிலை வர வேண்டும். தமிழ் கற்றவர்களுக்கு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதே எனது ஆசை.

இது இன்று நேற்று ஏற்பட்ட ஆசை அல்ல. நமது பெரியவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்ட குறிக்கோள்—இலட்சியமாகும். அந்த உரிமை—நம்பிக்கை செயல்பட நேரிடும்போது இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

## எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!

தமிழில் விஞ்ஞானம் கற்றுத் தரும் நிலைமை உருவாக வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வது போலத் தமிழில் விஞ்ஞானச் சொற்களைச் சொல்ல முடியுமா என்று கேட்கும் நிலைமை மாறி வருகிறது.

தமிழ் மொழியில் இலக்கியத்தை—வரலாற்றை—அறிவியலை—கணிதத்தை கற்றுக் கொடுக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும். "எங்கும் தமிழ்-எதிலும் தமிழ்" என்ற நிலை வர வேண்டும்.

"தமிழ் கற்றதால் நாம் என்ன கண்டோம்? அவல நிலையைத்தான் கண்டோம்" என்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும். யார் ஆட்சியில் இருந்தாலும் சரி தமிழ் கற்றவர்கள் ஏழ்மையில் வாழக்கூடாது.

தமிழ் படித்தவர்கள்—தமிழை வளர்ப்பவர்கள்—வீட்டில் கண் கலங்காமல் இருக்கும் நிலை உருவானால்தான், தமிழ் கற்ற அறிஞர்களுக்கு நாம் உரிய மரியாதையை அளித்திருக்கிறோம் என்று அர்த்தம்.

## திருவள்ளுவர் திருநாளில் முதல்வர் முழக்கம்

இலக்கியம் தந்தவர்களை — அதற்கு வரைமுறை ஏற்படுத்தித் தந்தவர்களை — இலக்கணம் — நிகண்டு தந்தவர்களை நாம் மறக்கப் போவதில்லை. ஆனால் தமிழகத்தின் முந்தைய கால வரலாறு முழுமையாக இது வரை இல்லை. அதை உருவாக்குவதில் தமிழ் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியைப் பயன்படுத்த வேண்டும்.

## தமிழ் இலக்கியங்களைக் கற்க 100 ஆண்டுகள் போதா!

தமிழ் இலக்கியங்களை—நூல்களை—ஒரு மாணவன் நூறு ஆண்டுக் காலம் படித்தாலும் படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது.

# பாவேந்தரும் பாரதியாரும்

## சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம்

தமிழகத்தில் தலைமுறை தோறும் புகழ்மிக்க கவிஞர்கள் வழிவழி தோன்றி வந்துள்ளனர். அவர்களைத்தான் ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம்'' என்கிறார் வள்ளற் பெருமான்.

பாரதப் பெருநாடு, மொழியாலும் நாட்டாலும் முற்றிலும் அன்னியரான சமுதாயத்தினருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்திலும், தமிழ்நாட்டில் கவிஞர்களின் வரவு தடைப்பட்டதில்லை. அயல்நாடுகளின் ஆக்கிரமிப்பால் நம்முடைய அரச மரபு அழிந்தொழிந்தது. பிற நாடுகளின் சுரண்டல்களால் வணிக மரபும் வாழ்விழந்தது. ஆயினும், கவிஞர் மரபு மறைந்தொழியவில்லை. அதிலே, இந்த நூற்றாண்டின் முதல் தலைமுறைக் கவிஞராக மகாகவி பாரதியார் தோன்றி, அன்னிய நாட்டவரின் கொடுமைகளைச் சாடிப் பாடினார். அவர் காலத்திலேயே தோன்றி, நம் தலைமுறையிலும் வாழ்ந்திருக்கும் பேறு பெற்ற பாவேந்தர் பாரதிதாசனார், உள்நாட்டில் தமிழருக்குத் தமிழரே இழைத்து வரும் கொடுமைகளை எதிர்த்துப் பாடினார். அதனால், ''புரட்சிக் கவி'' என்றும் புகழப் பெற்றார்.

சமுதாயக் கொடுமைகளைச் சாடுகின்ற புரட்சியைப் பாரதியார் தொடங்கி வைத்தார். இதனை, ''ஒருருக் கொரு நாட்டுக் குரியதான ஓட்டைச்சாண் நினைப்புடையவர் அல்லர்'' என்று கூறி, பாவேந்தர் பாரதிதாசனே பாரதியாரைப் பாராட்டியிருக்கிறார். ''புதுநெறி காட்டிய புலவன்'' என்று கூறிப் போற்றுகின்றார். ஆயினும், சமுதாயக் கொடுமைகளைச் சாடிப் பாடும் பணிக்கு என்றே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள பாரதியாருக்கு வாய்ப்பு இருக்கவில்லை. நாட்டின் விடுதலைக்கென்றே அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் அல்லவா?

பாரதியின் தாசன் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட பாவேந்தர் கனகசுப்புரத்தினம், சமுதாயக் கொடுமைகளைச் சாடிப் பாடுவதற்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். அதிலே அவர் சந்தித்த எதிர்ப்புகளும், அடைந்த இன்னல்களும், சுமந்த பழிச்சொற்களும் கொஞ்சமல்ல. பாரதியாரின் தாசன் என்று பாவேந்தர் தம்மைக் கூறிக் கொண்டாலும், தம்முடைய முன்னோரிடமிருந்து பல வகையிலும் வேறுபட்டவராக அவர் விளங்கினார். குறிப்பாக, சமய வழிப்பட்ட பழக்கவழக்கங்களைச் சாடுவதிலே பாரதியாரை விடவும் தீவிரவாதியாக விளங்கினார். அத்துறையில் பாரதியார் வகுத்த சீர்திருத்தப் பாதையை பாவேந்தர் விரிவுபடுத்தினார் என்றும் சொல்லலாம்.

தாய்மொழிப் பற்றிலேயும் பாரதியாரை விஞ்சும் வகையில் தமிழ் மொழியின் அருமை பெருமைகளைப் பாடினார். 'தமிழைப் பழித்தவனை, என் தாய் தடுத்தாலும் விடேன்' என்னும் பாவேந்தரின் பொன்மொழிக்கு நிகராக இன்னொரு மொழியை இணை சொல்ல முடியுமோ? ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்னும் அமுத மொழியைத்தான் மறக்க முடியுமோ?

பாவேந்தர் தனியொரு சகாப்தத்தின் தலைமைக் கவிஞர். பாரதியார் தேசீய சகாப்தத்தின் முதற் கவிஞர். அவரைப் பின்பற்றி நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகனார் போன்ற தேசீயக் கவிஞர்கள் பலர் தோன்றினர். அதுபோல, சமூக சீர்ருத்தப் புரட்சிச் சகாப்தத்தில் தனிப் பெருங்கவிஞரான பாரதிதாசனைப் பின்பற்றி எண்ணற்ற கவிஞர் தோன்றியவண்ணமுள்ளனர். ஆம்; பாரதிதாசனின் மரபு முடிந்து போய்விடவில்லை; தொடர்ந்து வருகிறது. அந்த வகையிலும் அவர் தமிழர் சமுதாயத்தில் தனி இடத்தைப் பெற்றுவிட்டார். பாரதியாரையும், பாரதிதாசனையும் பிரித்துப் பார்க்க முடியாது. அவர்கள், ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவர்கள்.

இந்த ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் நினைவுநாளை, தமிழக அரசே பொறுப்பேற்றுக் கொண்டாடுகின்றது. கலைஞர் குலத் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். தலைமையிலுள்ள அரசு, கவிஞர் குலத் தலைவனைப் பெருமைப்படுத்துவது இயற்கை தானே!

வாழ்க, பாவேந்தர் புகழ்!



# அந்தக் கனவு?




மாண்புமிகு உள்ளாட்சித் துறை

அமைச்சர்

திரு கா. காளிமுத்து


இருபதாம் நூற்றுண்டுத் தமிழகத்தின் இணையற்ற கவிஞர்—பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் காலத்தை வென்று என்றென்றும் அழி வற்று வாழும் நிலை பெற்றவர்.

''திங்களொடும்—செழும் பரிதி தன்னேடும் மங்குல் கடல் இவற்றேடும் பிறந்த தமிழ்'' என்று எந்தத் தாய்த் தமிழை வாழ்த்தி மகிழ்ந் தாரோ—அந்தத் தமிழுடன் கலந்து பொன்றுப் புகழொடு—குன்ற விளக்கென—குன்றத்து விளக் கென—ஒளி வீசி நிற்பவர். சீருயர்ந்த கவிஞனுக் குரிய அத்தனை இலக்கணங்களையும் மொத்தமாகப் பெற்று அவர் திகழ்ந்தார். தமிழகம் அரசியலில்—சமுதாய அமைப்பில்—பொருளாதாரத்தில்—தலை நிமிர்ந்து நிற்பதற்கு எந்தக் கருத்துக்கள் தேவை யோ, அந்தக் கருத்துக்கள் தான் அவர் கவிதை களில்—காவியங்களில்—உரைநடை எழுத்தோவி யங்களில் உள்ளடங்கி நிற்கின்றன. கவிஞன் என்ப வன் அகராதிச் சொற்களை எதுகை மோனையோடு இணைக்கும் வித்தைக் காரனல்லன். நாடு—மொழி—இனம் இவைகளின் நிலையுணர்ந்து அவற்றின் வாழ் வுக்கும்—வளர்ச்சிக்கும், அவனது எழுத்தோவியங் கள் பயன்படாவிட்டால் அந்த எழுத்துக்களில் பிரேத வாசனை மட்டுமேதான் வரும். பாரதி தாசனின் படைப்புக்கள்—'சஞ்சீவி' மருந்துண்ட சிரஞ்சீவிகள்.

வேர்ட்ஸ் வொர்த்தின் இயற்கை வருணனைப் பாடல்களை வியந்து பாராட்டிய திறனாய்வாளர் ஒருவர் 'வேர்ட்ஸ் வொர்த்தின் எழுதுகோலை வாங்கி, அவருக்காக இயற்கையே இந்தப் பாடல்களை எழுதி யிருக்கிறது' என்றார். பாவேந்தரின் பாடல்களைக் காணும்போது, பன்னெடுங் காலமாகப் புதை பொருளாகிவிட்ட சங்க காலத்து வீரம், துள்ளி எழுந்து—பாவேந்தர் வடிவில்—எழுதிய பாடல்க ளாகத்தான் அவைகள் மின்னி மிளிர்கின்றன. ''பீறிட்டடிக்கும் உடற் குருதி கண்டால் சோரா திருந்திடப் பழகு—வரும் போர் மறவனுக்கிதே அழகு''—இதுவும் பாவேந்தரின் கவிதை வரிகள் தான்.

''எல்லோர்க்கும் எல்லாம்என் றிருப்ப தான
இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்
கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்
இல்லானும் அங்கில்லை பிறன்உ ழைப்பை
எனதென்று தனிஒருவன் சொல்லான் அங்கே,
நல்லாரே எல்லாரும், அவ்வை யத்தில்
நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்''

இந்த உயிர்த் துடிப்புள்ள உணர்ச்சிக் கவிதை —எதிர்கால உலகு எப்படி இருந்திட வேண்டும் என வார்த்தையால் வண்ணம் தீட்டுகிறது.

புதுமைக் கவி பாரதியின் வழித்தோன்றல் தான் பாவேந்தர். 'விடுதலை பெற்ற இந்தியா'வைக் காண விரும்பி—அதற்காகப் பள்ளி எழுச்சி பாடிய பாரதியின் கனவு—நிறைவேறிவிட்டது. ஆனால் பாவேந்தர் பாரதிதாசன்—நாடு—மொழி—இனம் பற்றிக் கண்ட கனவு...?

அகத்தியன் விட்ட புதுக் கரடி
—பாரதிதாசன் பதிப்பகம், (1948).

அமைதி
—செந்தமிழ் நிலையம், ராமச்சந்திரபுரம்.

அழகின் சிரிப்பு
—செந்தமிழ் நிலையம்.

இசையமுதம் (முதல் பாகம்)
—பாரதசக்தி நிலையம் (1944)

இசையமுது (இரண்டாம் பாகம்)
—பாரதசக்தி நிலையம் (1952)

இரணியன் அல்லது இணையற்ற வீரன் (நாடகம்)
—குடியரசுப் பதிப்பகம் (1939).

இருண்ட வீடு
—முத்தமிழ் நிலையம் (1944)

இளைஞர் இலக்கியம்
—பாரி நிலையம் (1967)

உரிமைக் கொண்டாட்டமா?
—குயில் (1948).

எதிர்பாராத முத்தம்
—வானம்பாடி நூற்பதிப்புக் கழகம் (1941)

எது பழிப்பு?
—குயில் (1948).

எது இசை?
—முத்தமிழ் நிலையம் (1949)

கடவுளைக் கண்டீர்!
—குயில் (1948)

தமிழச்சியின் கத்தி
—பாரதிதாசன் பதிப்பகம் (1949)

தமிழியக்கம்
—செந்தமிழ் நிலையம்.

தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு

திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம்

தேனருவி இசைப் பாடல்கள்
—பாரதிதாசன் பதிப்பகம் (1956).

நல்ல தீர்ப்பு (நாடகம்)
—முல்லைப் பதிப்பகம் (1944)

நீலவண்ணன் புறப்பாடு
—குயில் (1960).

பாண்டியன் பரிசு
—முல்லைப் பதிப்பகம் (1943)

பாரதிதாசன் ஆத்திசூடி
—பாரதிதாசன் பதிப்பகம் (1948).

பாரதிதாசன் கதைகள்
—முரசொலிப் பதிப்பகம் (1957).

பாரதிதாசன் கவிதைகள்
—கடலூர் டி. எஸ். குஞ்சிதம் (1938).

பாரதிதாசன் கவிதைகள் (முதற் பாகம்)
—குடியரசுப் பதிப்பகம் (1944)

பாரதிதாசன் கவிதைகள் (இரண்டாம் பாகம்)
—பாரதிதாசன் பதிப்பகம் (1952)

பாரதிதாசன் நாடகங்கள்
—பாரி நிலையம் (1959)

கண்ணகி புரட்சிக் காப்பியம்
—அன்பு நூலகம் (1962).

கதர் ராட்டினப் பாட்டு
—காசி ஈ. லட்சுமண பிரசாத் (1930)

கற்புக் காப்பியம்
—குயில் (1960).

காதல் நினைவுகள்
—செந்தமிழ் நிலையம் (1969).

காதல் பாடல்கள்
—பூம்புகார் பிரசுரம் (1977)

காதலா—கடமையா?
—பாரதிதாசன் பதிப்பகம் (1948).

குடும்ப விளக்கு (ஒரு நாள் நிகழ்ச்சி)
—பாரதசக்தி நிலையம் (1942).

குடும்ப விளக்கு (திருமணம்)
—பாரதிதாசன் பதிப்பகம் (1948)

குடும்ப விளக்கு (மக்கட் பேறு)
—பாரதிதாசன் பதிப்பகம் (1950).

குடும்ப விளக்கு (விருந்தோம்பல்)
—முல்லைப் பதிப்பகம் (1944)

குடும்ப விளக்கு (முதியோர் காதல்)
—பாரதிதாசன் பதிப்பகம் (1950)

குயில் பாடல்கள்
—பூம்புகார் பிரசுரம் (1977)

குறிஞ்சித் திட்டு
—பாரி நிலையம்

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
—பாரதிதாசன் பதிப்பகம் (1949)

சேர தாண்டவம் (நாடகம்)
—பாரதிதாசன் பதிப்பகம் (1954)

பாரதிதாசன் பன்மணித் திரள்
—முத்தமிழ்ச் செல்வி அச்சகம் (1964).

பிசிராந்தையார்
—பாரி நிலையம் (1967).

புரட்சிக் கவி
—துரைராசு வெளியீடு (1937).

பெண்கள் விடுதலை
—குயில், 1948.

பொங்கல் வாழ்த்துக் குவியல்
—பாரதிதாசன் பதிப்பகம் (1954).

மணிமேகலை வெண்பா
—அன்பு நூலகம் (1962)

மயிலம் ஸ்ரீசுப்பிரமணியர் துதியமுது
—காசி ஈ. லட்சுமண பிரசாத் (1926).

முல்லைக் காடு
—கலைமன்றம் (1955).

விடுதலை வேட்கை, உயிரின் இயற்கை
—மன்றம் வெளியீடு (1948).

வீட்டுக் கோழியும்-காட்டுக் கோழியும்
—குயில் புதுவை (1959).

29-4-1978 அன்று பூம்புகார் பிரசுரத்தினால் வெளியிடப் பட இருக்கும் புதிய நூல்கள்.

தமிழுக்கு அமுதென்று பேர்.

வேங்கையே எழுக.

ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது

புகழ் மலர்கள்

நாள் மலர்கள்

தலைமலை கண்ட தேவர் (நாடகங்கள்)



# எனது நாடு

என்னருமைத் தேசம்
எழில்பா ரததேசம்
பொன்னும் பொருளும்
பொருந்தும் பழநாடு !

கங்கை பெருகும்;
கலகலென ஓசைவரும்!
அங்கு மணிப்பறவை
அத்தனையும் பண்பாடும் !

தூய இமயமலை
வானைத் தொடும் ! சிந்து!
பாயும் ஒருபால் !
பழமரங்கள் ஓங்கும் !

நதிகள் சமுத்திரத்தை
நண்ணும்! கரையில்
நிதிகள் கொழிக்கும் !
நிறைகப்பல் நீர்மிதக்கும் !

பூக்கள், மகரந்தம்,
பூந்தேன், புதியமணம்,
ஈக்கள் சதாகீதம்
என்னென்ன இன்பங்கள் !

வெள்ளைமலை போற்பசுக்கள்
வேண்டுமட்டும் பால்கொடுக்கும்!
அள்ளும் தயிர்நறுநெய்
ஆர்ந்து கிடக்குமிங்கே !

தென்றல் சிலிர்க்கவரும்
செவ்விளநீர் தித்திக்கும் !
மன்றலுறு தாமரைகள்
வாவியெலாம் பூத்திருக்கும் !

செந்நெல், கரும்பு,
செழும்பலா, தேன்கதலி,
எந்நலமும் வற்றாச்
சமுத்திரம்போல் இங்குண்டு!

தேனென்று பாலென்று
சேல்விழியார் வாய்முத்தந்
தானென்று சொல்லும்
தமிழ்க்கவிதை யெல்லாம்

புகழ்க்கூட்டம் செய்து,
புனிதத் தமிழர்
அகத்தே உயிராகி
ஆர்ந்து கிடக்குதிங்கே !

வீடுதொறும் நல்லறஞ்செய்
வெண்கைசேர் பெண்களெலாம்
பாடுதொறும் இன்பஞ்செய்
பச்சைப் பசுங்குயில்கள்!

ஈர முடையார்;
எவர்க்கும் நலம்புரிவர்;
வீரர்; பகைக்குலத்தை
வேரறுப்போர் ஆடுவார்கள்!

கோலமுப் பத்தைந்து
கோடி குலமக்கள்
காலம்பார்க் கின்றார்கள்
கட்கத்தை ஓச்சுதற்கு !

சாதி யனைத்தும்
சமன்செய்தார்; புன்மதத்தால்
மோதி யழியாமே
முன்னேறிச் செல்கின்றார்;

கண்ணினிக்கும் காட்சிகளைப்
பாடும் கவிஞரெலாம்
பெண்ணினத்தை இங்கே
பெரிதென்று பாடுகின்றார்!

மூட வழக்குக்கு
முடிவளித்தார்; பேதமெனும்
காடழிக்க நல்லறிவுக்
கோடரியைக் கைப்பிடித்தார்!

எங்கும் புதிய
எழுச்சி இலகினதால்
அங்கே பகைவரெலாம்
அங்கம் நடுங்குகின்றார் !

நானிலத்தார் இன்பமெலாம்
நன்று நுகர்வதற்குத்
தேனென் றினிக்கும்
எனது திருநாடு

தூக்குந்தோள், வில்லில்
தொடுக்குங்கோல், நல்லறத்தால்
ஆக்கும்போர், நெஞ்சில்
அடக்கும்முச் சுகளெல்லாம்

வெல்கவெல்க ! என்நாடு
வெல்க ! உரிமையெலாம்
மல்கநலம் அத்தனையும்
வாய்ந்து.

பாவேந்தர் பாரதிதாசன்

(1937ல் எழுதியது.)

# பாவேந்தர் பாரதிதாசன் வாழ்க்கைக் குறிப்புகள்

1891 ஏப்ரல் 29ஆம் நாள்—புதன் கிழமையன்று இரவு 10-15 மணிக்குப் புதுவையில் கனக சபை-இலக்குமி தம்பதியருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார் சுப்புரத்தினம்.

1895 ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம் தொடக்கக் கல்வி பயின்றார்.

1897 ஆறாம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றார்.

1908 புதுவை அருகில் உள்ள முதுபெரும் புலவர் பு. ஆ. பெரியசாமியிடமும்—பங்காரு பத்தரிடமும் இலக்கண, இலக்கியங்களையும், சித்தாந்த வேதாந்தப் பாடல்களையும் கற்றார். வேணு நாயகர் என்பவரின் இல்லத் திருமணத்தில் சுப்பிரமணிய பாரதியாரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றார். பாரதியாரின் எளிய தமிழ்ப் புலமை, பாவேந்தரைக் கவர்ந்தது.

1909 காரைக்காலைச் சேர்ந்த நிரவியில் ஆசிரியர் பணியை ஏற்றார்.

1910 வ. வே. சு. ஐயர், அரவிந்தர், டாக்டர் வரதராசுலு போன்ற தலைவர்களின் தொடர்பு கிடைத்தது. பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தந்தார்.

1918 புதுவை கே.எஸ்.ஆர். K.S.R., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே. எஸ். பாரதிதாஸன் என்ற பெயர்களில் பாடல்கள், கட்டுரை, மடல்கள், தேசியப் பாடல்கள், தெய்வப் பாடல்கள் எழுதி வந்தார்.

1919 திருபுவனையில் ஆசிரியராகப் பணி புரிந்த போது பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல் பட்டார் என்று குற்றம் சாட்டப்பெற்று ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். பின்னர், தவறுணர்ந்து, அரசு அவரை விடுதலை செய்தது.

1920 புவனகிரி, பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனியம்மையை மணந்தார்.

கதர்த் துணியைத் தோளில் சுமந்து, தெருத் தெருவாய் விற்றார்

1921 செப்டம்பர்—தலைமகள் சரசுவதி பிறப்பு. பாரதியாரின் மறைவு.

1922 கே. எஸ். பாரதிதாஸன் என்ற புனைபெயரில் தேசசேவகன், துய்ப்ளேக்சு, புதுவை கலைமகள், தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்தபோதினி, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் பாடல், கட்டுரை, கதை எழுதினார்.

1926 ஸ்ரீ மயிலம் சுப்பிரமணியர் துதியமுது — நூல் எழுதினார்.

1928 மகன் கோபதி (மன்னர் மன்னன்) பிறப்பு. தந்தை பெரியார் ஈ.வே.ராவுடன் தொடர்பு.

1929 குடியரசு, பகுத்தறிவு ஏடுகளில் பாடல், கட்டுரை, கதை எழுதுதல்.

குடும்பக் கட்டுப்பாடு குறித்து இந்தியாவிலேயே பாட்டெழுதிய முதற் கவிஞர் என்ற சிறப்புப் பெறுதல்.

1930 சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் வழி நடைப் பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு நூல் வடிவில் வெளியிடப்பட்டன.

டிசம்பர் 10ல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

1931 மகள் வசந்தா (வேனில்) பிறப்பு.

பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தாமணி' என்னும் முத்தமிழ் நாடகம் எழுதி இயக்கினார்.

1932 வெளியார் நாடகங்களுக்கும், தன்மானக் கூட்டங்களுக்கும், பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தந்தார்.

1933 மா. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்சு நினைவுக் கூட்டத்தில் நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

மகள் ரமணி பிறப்பு.

1934 இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகத்தை எழுதிப் பெரியாரின் தலைமையில் அரங்கேற்றினார். (திரு. குத்தூசி குருசாமி அவர்கள் இரணியனாகவும் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்நாடகத்தில் பிரகலாதனாகவும் நடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது).

1935 முதல் கவிதை ஏடு—ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் தொடங்கப்பட்டது.

1938 பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி —குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி ஆகியோரால் வெளியிடப்பட்டது.

'தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்' என்று பெரியாரால் பாராட்டப் பெற்றார்.

1939 நாதசுரச் சக்கரவர்த்தி டி. என். இராசரத்தினம் அவர்கள் நடித்த கவி காளமேகம் என்னும் திரைப்படத்திற்குக் கதை-உரையாடல், பாடல் எழுதினார்.

இரணியன் நாடகத்தை நூலாக வெளியிட்டார்.

1941 இந்தியப் போராட்ட எழுச்சியை மறைமுகமாக ஆதரித்தார்; இரண்டாம் உலகப் போரையும்—இட்லரையும் எதிர்த்தார்.

1944 செட்டி நாடு முழுதும் சென்று இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்தி—பகுத்தறிவு இயக்கத்தில் சேர்ந்து பணிபுரிந்தார்.

1945 புதுவையில் பெருமாள் கோயில் தெருவில் 95ஆம் எண்ணுள்ள வீட்டை விலைக்கு வாங்கினார்.

1946 பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமுயற்சி எடுத்து, ரூ. 25,000 நிதி திரட்டி, சோமசுந்தர பாரதியாரின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற விழாவில், பாவேந்தருக்கு (29-7-46) அன்று அளித்தார்.

நவம்பர் 6ஆம் நாளன்று முப்பத்தாறாண்டுக் காலத் தமிழாசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

1947 புதுக்கோட்டையிலிருந்து 'குயில்' ஏட்டை வெளியிட்டார். 2 இதழுக்குப் பின், அது சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது.

## "எங்கெங்குக் காணினும் சக்தியடா!"

நண்பர் ஒருவரின் திருமண விழாவுக்குச் சென்றிருந்தார் பாவேந்தர். விழாவில் விருந்து நடைபெற்று முடிந்தது. அதன் பின்னர் பாவேந்தரின் இசைவிருந்து தொடங்கியது. பாரதியாரின் நாட்டுப் பாடல் ஒன்றினைப் பாடினார். அந்த விருந்தில் கலந்துகொண்ட பாரதியார் அப்பாட்டைக் கேட்டு மகிழ்ந்தார். பாரதியாருக்குப் பாவேந்தர் அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார். அன்றே பாரதியாரின் உள்ளத்தில் பாவேந்தர் இடம் பெற்று விட்டார். பாவேந்தர் ஒரு கவிஞர் என்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது.

ஒருநாள் பல நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த பாரதியார், 'சுப்புரத்தினம் கவி இயற்ற வல்லவன்' என்று கூற, 'எங்கே எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்' என்று நண்பர்கள் கேட்க, 'பாடு' என்று பாரதியார் பாவேந்தரைப் பார்த்துச் சொல்ல, உடனே ''எங்கெங்குக் காணினும் சக்தியடா!'' என்ற பாடலைப் பாடினார் பாவேந்தர்.

அப்பாடல் வருமாறு:

எங்கெங்குக் காணினும் சக்தியடா!—தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா!—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா—ஒரு
கங்குகளில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

* * *

காளை ஒருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள்—அவள்
தொல்லறிவாளர் திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!

பின்னர் சிலகாலம் கழித்துப் புதுவையிலிருந்து 'குயில்' ஏட்டை வெளியிட்டார்.

1948 குயில்—ஏட்டிற்கு அரசால் தடை விதிக்கப்பட்டது.

1951 செப்டம்பர் 15ல் வேனில்—தண்டபாணி திருமணம்.

1954 குளித்தலையில் நடைபெற்ற ஆட்சிமொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றார்.

மகள் ரமணி-சிவசுப்பிரமணியம் திருமணம்.

1955 புதுவைச் சட்ட மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, அவைத் தலைமை ஏற்றார்.

ஜூன் திங்களில் மகன் மன்னர் மன்னன்—சாவித்திரி திருமணம்.

1958 தமிழகப் புலவர் குழுவினரால் சிறப்பு உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பெற்றார்.

1959 'குயில்' கிழமை ஏடாக வெளியிடப்பட்டது.

1961 'பாண்டியன் பரிசு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு சென்னைக்குக் குடிபெயர்தல்.

1962 தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் மூதறிஞர் இராஜாஜி அவர்களால் பொன்னாடை அணிவிக்கப் பெற்றுக் கேடயம் வழங்கப் பெற்றார்.

1963 சீனப் படையெடுப்பை எதிர்த்து அனைத்திந்திய மக்களை வீறு கொண்டெழப் பாடல்கள் எழுதினார்.

பாரதியார் வரலாற்றைத் திரைப்படமாக்க முயற்சி. இராசிபுரத்தில் நடைபெற்ற கவிஞர்கள் மாநாட்டில் தலைமை ஏற்றார்.

1964 உடல் நலக்குறைவின் காரணமாக சென்னை, அரசின் பொது மருத்துவமனையில் ஏப்ரல் திங்களில் சேர்க்கப்பட்டார்.

1964 ஏப்ரல் 21ஆம் நாளன்று இயற்கை எய்தினார்; மறுநாள் புதுவைக் கடற்கரையில் அவரது உடல் அடக்கம் செய்யப் பெற்றது.

1965 புதுவையில் பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபத்தைப் புதுவை நகராட்சி எழுப்பியது.

1968 ஜனவரித் திங்களில் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பாவேந்தரின் சிலையைக் கடற்கரையில் தமிழக அரசு நிறுவியது.

1969 சாகித்திய அகாடமியினால்—'பிசிராந்தையார்' நூல் பரிசுக்குரியதெனத் தேர்ந்து எடுக்கப்பட்டது.

1971 ஏப்ரல் 29 முதல் பாவேந்தரின் பிறந்த நாள் புதுவையில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பாவேந்தரின் இல்லத்தைப் புதுவை மாநில அரசு, விலைக்கு வாங்கி, அவரது நினைவு நூலகமாகவும்—காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

1972 ஏப்ரல் 29ல் புரட்சிக் கவிஞரின் முழு உருவச் சிலை புதுவை அரசினரால் உருவாக்கப் பெற்றது.

1975 தமிழக அரசு, சென்னை ராஜாஜி மண்டபத்தில் இடம் பெற்றிருந்த பழைய ஆங்கில அதிகாரிகளின் படங்களை அகற்றிவிட்டு அவற்றின் இடங்களில் பாரதியார், பாரதிதாசன் மற்றும் தமிழறிஞர்களின் படங்களைத் திறந்து வைத்தது.

1978 ஏப்ரல் 29, பாரதிதாசன் பிறந்த நாள் விழாவை, இரு நாள் விழாவாகக் கொண்டாடுவதுடன், அவரது பிறந்த நாளையொட்டிக் கவிதைப் போட்டியும் ஓவியப் போட்டியும் வைத்து வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கியது, தமிழக அரசு.

தமிழரசு 16-4-'78 இதழ், பாவேந்தர் சிறப்பிதழாக வெளியிடப் பெற்றது.

—தகவல்: பூம்புகார் பிரசுரம் வெளியிட்டுள்ள பாவேந்தர் நூல்களிலிருந்து.

## எழுத்தின் பயன்!

எழுத்து சுவைமிக்கதாக மட்டுமிருந்தால் போதாது, சுவையோடு கூடிய பயனும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் முழு அளவு பாராட்டத்தக்க இலக்கியமாக—கவிதையாக அது திகழும்.

எழுதப்படுபவை சுவையாக மட்டும் இருந்துவிட்டால் போதாது. எழுதப்பட வேண்டிய பிரச்சினைகள் ஓராயிரம் இங்கு நெளிந்து கொண்டிருக்கின்றன. எது அதிகப் பயன் தரத்தக்கதோ, எது உடனடியாக எழுதப்பட வேண்டியதோ அதற்கேற்ற பக்குவத்தைப் பெற்று எழுத வேண்டும்.

உடனடியான பலனை—இன்பத்தை அளிக்கக் கூடியதாக—மக்களது சங்கடங்களைத் தீர்க்கக் கூடியதாக எழுத்து அமையவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

# ஓட்டடா ரதத்தை!

—வ.ரா

பாரதியார் அனேகமாய் எப்பொழுதும் பொன்னு முருகேசம் பிள்ளையவர்கள் வீட்டிலேதான் தங்கியிருப்பார். முருகேசம் பிள்ளையவர்களின் வீடு விஸ்தாரமான வீடு. மெத்தை உண்டு. மெத்தையிலே, ஓர் அறையிலே, பாரதியார் இருப்பார். இரவுப் பொழுதையும் சில சமயங்களில் அங்கே போக்கிவிடுவார்.

இந்த வீட்டிலே கோவிந்தன் என்று ஓர் அருமையான பையன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். கோவிந்தனும் அவனது சகோதரர்களும் சேர்ந்து மூன்று பேர்கள். இவர்களுடைய தாயார் ரொம்பத் தைரியசாலி. இந்த அம்மாள் பாரதியாரின் வீட்டிலே சுற்றுக் காரியங்கள் செய்து வந்தாள். உடம்பு குச்சி போல இருக்கும். பற்கள் வெளியே நீண்டிருக்கும். காது கேட்காது. ஜாடையிலே பேசினால், அதை வெகு நுட்பமாகக் கண்டு கொள்ளுவாள்.

பாரதியார் சம்பளம் கொடுப்பாரோ கொடுக்கமாட்டாரோ இந்த அம்மாள் யாதொரு முணுமுணுப்புமின்றி வேலை பார்த்து வந்தாள். வேலையிலே ரொம்ப சுறுசுறுப்பு. சோம்பல் என்பதே அந்த உடம்பில் கிடையாது. கூலி வேலை செய்தாலும், கௌரவம் என்ற வஸ்துவை வெகு ஜாக்கிரதையாகப் பந்தோபஸ்து செய்து வைத்திருந்தவள்.

அவளிடம் சச்சரவு செய்து யாரும் மீளவே முடியாது. ஏன்? அவள் அசத்தியமாகப் பேசினதே இல்லை எனலாம். அகௌரவமான காரியமும் செய்ததில்லை. யாருக்கும் உபகாரம் செய்வாள். அவளுடைய பெயர் அம்மாக்கண்ணு.

அவள் சம்பந்தமாக, பாரதிதாசன் ஓர் அருமையான கதை சொன்னார். இந்தக் கதை ரொம்பப் பின்னால் நடந்திருக்கலாம். அம்மாக்கண்ணு பெயர் வருகிற

இந்த இடத்தில் சொல்லி விடுவது சற்றுப் பொருத்தமாயிருக்கும்.

பாரதியார் ஒரு சமயம், அதிகமான வருத்தத்தினால் புதுச்சேரியை விட்டுவிட்டு, பிரிட்டிஷ் இந்தியாவுக்குப் போய்விடுவது என்று தீர்மானங் கொண்டாராம். இது 1917-ஆம் வருஷம் நடந்திருக்க வேண்டும். ஆத்திரப்பட்டுக் கொண்டு, ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட்டார். அவரைத் தடுக்க யாரால் முடியும்?

இளமைப் பருவத்தில் பாரதியாருடன் அவருடைய மனைவி ஸ்ரீமதி செல்லம்மாள் எதிர்த்துப் பேசமுடியாது. நண்பர்களும் அப்படியே. பாரதியார் கோபங் கொண்டு எங்கேயோ வெளியே போய்விட்டார். என்ற சேதி நண்பர்களுக்குத் தெரிந்தது. அம்மாக்கண்ணு வீட்டிலில்லை. அம்மாக்கண்ணு வீட்டிலிருந்திருந்தால், பாரதியாரை வெளியே கோபித்துக் கொண்டுபோக விட்டிருக்கவே மாட்டாள். பாரதியாருக்கு யோசனை சொல்லியோ, அவரோடு சண்டை போட்டோ, அல்லது சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தோ காரியத்தில் வென்றிருப்பாள். பாரதியார் கோபமாய்ப் போனதைக் கேட்டு அம்மாக்கண்ணு புதுச்சேரியில் எங்கேயெல்லாமோ தேடி அலைந்து பார்த்தாள். பாரதியார் அகப்படவில்லை.

சுப்புரத்தினம் (பாரதிதாசன்) நேரே புதுச்சேரி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய், அங்கு பாரதியார் இருப்பதைக் கண்டார். பாரதியார், கண்களில் தீப்பொறி பறக்க, ஸ்டேஷனில் யாருடனும் பேசாமல் உலாத்திக் கொண்டிருந்தார்.

சுப்புரத்தினத்தைப் பார்த்ததும் பாரதியாரின் முகம் ஒருவாறு மலர்ச்சி அடைந்தது. பிறரிடத்தில்-சம்பந்தமில்லா மூன்றும் மனிதனிடத்தில்-கோப முகத்தை அல்லது வருத்த முகத்தைக் காண்பிப்பது நல்ல பழக்கமில்லையல்லவா?

பாரதியாரைச் சமாதானம் செய்து எப்படியோ சுப்புரத்தினம் திரும்ப அழைத்துக் கொண்டு வந்தார். இருவருக்கும் புஷ் வண்டி சவாரி. தர்மராஜா கோயில் வீதியிலிருந்த தமது வீட்டுக்கு வரமுடியாது என்று பாரதியார் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

வேறு வீதி வழியாக, சுப்புரத்தினம் வீட்டுக்குப் போவதாகத் தீர்மானித்து, புஷ் வண்டியை அந்த வழியே செலுத்தினார்கள். வழியிலே அம்மாக்கண்ணு நின்று கொண்டிருந்தாள், சுண்டல் முதலிய தின்பண்டங்களுடன்.

பாரதியார் திரும்பி வருகிற செய்தியை பையன்கள் அவளிடம் சொல்லியிருக்க வேண்டும். பாரதியார் அன்றைக்குப் பட்டினி. அம்மாக்கண்ணு வழிமறித்து இந்த உபசாரங்கள் செய்ததும் பாரதியாருக்கு அளவிலா மகிழ்ச்சி. 'தேவாமிருதம்' என்றார் பாரதிதாசன். உடனே தேவலோக நினைப்பு பாரதியாருக்கு வந்திருக்க வேண்டும். புஷ் வண்டிக்காரனைப் பார்த்து, ''ஓட்டடா ரதத்தை'' என்றாராம் அவர்.

ஒரு சொல்லின் மூலமாய் மனிதனுக்கு எத்தகைய அபூர்வமான கற்பனை தோன்றுகின்றது என்பதற்கு, இந்தச் சம்பவம் இணையற்ற அத்தாட்சி. தேவாமிருதம் - தேவலோகம், ரதம்- இவைகள் படிப்படியாக வந்த கற்பனைக் காட்சிகள். கற்பனையில்லாத மனிதன் கால்மனிதன் கூட அல்ல.

['மகாகவி பாரதியார்' என்னும் நூலில் .]

பாட்டும் குயில்களும் பைந்தமிழ் மக்களும்
போற்றிப் படித்து மகிழ்ந்திடும் வண்ணம்

பாவேந்தர்

# பாரதிதாசன் நூல்கள்

நாட்டுக்கு நாங்கள் வெளியிட்டு வருகிறோம்!
அத்தனையும் அழகிய புதுமுறைத் தொகுப்புகள்

1. காதல் பாடல்கள்... ... ... ... ரூ. 5–90
2. குயில் பாடல்கள் ... ... ... ... ரூ. 4–90
3. தேனருவி ... ... ... ... ரூ. 4–90
4. ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது! ... ரூ. 4–50
5. நாள் மலர்கள் ... ... ... ... ரூ. 4–50
6. புகழ் மலர்கள் ... ... ... ... ரூ. 4–50
7. வேங்கையே எழுக! ... ... ... ரூ. 4–50
8. தலைமலை கண்ட தேவர் (நாடகங்கள்) ... ரூ. 4–50
9. இரணியன் அல்லது இணையற்ற வீரன் (நாடகம்) ரூ. 3–90
10. தமிழுக்கு அமுதென்று பேர்! ... ... ரூ. 4–50

நூல் ஒவ்வொன்றிலும் பாவேந்தரின் புதல்வர் மன்னர்மன்னன் எழுதிய சுவைமிகு முன்னுரையும், பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகளும், திருஉருவப் படமும் உள்ளன.

**இலவசம்**

*மூன்று நூல்கள் ஒரே தடவையில் வாங்குவோர் பாரதிதாசனின் பெரிய அளவு உருவப்படம் ஒன்றினை இலவசமாகப் பெறுவர்.*

பூம்புகார் பிரசுரம்
109, மன்னார்சாமி கோயில் தெரு
சென்னை-600 013

# புரட்சிக் கவிஞர்

முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ. விசுவநாதம்

உலகத்தில் மதங்கள் பல. அவற்றுள் மிகப்பெரிய மதங்கள் ஒன்பது. இவை இந்து மதம், புத்தமதம், சமண மதம், இஸ்லாம் மதம், பார்ஸிமதம், சைவம், வைணவம், சன்மார்க்கம் எனப்பெறும். இவை ஒன்பதும் நாம் வாழ்கின்ற இதே ஆசியாக் கண்டத்தில் தோன்றியவை. இதனால் இக்கண்டத்தை 'ஞானம் பிறந்த கண்டம்' 'ஞானம் பிறந்த கண்ட'மென நல்லறிஞர்கள் கூறுவதுண்டு. பிற கண்டங்களில் ஞானம் விளையாமல் உப்பே விளைவதனால் அவை **உப்புக் கண்டங்களாகப்** போய்விட்டன. இத்தனை சமயங்களுக்கும் இலக்கியங்களைச் செய்து உலக மொழிகளில் உயர்ந்து நிற்கும் ஒரே மொழி நம் தமிழ் மொழி. பிற மொழிகளில் எதுவும் இப்பெருமையைப் பெறவில்லை.

ஒரு மனிதனும், ஒரு நாடும் வெவ்வேறல்ல. இரண்டும் ஒன்றே. இரண்டையும் ஓவியங்களாக வரைந்து பார்க்கின் இவ்வுண்மை புலப்படும். முடி-காடு, பேன்-விலங்கு, நெற்றி--சமயம், மூளை-மெய்ஞ்ஞானம்-விஞ்ஞானம் மூக்கு-சுகாதாரம், கன்னங்கள்-கலைகள், காதுகள்-ஒற்றர்கள், வாய்-பத்திரிகைகள், பற்கள்-ஆலைகள், கழுத்து-பாதுகாப்பு, கைகள்-தொழில்கள், கால்கள்-போக்குவரத்து, முதுகெலும்பு-வணிகம், வயிறு-விவசாயம், இவற்றுள் நெஞ்சுதான் பண்பாடு.

ஒரு நாட்டின் உறுப்புகளும், ஒரு மனிதனின் உறுப்புகளும் புறக்கண்களால் காணக்கூடியவை. ஒருநாட்டின் பண்பாடும், ஒரு மனிதனின் பண்பாடும் அகக் கண்களால் காணக்கூடியவை. இப்பண்பாட்டை விளக்கி வற்புறுத்திச் செயல்படுத்துவதே நம் தமிழ் இலக்கியங்களின் உயிரோட்டமாகும். இத்தகைய பணியே தமிழகத்துச் சான்றோர்களாகிய தமிழ்ப் பெரும் புலவர்கள், சங்ககாலத்திலும், அதனைத் தொடர்ந்தும் நம் நாட்டில் செய்துகொண்டு வந்திருக்கின்றனர்.

அவர்களின் வழியில், கடந்த நூற்றாண்டிற் பிறந்தவர்களில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், பூவை கல்யாணசுந்தர முதலியார், சோமசுந்தர நாயக்கர், பாம்பன் சுவாமிகள், நா. கதிரைவேல்பிள்ளை, மறைமலை அடிகள், திரு. வி. க., வ. உ. சிதம்பரனார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், தமிழ்க் காசு எம். எல். பிள்ளை முதலியோர் குறிப்பிடத் தக்கவர்.

இவர்களில் நாட்டுக்கும், மொழிக்கும் சமூகத்துக்கும் தொண்டு செய்யக் கருதிக் கவிதைகளைச் செய்து பெரும்பணி புரிந்தவர்கள், தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளையும் ஆவர்.

இப்பரம்பரையில் இக்காலத்தில் தோன்றி மறைந்த ஒரே கவிஞர் புதுவை கனக. சுப்புரத்தினம் ஆவார். இவரது கவிதைகளில் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், சமூகப் பற்றையும் ஒருங்கே காணலாம்.

சமூக சீர்திருத்தத்தில் சாதிகள் ஒழிய, வறுமைகள் ஒழிய, தீண்டாமை அழிய, விதவை மணம் புரிய, பெண்ணுரிமை பேண, கலப்பு மணம் செய்ய, பொருளாதாரம் வளர, தமிழ் மொழியைப் போற்ற புரட்சியைச் செய்த பெருமை இவரையே சாரும். இதனால் இவர் **புரட்சிக் கவிஞர்** என்ற பெயரைப் பெற்றார்.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரிடம் இவருக்குப் பெரு மதிப்பு உண்டு. அவருடைய தொண்டிலும், கவிதையிலும் பெரும்பற்றுக் கொண்டு அவரை ஆசிரியராகவும் கொண்டவர். இதனாலேயே அவர் **பாரதிதாசன்** என்ற பெயரும் பெற்றார்.

இவர் வாழ்ந்த காலத்தில் இவருக்கு ஈடு இணையான கவிதைகளை இயற்றுகின்ற ஆற்றலைப் பெற்ற புலவர்கள் எவரும் தோன்றவில்லை. இவரது பாடல்கள் பல்வேறு சுவைகளையும் ஒருங்கே தருவன.

45 ஆண்டுகளுக்கு முன்பு இவரது பாடல்களைத் திரட்டி 'பாரதிதாசன் கவிதைகள்' என ஒரு நூலை வெளியிடும் தொண்டில் நான் பங்கு பெற்றேன். அதற்கு அவர் மதிப்புரை ஒன்றை வேண்டியபொழுது நான் எழுதித் தந்தது இது:

''கதைக்காக ஒரு முறை, கவிதைக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒரு முறை, இன்பத்துக்காக

ஒருமுறை, அதன் எழிலுக்காக ஒருமுறை, சுவைக்காக ஒருமுறை, சொல்லாட்சிக்காக ஒருமுறை, படித்தேன். அது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு படி-தேன் என ருசித்தது'' என்பதே.

இவரது பரம்பரையாக இன்று தமிழகத்தில் பல இளம் புலவர்கள், கவிஞர்கள் தோன்றியிருக்கின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் 'சுரதா' என்பவர். சு-சுப்பு, ர. ரத்தினம், தா. தாசன், எனத் தன் பெயரிலேயே புரட்சிக் கவிஞரின் பெயரையும் வைத்துக் கொண்டவர்.

இவரைப் போன்ற கவிஞர்கள் ஏராளமானவர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. இத்தகைய கவிஞர்கள் அனைவரையும், பாரதிதாசன் பரம்பரையே எனக் கூறலாம். இத்தகைய பரம்பரை தமிழகத்தில் இன்னும் அதிகமாக வளரவேண்டுமென்பதே என் விருப்பம். வளரும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

இக்காலத்தில் எல்லோரும் கவி பாடலாம் என்றும், அதற்கு இலக்கணமே தேவையில்லை என்றும் ஒரு கருத்துப் பரவி வருகிறது. சில கவியரங்குகளில் பாடப்பெறுகின்ற கவிதைகளில் எதுகையும் மோனையுங்கூடத் தேவையில்லை எனக் கருதுகிறார்கள். இக்கருத்து அறிஞர்களால் ஏற்கக்கூடியதன்று. இத்தகையோர் பாரதிதாசன் கவிதைகளைப் பலமுறை படித்தறிவதன் மூலம் சிறந்த கவிதைகளை இயற்றும் ஆற்றலைப் பெற முடியும். இத்தகையோர்களால் நாடும் சிறக்கும்; மொழியும் வளரும்; மக்களும் நல்வாழ்வு வாழ்வர். பாரதிதாசன் பரம்பரையும் வளரும்.

''கோழியும் தன் குஞ்சுதனைக் கொத்தவரும் வான் பருந்தை சூழ்ந்து எதிர்க்க அஞ்சாத தொல் புலி' எனத் தமிழ் மண்ணின் வீரத்திற்கு உவமை கூறிய ஒரே கவிஞர் பாரதிதாசனார்.

இப்பெரும் புலவர் பெருமகனை நினைந்து தமிழக அரசு தான் நடத்தும் '' தமிழரசு '' இதழைத் தமிழ்ப் புத்தாண்டு இதழாக, தமிழ் வளர்ச்சி இதழாக, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் சிறப்பிதழாக வெளியிட முன் வந்திருப்பது கண்டுபெருமகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டுக்காக, மொழிக்காக, மக்களுக்காக, தமிழ்ப்பண்பாட்டிற்காக, தமிழக அரசினால் வெளி வந்து கொண்டிருக்கின்ற இத் ''தமிழரசு'' இதழ், இன்னும் இதுபோன்ற பல நல்ல தொண்டுகளைச் செய்து சிறப்புற்று விளங்க வேண்டுமென இந்த நல்லநாளில் முழுமனத்துடன் வாழ்த்துகிறேன்.

## கவிஞர் வாழ்வில் ஒரு நிகழ்ச்சி

பிரான்சிலே முயில்பெரி என்பார் குடியரசுத் தலைவராக வந்தார். அவர் ஆட்சிப் பீடம் ஏறிய காலத்தில் கல்வியானது குருமார்கள் கையில் இருந்தது. மத குருமார்கள் கையிலிருந்த கல்வியைப் பிடுங்கி, அரசியலார் நடத்தினால்தான் கல்வி எல்லோருக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும் என்று கருதிய முயில்பெரி, கருதியதைச் செய்து முடித்தார்.

உலகிற்கே வழிகாட்டியாகத் தோன்றிய அந்தத் தலைவராம் முயில்பெரியின் நூற்றாண்டு நினைவுவிழா எங்கணும் கொண்டாடப்பட்டபொழுது, பாண்டிச்சேரியிலும் கொண்டாடப்பட்டது. அவ்விழாவைச் சிறப்புச் செய்ய எண்ணி செய்த பல நிகழ்ச்சிகளில் ஒன்றாக வாழ்த்துப் பாக்கள் பல மொழியிலும் இயற்றச் செய்வது என்ற திட்டத்தைப் போட்டார்கள். அதன்படி தமிழில் வாழ்த்துப் பா புனைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

விழாவில், அழகு செய்யப்பட்ட மண்டபத்தில் ஆளுநரும், அவரது ஆட்சிச் சுற்றமும், நீதிமன்றத் தலைவர்களும், குருமார்களும், பாதிரிமார்களும், பிரெஞ்சு நாட்டு, தமிழ்நாட்டுச் செல்வந்தர்களும், பட்டம் பதவி வகிப்போரும், பாமரரும் குழுமியிருக்கின்றார்கள். நிகழ்ச்சிநிரலின்படி தமிழில் வாழ்த்துப்பா இசைக்கப் புரட்சிக் கவிஞர் அழைக்கப்பட்டார். புரட்சிக் கவிஞர் பாடத் தொடங்கி, ''வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை'' என்று முதலடியை இசைத்தார். அது மொழிபெயர்க்கப் பட்டது. பின் 'வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை, வரவிடவில்லை மதக் குருக்களின் மேடை' என்று இரண்டாவது அடியையும் சேர்த்து இசைத்தார். உடனே பாதிரிமாரின் மலர்ந்த முகமெல்லாம் குவிந்தன. சாந்தம் குடியிருந்த உள்ளத்தில் சினம் குடியேறியது. விழாத் தலைவர் சோர்ந்தாரேனும், அறிவு அவா மேலீட்டால் மற்றப் பகுதியையும் கேட்க வேண்டி 'கோந்தினியே கோந்தினியே' (மேலே தொடங்கு, மேலே தொடங்கு) என்றார். ''வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை, வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை, நறுக்கத் தொலைந்தது அந்த நாட்பட்ட பீடை!'' என்று மூன்றாவது அடியையும் சேர்த்துக் கவிஞர் இசைத்தார்! மொழிபெயர்க்கப்பட்டவுடன் கோணியிருந்த முகமெல்லாம் முற்றுங் கோணலாயின. தலைவர் மீண்டும் வாட்டமுற்றாரேனும், மேலும் அறிய 'கோந்தினியே' என்றார். ''வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை, நறுக்கத் தொலைந்தது அந்த நாட்பட்ட பீடை, நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை!'' என்று நான்காவது அடியையும் சேர்த்து இசைத்தார் கவிஞர்.

மொழிபெயர்ப்பினைக் கேட்டார் தலைவர். சுருங்கிய முகம் மலரத் துள்ளி எழுந்து சில சொன்னார். ''அதுதான்! அதுதான்! இந்தப் புலவன் சொல்லியதுதான்! குருமார்களிடத்தே முடங்கிக் கிடந்த கல்வியை நாடெல்லாம் நீர்போலப் பரப்பினான் முயில்பெரி. அதைத்தான் இந்தப் புலவன் சொல்கிறான். இவன்தான் புலவன். மற்றையோரெல்லாம் புலவராக மாட்டார்!'' என்பது மகிழ்ச்சியினால் எழுச்சியுற்று அத்தலைவர் கூறிய கூற்று. அன்று முதல் அந்தத் தலைவரின் மதிப்பிற்குரிய கவியாகவும் உற்ற நண்பராகவும் கவிஞர் விளங்கினார்.

**''புரட்சிக் கவிஞர்'' என்னும் தொகுப்பில்**

**—நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்.**

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

எடுப்பான தோற்றம் — மிடுக்கான நடை — பரந்த முகம் — விரிந்த நெற்றி — அடர்ந்தெழுந்த மீசை — தூக்கிப் பின்னோக்கி வாரி விடப்பட்ட கன்னங்கறுத்த தலைமயிர் — அகன்ற கண்கள் — குறுகுறுத்த பார்வை — முகத்திற்குப் பொலிவூட்டும் மூக்கு — மயிரடர்ந்த புருவம் — மூக்கின் மேலே கண்ணாடி — கறுத்த மேனி — மடித்துக் கட்டப்பட்ட வேட்டி — நீண்டு தொங்கும் முழுக் கைச் சட்டை — மார்பிலே குறுக்கே போர்த்தப் பட்ட பொடி நிறப் போர்வை — காலிலே தொடு தோல் — கையிலே புகைந்து கொண்டிருக்கும் சுருட்டு!

இந்தத் தோற்றப் பொலிவோடு மனக்கண் முன் தோன்றிப் பூரிப்பும், பெருமையும், பெருமிதமும் அளிப்பவர்தாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆவார்கள்.

தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பரம்பரையிலே தோன்றி, இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெரும் புரட்சிக் கவிஞராய்த் திகழ்ந்தவர்தாம் பாரதிதாசன். தமிழால் அவர் புகழ் பெற்றார்; அவரால் தமிழ் பொலிவு பெற்றது. புரட்சிக் கவிஞர் அவர்களது கவிதைகளிலே புரட்சி வாடை வீசும்; கருத்துக் கொண்டல் திகழும்; வீரக் கோடை அடிக்கும்; ஈரத் தென்றல் தவழும்; அழகு மின்னல் பாயும்; கொடுமையை எதிர்க்கும் இடி முழங்கும்; சொல்லருவி வீழும்; பொருளாறு பாயும்; அணிநய மலர்கள் பூக்கும்; கொள்கை மணங்கமழும்; உண்மை ஒளி வீசும்; புகழிசை எழுப்பும்; செந்தமிழ்த் தேன் தித்திக்கும்.

'புரட்சிக் கவிஞர்' என்று இன்று நாவார அழைக்கப்படுபவர் முன்பு 'பாரதிதாசன்' என்று குறிப்பிடப்பட்டார்; முன்பு பாரதிதாசன் என்று குறிப்பிடப்பட்டவர் அதற்கும் முன்பு கனகசுப்புரத்தினம் என்று விளிக்கப்பட்டார்.

சுப்புரத்தினம் அவர்கள் புதுவையில் பெருவணிகராக விளங்கிய திரு. கனகசபை என்பார்க்கும், திருமதி மகாலட்சுமி அம்மையாருக்கும் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 29ஆம் நாள் திருமகனாகப் பிறந்தார். சுப்புரத்தினம் என்பது பாரதிதாசனார் அவர்களுக்கு, அவருடைய தாய் தந்தையர் வைத்த இயற்பெயராகும். சுப்புரத்தினத்திற்கு இளமையிலேயே நல்ல தமிழார்வமும் இயல்—இசை—கூத்து ஆகியவற்றிலே நல்ல விருப்பமேலீடும் இருந்து வந்தன. அவர், புதுவையில் பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்டார் என்றாலும் அவருக்குத் தமிழ் மொழியினிடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் இருந்து வந்ததால் தக்க புலவர்களிடத்திலே முறைப்படி முத்தமிழைப் பயிலுவதிலே மிகவும் நாட்டங் கொண்டார். ஆர்வத்தோடு தமிழ்க் கல்வி பயின்றார். தமது பதினேழாவது வயதில், அதாவது 1908ஆம் ஆண்டில் புதுவைக் கால்வே கல்லூரியில் நடந்த புலவர் வகுப்புத் தேர்வில், கல்லூரியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அப்பொழுது புதுவையை ஆண்டு வந்த பிரெஞ்சு அரசு அவருக்குத் தமிழாசிரியர் வேலை கொடுத்து, காரைக்காலுக்கு அருகிலுள்ள நிரவி என்ற ஊருக்கு அவரை அனுப்பி வைத்து, அங்கே ஆசிரியர் பணி ஆற்றும்படி செய்தது. அப்பொழுது அவருக்குக் கிடைத்து வந்த ஊதியம் முப்பது ரூபாய்கள். நாளடைவில் அவர் கால்வே கல்லூரிக்கே தமிழ்ப் பேராசிரியராக வந்தார்.

புலவர் சுப்புரத்தினம் அவர்கள் பாரதியாரிடத்தில் அளவு கடந்த பற்றும், மதிப்பும், நட்பும் கொண்டிருந்தார். பாரதியார் அவர்கள் புதுவையைப் புகலிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த காலத்தில், அவரோடு பத்து ஆண்டுக் காலம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு சுப்புரத்தினத்தாருக்கு ஏற்பட்டது. பாரதியாரின் தேசியப் பாடல்களும் நாட்டுவிடுதலைக் கொள்கையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களும் சுப்புரத்தினத்தாரைப் பெரிதும் கவர்ந்தன. புதுவையில், நண்பர் ஒருவரின் திருமண வீட்டிற்குப் போயிருந்த சுப்புரத்தினம் அவர்கள், பகல் விருந்து முடிந்தவுடன், நண்பர்கள் புடை சூழ உட்கார்ந்து, பாரதியாரின் நாட்டியல்

பாடல் ஒன்றைத் தமக்கே உரிய வீரங் கலந்த எடுப்பான இசையில், உரக்கப் பாடி அங்கே வீற்றிருந்தோர் அனைவரையும் மகிழ்வித்துக் கொண்டு இருந்தார். அந்தத் திருமண வீட்டிற்குப் பாரதியாரும் வந்திருந்தார். அவர் தாம் பாரதியார் என்பதைச் சுப்புரத்தினம் அறியார். அதுவரையில் சுப்புரத்தினம் அவர்கள் பாரதியாரின் பாடல்களை அறிவாரேயல்லாமல், அவரை நேரில் கண்டறியார். பாரதியார், சுப்புரத்தினம் பாடுவதைக் கேட்டுத் தாளம் போட்டுச் செவியாரச் சுவைத்து மகிழ்ந்து கொண்டிருந்தார். பாரதியார், சுப்புரத்தினத்தின் பாடுந் திறனையும், கவிதைகளிலே கொண்டுள்ள ஈடுபாட்டினையும் வியந்து பாராட்டினுர். அது முதல் இருவரும் ஒருவர்க்கொருவர் அறிமுகமாயினர்.

புதுவையில் பாரதியாரோடு மிக நெருங்கிப் பழகியவர்களிலே சுப்புரத்தினம் தலைசிறந்தவராவார். புலவர் சுப்புரத்தினம், பாரதியார் அவர்களைத் தமக்குரிய சிறந்த நண்பராகவும், வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் கொண்டிருந்தார். சுப்புரத்தினத்திற்குள்ள நல்ல தமிழார்வத்தையும், மொழிப் பற்றையும், இயல்—இசை—கூத்துக்களிலே உள்ள ஈடுபாட்டையும், கவிதை புனையும் திறனையும், புதுமை வேட்கையையும் பாரதியார் நன்கு அறிந்திருந்தார்.

ஒருபொழுது பாரதியாரோடு உரையாடிக் கொண்டிருந்த நண்பர்கள் சிலர், சுப்புரத்தினத்தின் புலமையைப்பற்றி ஐயப்பாடு கொண்டு ஏதேதோ புகன்றனர். அதைக் கேட்ட பாரதியாருக்கு அடங்காத சினம் பீரிட்டு எழுந்தது. ''சுப்புரத்தினம் சிறந்த கவி எழுதக் கூடியவன். தெரியுமா உங்களுக்கு?'' என்று அதட்டிக் கேட்டார். அதற்கு எதிர்ப்பான முறையில் அவர்கள், 'பாடச் சொல்லுங்கள் பார்ப்போம்!' என்று கடாவினுர்கள். உடனே பாரதியார் சுப்புரத்தினத்தை அழைத்து வரச் சொல்லி, ''பாடு ஒரு பாட்டு!'' என்ருர். உடனே அவர் ''எங்கெங்குக் காணினும் சக்தியடா'' என்று தொடங்கும் பாட்டை இரண்டடி—16 வரிகளாகப் பாடிக் காட்டினுர். அதிலே அழகு, ஆற்றல், இனிமை, பொருள், நயம் எல்லாம் சிறந்து விளங்குவதைக் கண்டு அனைவரும் அவரைப் பாராட்டினர்.

சுப்புரத்தினம் பாரதியார் முன்னிலையில் முதன் முதலில் பாடிய அந்தக் கவிதையைப் பாரதியாரே தம் கையால் எழுதி, அதன் தலைப்பில், 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக-சுப்புரத்தினம் எழுதியது' என்று எழுதிச் 'சுதேசமித்திரன்' செய்தித் தாளுக்கு அனுப்பினுர். 'சுப்புரத்தினம் ஒரு கவி' என்று பாரதியார் அடிக்கடி எல்லோரிடத்திலும் சொல்லுவதுண்டு. இத்தகைய மதிப்பைப் பாரதியாரிடம் வேறு யாரும் பெற்றதில்லை.

சுப்புரத்தினம் அவர்கள் சுப்பிரமணிய பாரதியாரிடம் கொண்டிருந்த அளவு கடந்த பற்றின் காரணமாகவும், மதிப்பின் காரணமாகவும் தம் பெயரைப் பாரதிக்குத் தாசன் என்று பொருள் படும்படி 'பாரதிதாசன்' என்று மாற்றி அமைத்துக் கொண்டார். இறுதி வரையில் அவர் 'பாரதிதாசன்' என்றே கையெழுத்துப் போட்டு வந்தார்.

தமிழையும் பாரதியாரையும் போற்றிப் பாராட்டிப் பெருமைப்படுவதிலே பாரதிதாசன் தனி இன்பங் கண்டார். பாரதிதாசன், பாரதியாரைப்பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் அவர்பால் தாம் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் வெளிப்பட நன்றியுணர்வோடு புகல்வார். பாரதியாரைப்பற்றிக் குறிப்பிட வந்த பாரதிதாசன்,

''தமிழகம், தமிழுக்குத் தகும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினுன்''.

என்று தமிழையும், பாரதியையும் நன்கு இணைத்து அழகுற மொழிகிருர்.

பாரதியாரைப்பற்றிப் பாரதிதாசன் புகழ்ந்து பாடியிருப்பதைப்போல், வேறு யாரேனும் அவ்வளவு அருமையாகப் பாட முடியுமா என்று கண்டறிவது அரிதேயாகும். பாரதிதாசனுரின் உள்ளத்தில் பாரதியார் எப்படிப்பட்ட இடத்தைப் பெற்றிருந்தார் என்பதை,

''பைந்தமிழ்த் தேர்ப் பாகன்; அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றும் கவிதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைமருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்''

என்ற சொல்லோவியத்தால் தெள்ளிதின் அறியலாம்.

பாரதியாருக்கும் பாரதிதாசனுருக்கும் பல வகைகளிலே ஒற்றுமை உண்டு. பண்புகளும் பழக்க வழக்கங்களும் இருவரிடத்திலும் பெரும்பாலும் ஒரே தன்மையனவாகவே காணப்படும். பாரதியாருக்கு எப்படித் தமிழினிடத்திலே தணியாத காதல் உண்டோ அப்படியே பாரதிதாசனுருக்கும் உண்டு. பாரதியார் எவ்வாறு மறவனைப் போல் தோற்றமளிப்பாரோ, அவ்வாறே பாரதிதாசனுரும் தோற்றம் அளிப்பார். பாரதியார் எப்படிக் குனியாமல், கூனுமல் வணங்காமுடிபோல் தலைநிமிர்ந்து நடப்பாரோ, அப்படியே பாரதிதாசனுரும் தலை நிமிர்ந்தே நடப்பார். பாரதியார் எவ்வாறு யாருக்கும் அஞ்சாமல், எதற்கும் அஞ்சாமல் வாழ்ந்தாரோ அவ்வாறே பாரதிதாசனுரும் அஞ்சாமல் வாழ்ந்தார். பாரதியார் எப்படித் தம்மோடு மாறுபட்டு எதிர்ப்பவரைக் கடுமொழியில் வெஞ்சினங் கொண்டு எதிர்ப்பாரோ, அப்படியே பாரதிதாசனுரும் வெஞ்சினங் கொண்டு எதிர்ப்பார். பாரதியார் எவ்வாறு இயல், இசை, கூத்து என்னும் முத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தாரோ, அவ்வாறே பாரதிதாசனுரும் ஈடுபாடு கொண்டிருந்தார். பாரதியார் எப்படி விடுதலை வேட்கையும்,

புதுமை வேட்கையும், சீர்திருத்த நோக்கமும் கொண்டிருந்தாரோ, அப்படியே பாரதிதாசனாரும் அவற்றிலே பேரார்வங் கொண்டிருந்தார். பாரதியார் எவ்வாறு கிடைத்ததையெல்லாம் செலவழித்து விட்டு வறுமையிலேயே வாழ்வை முடித்தாரோ, அவ்வாறே பாரதிதாசனாரும் வறுமையிலேயே வாழ்வை முடித்தார். இந்த நூற்றாண்டில் தமிழகத்தில் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த கவிஞர்கள் பாரதியாரையும், பாரதிதாசனாரையும் தவிர வேறு யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

பாரதிதாசன் தமது முப்பதாவது வயதில்தான் திருமணம் செய்து கொண்டார். 1921ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பட்டாம்பாக்கம் என்னும் ஊரைச் சேர்ந்த பரதேசி -காமாட்சி என்பாரின் திருமகளார் பழநியம்மாளைத் தம் இல்வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றுக் கொண்டார். அந்த அம்மையார் அன்பும், பண்பும் ஒருங்கே அமையப் பெற்றுக் கணவரின் மனம் கோணாமல், அவர் விருப்பத்திற்கிணங்க ஒழுகி வந்தார்கள். பாரதிதாசனின் பண்புகளை அறிந்து அவற்றிற்கேற்ப நடப்பதில் அந்த அம்மையார் மிகவும் தேர்ந்திருந்தார்கள். பாரதிதாசனாரும் அந்த அம்மையாரிடத்தில் பேரன்பு பூண்டிருந்தார். அவருக்கு ஓர் ஆண் மகனும் மூன்று பெண் மக்களும் உண்டு.

பாரதிதாசன் அவர்கள் சுப்புரத்தினமாகக் [illegible]க்கூபோது சமயப் பற்றும், கடவுட் காட்சியள[illegible] [illegible]ரர். அந்தக் காலத்தில் பற்றும் கொண்டு விளங்கு[illegible] [illegible]ன் மீது, தான், மைலம் சுப்பிரமணியக் கட[illegible] 'சுப்பிரமணியர் துதியமுது' என்ற அழகும் அருமையும் சொட்டும் தீந்தமிழ் நூல் ஒன்றினை இயற்றிச் சமயத் தொண்டர்களை மகிழ்வித்தார். அவர் பாரதியாரோடு ஈடுபாடு கொண்டிருந்த காலத்தில் தேசீயப் பாடல்கள் பல இயற்றினார். அவர் இயற்றிய கதர்ப்பாட்டு, சமத்துவப் பாட்டு போன்றவை தேசிய வளர்ச்சியையும், எழுச்சியையும் சிறப்பாக ஊட்டுவனவாகும். தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றிப் பகுத்தறிவு நெறிக் கருத்துக்கள் பரவத் தொடங்கிய காலத்தில் பாரதிதாசனாரின் உள்ளம் அந்தக் கருத்துக்களிலே ஆழப் பதிந்தது. அவர், கவிதைகளின் மூலம் சமுதாயத்திலே நிலவி வந்த குருட்டு நம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் அழுத்தந் திருத்தமாகக் கண்டித்தொதுக்கி, பகுத்தறிவு நெறிக் கருத்துக்களை மிகத் தீவிரமாகப் பரப்பத் தொடங்கினார். அவர் அரசியலிலே விடுதலை வேண்டும், சமூகவியலிலே சமத்துவம் வேண்டும், பொருளியலிலே சமதர்மம் வேண்டும் என்று முழங்கினார். புரட்சிகரமான கருத்துக்களை அஞ்சாநெஞ்சுடன் அவர் எடுத்துரைக்க முன்வந்த இந்தக் காலத்தில் தான் அவரைப் 'புரட்சிக் கவிஞர்' என்று அடைமொழி கொடுத்து மக்கள் அழைக்கலாயினர். பின்னர் அவர் திராவிடத்தின் உரிமைகளுக்காகப் பாடுபடத் தோன்றிய திராவிட இயக்கங்களில் பங்கு கொண்டு உரிமை வேட்கை—விடுதலை வேட்கைப் பாடல்கள் பல இயற்றினார்.

புரட்சிக் கவிஞர் அவர்கள் தமிழினிடத்தில் காட்டியிருக்கும் அன்பையும், ஆர்வத்தையும், பற்றையும், மதிப்பையும் அவ்வளவு அழகாக—அருமையாக—நேர்த்தியாகக்—கவர்ச்சிகரமாக— இனிமையாக—உணர்ச்சிமயமாக—எழுச்சிமயமாக —ஏற்றமாக—உயர்வாகச்—சிறப்பாக எடுத்துக்காட்டியவர் அண்மைக் காலங்களில் வேறு யாரும் இல்லை.

''நல்லுயிர், உடம்பு, செந்தமிழ் மூன்றும்
நான், நான், நான்''

என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார்.

தமிழ்ப் பற்று அவர் உள்ளத்தில் எந்த அளவுக்கு ஊற்றெடுத்துப் பொங்கி வழிந்து கரை புரண்டு ஓடிற்று என்பதை,

''கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்''

என்றும்,

''செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகுமென் வாழ்வு!

என்றும்,

''தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும் விடேன்''

என்றும்,

''தமிழுக்கும் அமுதென்று பேர்!—அந்தத்
தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்''

என்றும்,

''தமிழுக்கு மணமென்று பேர்!—இன்பத்
தமிழ் எங்க[illegible] வாழ்வுக்கு நிருமித்த ஊர்''

என்றும்,

''தமிழ் எங்கள் இளமைக்குப் பால்!—இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!''

என்றும்,

''தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண

## ஆசிரியரும்—மாணவரும்

பைந்தமிழ்ப் புலமை சான்ற நாமணக்கும் நாவலர், மகாவித்துவான் பு. அ. பெரியசாமிப் பிள்ளை ஆவார். புதுவைப் புகழ் மணிகளில் ஒருவரான இவர், தமக்குப் பின் சீரிய நல் வாரிசுகளை உருவாக்கிய வண்டமிழ்க் கவிஞர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் ஆசிரியர் இவர்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மரபு வழிக் கவிதை மன்னனாகப் பக்திப் பாடல்களை நினைத்த மாத்திரத்திலேயே இயற்றும் பாவலனாகக் கொடிகட்டி வாழ்ந்தவர் பெரியசாமிப் பிள்ளை.

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே அற்புதமான ஓர் ஒற்றுமை உள்ளது. பாவேந்தர் ஏப்ரல் திங்களில் பிறந்தார்; ஏப்ரல் திங்களிலேயே மறைந்தார். பாவேந்தரின் ஆசிரியர் பெரியசாமிப் பிள்ளையும் தைத் திங்களிலேயே பிறந்து, தைத் திங்களிலேயே மறைந்தார்.

**SIEMENS**

## மோட்டார், பம்ப், ஸ்விட்ச், ஸ்டார்ட்டர் கேபிள் தன்னை இணைத்திடுவீர், பஞ்சரத்தினம் இணைந்த ஸீமென்ஸ் பம்ப்ஸெட் பொருத்தி மகிழ்ந்திடுவீர்!



பஞ்சரத்தினங்கள் வீட்டில் மகிழ்ச்சிபொங்க வைப்பது போல் ஸீமென்ஸ் பம்ப்செட்டின் ஐந்து உறுப்புகளும் வயல்களில் பசுமை பொங்க வைக்கின்றன. இந்த உறுப்புகள் இந்திய நிலவரத்தை மனதில் கொண்டு ஜெர்மன் டிசைன்களின்படி உருவாக்கப் பட்டவை. அதனால் இவை ஒன்றாக இணைந்து பல வருடங்கள் நல்ல உழைப்பைத் தருகின்றன.

- ஸீமென்ஸ் பம்ப் ஸெட்டைப் பெற பாங்குகளும் மற்ற சர்க்கார் நிறுவனங்களும் எளிதில் கடன் கொடுக்கின்றன
- ஸீமென்ஸ், அவர்களுடைய விற்பனையாளர்களின் எலெக்ட்ரீஷியன்களுக்கு பம்ப் ஸெட்டைப் பொருத்துவது, ஸர்விஸிங் மற்றும் ரிப்பேர் செய்வது பற்றிய முழுமையான பயிற்சி அளிக்கின்றனர்.
- விற்பனைக்குப் பிறகான சேவைக்கும், ஸ்பேர் பார்ட்டுகளுக்கும் அருகாமையிலுள்ள ஸீமென்ஸ் விற்பனையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பம்ப் செட்டின் எல்லா பாகங்களுக்கும் —ஸீமென்ஸ்**

**ஸீமென்ஸ் இந்தியா லிட்.**

பம்பாய . கல்கத்தா . சென்னை
புது டில்லி . அகமதாபாத்
பெங்களூர் ஹைதராபாத் லக்னோ

இப்புவி அவாவிற் றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து
பாயுநாள் எந்த நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கே?''

என்றும்,

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு''

என்றும்,

''மங்கையொருத்தி தரும் சுகமும் எங்கள்
மாத்தமிழுக் கீடில்லை என்றுரைப்போம்''

என்று வரும் கவிதைகளின் மூலம் நன்கு அறிந்து இன்புறலாம். இவை அவர் வடித்திறக்கிய செந்தமிழ்த் தேம்பாகு வெள்ளத்தில் ஒரு சில சொட்டுக்களேயாகும்.

தமிழும், தமிழரும், தமிழ்நாடும், தமிழ்நாட்டோடு ஒட்டிய தென்னாடும் உரிய வாழ்வினைப் பெறாமல், பலவகையானும் புறக்கணிக்கப்பட்டுச் சீர்குலைந்த நிலையில் தள்ளப்பட்டிருந்த தன்மையை எண்ணி எண்ணிப் புரட்சிக் கவிஞர் மனம் புழுங்கினார். இனிய செந்தமிழ் மணம் வீட்டிலும், நாட்டிலும், ஏட்டிலும் கமழ வேண்டும்; ஆட்சித் துறையினும், பள்ளியின் பயிற்சித் துறையினும், கலைத் துறையிலும், வாணிகத் துறையிலும், வழிபாட்டுத் துறையிலும், அறிவியல் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், நிதித் துறையிலும், நீதிமன்றத் துறையிலும், பொதுத் துறையிலும் செந்தமிழ் ஏற்றம் பெற வேண்டும்; தனித் தமிழ் நூல்கள் எங்கும், எல்லாத் துறைகளிலும், எல்லா வகையிலும் பல்கிட வேண்டும்; தமிழர் யாருக்கும் அடிமையாகாமல், அரசியல்-பொருளாதாரச் சமூகத் துறைகளில் எல்லா வகை உரிமைகளையும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ வேண்டும்; தமிழ்நாடும் தென்னாடும், தமக்குரிய தனிச் சிறப்பியல்புகள் அனைத்தும் கெடா வண்ணம், அவற்றைப் போற்றிக் காப்பாற்றி, வளர்த்துச் செழித்தோங்கும் வண்ணம் செய்யும் உரிமை வாழ்வு பெறவேண்டுமென்று எண்ணினார்; வீறிட்டெழுந்தார்; உள்ளத்தின் உவப்பெடுத்த கவிதை மழையைப் பொழிந்தார்.

''என்தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்;
என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்கிடுதல் காண்பேன்; தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மதிலே''

என்று துடிதுடிக்கின்றார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், தாயகத்திற்கும் பாடுபடுவதைத் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அதனை,

''எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநா ளாகும்''

என்ற கூற்றினால் தெளிவுபடுத்துகிறார். தம்மைப் போலவே பிறரையும் ஊக்குவிக்க வேண்டும் என்று விரும்புகிறார். தம்மோடு பணியாற்ற எல்லோரையும் அழைப்பவர்,

''செந்தமிழ்ச் சொல்லால் செயலால்
தடம்பெருந்தோளால் தொடங்குக பணியை''

என்று கூறுகிறார் புரட்சிக் கவிஞர்.

புரட்சிக் கவிஞர் தம் சிந்தை—சொல்—செயல் எல்லாவற்றிலும் தமிழையே கொண்டிருந்தார். தமிழோடு ஒன்றிப்போய் இருந்தார். தமக்கும், தமிழுக்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருந்தது என்பதை அழகான உவமைகளால் எடுத்தியம்பினார்.

''வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர்வாளும் போலே
வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ''

இந்தப் பாட்டு இசையிலே மிதந்து வந்து, செவி புகுந்து, நம் இதயத்தைத் தொடும்போது, சிந்தையெல்லாம் குளிரும், உடலெல்லாம் சிலிர்க்கும்.

தமிழுக்குத் தொண்டு செய்வதை ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்றும், தமிழுக்குத் தொண்டு செய்வதால், புகழும், பெருமையும் ஏற்படும் என்றும் கூற வந்தவர்,

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை''

என்கிறார்.

தமிழுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டு விட்டதென்றால், அதனைக் கேள்வியுற்ற அளவானே இளைஞர் கூட்டம் வீறிட்டெழ வேண்டும்; அவர்கள் நரம்பெல்லாம் இரும்பாக வேண்டும்; அவர்தம் நனவெல்லாம் உணர்வாக வேண்டும் என்று முழங்குகிறார்.

''உரம்பெய்த செந்தமிழ்க்(கு) ஒன்றிங்கு
நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்,
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்
உணர்வாகி நண்ணி டாரோ''

இந்த வரிகள் நலிந்த நெஞ்சினரையெல்லாம் மறநெஞ்சினராக மாற்றும் பெற்றி வாய்ந்தனவாகும்.

—1968ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டு மலரில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி.

# கடும்புயலில் ஒரு கவிதைக் குயில்!



புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் மகனார் மன்னர் மன்னன்

**ப**தினெட்டு வயது நிறைந்திருந்த மாணவன் நான் அப்போது!

அறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று முயன்று தமிழ்ப் பெருங்குடி மக்கள் சார்பில் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கப் போகும் திருநாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

பைகிராப்ட்ஸ் சாலை—இப்போது பாரதியார் சாலை என்றழைக்கப்படுகிறது. அந்த அகன்ற வீதியிலே நெடிதுயர்ந்த 581 எண் கட்டடத்தில் இரவு பகலாக அன்பர்கள் கூடி அலுவல் புரிகின்றார்கள்.

விழாவையொட்டி மலர்ஒன்றை வெளியிடும் வேலையில் மிக ஊக்கமாக இறங்கியிருக்கும் சலகண்டபுரம் ப. கண்ணன் அவர்கள், புரட்சிக் கவிஞர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுக்க நினைத்து அவரை அணுகுகிறார்.

முற்காலமாயிருந்தால் தேவியின் அருள் என்றோ, திருமுருகனின் கருணை என்றோ தொடங்கி விடலாம். குலப் பெருமை, குடிப் பெருமை, இப்படியாக வளர்ந்து விடலாம் அந்நாளைய வரலாறு.

தேய்ந்த அந்தப் பாட்டையிலே செல்ல மறுக்கும் தெளிவு பெற்றவர்கள் அல்லவா கூடியிருக்கிறார்கள்!

புரட்சிக் கவிஞர் நினைவுகளைக் கூறுகிறார்; எழுத வேண்டுமே! அங்கங்கே கண்ணனின் கைநின்று போகிறது; பார்வையில் வியப்பு! கண்ணில் பனிக்கிறது சில சமயம் வருத்தம்.

அமர்ந்திருப்போர் எல்லோருமே அச்சடித்த ஓவியங்களாகி விடுகிறார்கள் சில நேரத்தில்!

அப்பாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஒருசேரக் கேட்கும் முதல் வாய்ப்பு எனக்கு அன்றுதான் கிடைக்கிறது.

பலமுறைகள் கேட்டுக் கேட்டு ஒருவாறாக மறுநாள் எழுத்தில் வடிக்கிறார் ப. கண்ணன் அவர்கள்.

இன்று நம்மிடையே, சொற்சித்திரம் புனைந்த கண்ணனும் இல்லை. சித்திரத்துக்கு உரிய செம்மல்-எந்தையாரும் இல்லை!

ஆனால்.....?

அச்சில் வந்த அந்தக்கட்டுரைப் பகுதி நமக்குக் கிடைக்கிறது.

ஒருபகுதி, இதோ தருகிறேன்:

"ஒரு நாள் இரவு பத்துமணி. பெருங்காற்றும் மழையும் ஆரம்பித்தன. ஆலங்குப்பம் வைத்திலிங்கம், புதுவை கல்வே கல்லூரி "அட்டெண்டர்" வேலாயுதம் இவர்களோடு கவிஞர் ஆலங்குப்பம் பாடசாலைக் கட்டடம் ஒன்றில் இருக்கிறார். காற்றும் மழையும் பலத்து, 'கட்டடமும் சுவரோடு பறக்கும்' என்ற நிலை வருகிறது.

சிறிது தொலைவிலுள்ள கோயில் கட்டடத்திற்குப் போய் உயிர் தப்பலாமென்று மூவரும் தோளோடு தோள் பின்னியபடி வெளியே வருகின்றனர். காற்று மூவரையும் தூக்கித் தூக்கி எறிகிறது. சிறிது நேரத்தில் வெள்ளம் அலைமோதும் ஆழ்ந்த கழனியில் மூவரும் கிடக்கிறார்கள். வீசியெறிந்த குறுந்தடிபோல், பனை மரங்கள் பெயர்ந்து சுழன்று பறக்கின்றன. இன்ன திசையில் இன்ன இடத்தில் இருக்கிறோம் என்ற உணர்வே யாருக்கும் இல்லை. காரிருள்; காற்றின் கோரமும் மழையும் தணியவில்லை. கவிஞர் திசை கண்டுபிடிக்கிறார்.

அந்த நிலையில் ?

''மூச்சுத் திணறி, பேச்சற்றிருக்கும் இருதலைகளைத் தொடையிலும், வயிற்றிலுமாக வைத்து அணைத்துக் கொண்டு முதுகினால், காற்றிலிருந்து அவர்களைக் காத்த வண்ணம் இடையிடையே தோன்றுகின்ற மின்னலில் சிறிது தலை தூக்கிப் பார்த்து இமைப்போதில் கவிழ்த்துக் கொள்கிறார்......''

உடல் வளமுள்ள வைத்திலிங்கத்தையும் விச்சுளி வேலாயுதத்தையும் தாங்கிப் பிடித்தணைத்தபடி கோயிலின் திக்கு நோக்கி நடக்க நினைக்கிறார் கவிஞர்...... நடக்கிறார், கைப்பிடிச்சுவர் இல்லாத வயற் கிணறு, அதில் வீழ்கிறார். தப்புகிறார்......

இருவரையும் மீட்டு அழைத்து வந்து அவரவர் வீட்டில் சேர்த்து விட்ட கவிஞரின் நிலை என்ன?

படியுங்கள், கட்டுரை தொடர்கிறது:

''கட்டிலில் படுத்தார். பெருங் காய்ச்சலோடு தூக்கத்தில் ஆழ்ந்தார். நோயறியாத கவிஞரின் உடல், உட்புகுந்த எண்ணிறந்த முட்களின் உபாதையால் துடித்துக் கொண்டிருந்தது. வீட்டார் எல்லோரும் அழுது விட்டனர்.

சில நாட்களுக்குப் பிறகு ஆலங்குப்பத்தார் வாயிலாக இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்றார் பாரதியார்.

கவிஞரை அழைத்துக்கொண்டு அரவிந்தரிடம் சென்று, நடந்த செய்தியை விளக்கிச் சொன்னார். பொறுமையோடு கேட்டிருந்த அரவிந்தர் ஆங்கிலத்தில் சொல்லுகிறார். பாரதியார் அதைத் தமிழ்ப்படுத்துகிறார். ''மனிதனுடைய சொந்த நினைவையும் செயலையும் வாயில் போட்டுக் கொண்ட கோரமான காற்றும் மழையும் கடும் போர் புரியும் உக்கிரத்திலும் உன் அன்பர்களைக் காப்பாற்றினாய்; இந்த எண்ணமும் செயலும் அருமையானவை! இன்றைய நாட்டு வாலிபர்களுக்கு இந்தப் பிறர் நலம் நாடும் பெருங்குணம் வேண்டற்பாலது.''

அந்தப் பெருங்காற்றும் மழையும் புதுவைப் பகுதிகளில் விளைத்த சேதங்கள் பற்றி பாரதியார் பத்திரிகைகட்குப் பல கட்டுரைகள் எழுதினார்.....!''

''புயற் காற்றுச் சூறை தன்னில் திமு திமென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்தி.''

27-11-1916 நாளிட்ட ''சுதேசமித்திரன்'' நாளேட்டில் பாரதியாரால் அவலக் காட்சியாக வருணிக்கப்பட்டது. நள ஆண்டு கார்த்திகைத் திங்கள் எட்டாம் நாள் இரவு வீசிய புயற்காற்று எப்படிப்பட்டது? பாரதியார் எழுத்தோவியம் இதோ:

''கார்த்திகை மாதம் 9ந் தேதி வியாழக்கிழமை நல்ல பொழுது விடிந்தது. புயற்காற்று நின்றது. ஊர்க்காரர் வெளியேறி வீதிக்கு வந்தார்கள். புதுச்சேரிப் பட்டணத்தை நேற்றுப் பார்த்த கண்ணுக்கு இன்று அடையாளம் தெரிய இடம் இல்லை. தெருவெல்லாம் ஒடிந்த மரங்கள். தென்னையும் பூவரசும் வீதிகளில் அதிகம்; நூற்றில் எண்பது முறிந்து கிடந்தன''

பாரதி மிக விரிவாக எழுதியுள்ள செய்திக்கட்டுரை, புதுவை நகர் படுநாசமானதாக விவரம் தருகிறது. அப்போது 25 வயதுள்ள சுப்புரத்தினம் என்ற பாரதிதாசன், ஏழைத் தமிழாசிரியர், இளமை கொழிக்கும் பருவம்! உடன் வந்த நண்பர்களைத் தம் உடல் வலிமையால், உள்ளத்திண்மையின் உந்துதலால் காப்பாற்றினார்.

பாரதியின் புதல்வியான, தங்கம்மா பாரதி, நான் இப்போது எழுதுவது போலவே, இந்த நள ஆண்டு புயல் பற்றிக் குறித்து வைத்திருக்கிறார், 'பாரதி தமிழ்' எனும் நூலில்,.

அதில் ஓர் இடம்:

''நண்பர் ஒருவர் ஓடிவந்து, ''சுப்புரத்தினம் சமாசாரம் கேள்விப்பட்டீர்களா?'' என்றார். ''இல்லையே'' என்றார் தந்தை. அவர் சொல்லு முன்பாகவே, சுப்புரத்தினம் (இப்போது பாரதிதாசன் என்ற பெயரில் இருக்கிறார்) வந்து விட்டார்.

''சுப்புரத்தினம், என்னப்பா நடந்தது?'' என்று தந்தை கேட்டார்.

''நான் என் கிராமத் தெருத் திண்ணையில் படுத்துக் கொண்டிருந்தேன். காற்றடிக்க ஆரம்பித்தது. உடனே மழையும் கொட்ட ஆரம்பித்தது. நான் உள்ளே போவதற்காக எழுந்தேன். பத்துப் பேர் சேர்ந்து என்னைப் பிடித்திழுப்பதுபோல் தோன்றிற்று. அவ்வளவுதான்.

நான் திமிறிக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே போவதற்காக எழுந்தேன். எனக்கு என்ன நடக்கிறதென்றே தெரியாதபடி என்னைப் பந்தைப்போல் தூக்கி வீசிற்று காற்று. ஒரு தடவை வயல்வெளியில் போட்டது. அங்கிருந்து தூக்கிக் களிமண்ணில் போட்டுப் புரட்டி எடுத்தது. என்னால் முடிந்தவரை சிரமப்பட்டு காற்றில் பறக்கக் கூடாதென்று நினைத்துப் பெரிய மரம் ஒன்றைக் கட்டிக் கொண்டேன். அது முட்டாள்தனம் என்று பின்னால் தெரிந்தது. க்ஷணத்திற்கெல்லாம் மரம் மடமட மடவென்னும் ஓசையோடு முறிந்து விழுந்தது. இன்ன சத்தம் என்று உரைக்க முடியாதபடி ஒரே இரைச்சல்! வாயு தேவன்தான் அவ்விதம் உறுமினானோ, அல்லது பேய்கள் தான் அவ்விதம் கூக்குரலிட்டனவோ தெரியாது. என் மனத்தில் இவ்விதம் தீர்மானித்துவிட்டேன்.

''நாம் மறுபடி உலகத்தைப் பார்க்கப் போவதில்லை!''

மின்னல் கண்ணைப் பறிக்கிறது. இடிச்சத்தம் காதைத் தொளைக்கிறது. என் உடம்பில் லங்கோட்டைத் தவிர வேறொன்றுமில்லை. குளிர் நடுக்குகிறது. பல் கிட்டுகிறது. பராசக்தியைத் தியானித்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டேன். கண்ணை விழித்தால் பயங்கரமான இருளில் கொட்டு மழையில் காற்று எங்கேனும் மரங்களில் மோதிவிடுமோ என்று பயமாயிருக்கிறது. காதையும் கையினால் பொத்திக் கொண்டேன். ஒவ்வொரு நிமிடத்திலும் மரணத்தை எதிர் பார்த்தேன். காற்று என்னைப் புரட்டிக் கொண்டும் உருட்டிக் கொண்டும் தூக்கித் தூக்கி வீசி கடைசியில் ஒரு தண்ணீரில் கொண்டு அமுக்கிற்று. அமுக்கலில் மூச்சுத் திணறி விட்டது. இருந்தாலும் நான் தைரியத்தைக் கைவிடாமல் தம், மூச்சு அடக்கிக் கொண்டு மேலே வருவதற்கு முயற்சி செய்தேன். அனேக தடவை முயற்சி தோற்றது. கடைசியில் கைகளை வீசியதும் சில கொடிகள் அகப்பட்டன. அதைப் பற்றிக் கொண்டு எப்படியோ திக்குமுக்காடித் தண்ணீரிலிருந்து உயர வந்து விட்டேன். நல்லவேளை, அப்போது சிறிது காற்று மட்டுப்பட்டிருந்தது. மெதுவாகக் கரை ஏறிப் பார்க்கையில், ஊரிலிருந்து நான்கு மைலுக்கப்பால் உள்ள கிராமத்து வயலோரத்தில் இருப்பது தெரிந்தது.

அங்கிருந்து ஒரு வண்டியிலேறி இங்கு வந்து சேர்ந்தேன். என் மனத்தில் நாம் இப்படி அவஸ்தைப் பட்டோமே, உங்கள் கதி

என்னவாயிற்றோ என்று ரொம் பக் கவலையாயிருந்தது. தங்களைக் கண்டதும் கவலை நீங்கிற்று!

இவ்வாறு சுப்புரத்தினம் சொன்னார்.''

தங்கம்மா பாரதி, தம் தந்தை யார் பாரதிபற்றி, எழுதிய நினைவுக் கட்டுரையில், இப் பகுதியைப் படிக்கிற இடத்தில், ''என் மனத்தில் நாம் இப்படி அவஸ்தைப் பட்டோமே, உங்கள் கதி என்னவாயிற்று என்று ரொம் பக் கவலையாயிருந்தது. தங்களைக் கண்டதும் கவலை நீங்கிற்று'' என்று குறிப்பிடுவது நாம் ஊன் றிப் படிக்க வேண்டிய கருத்தா கும்.

அங்கே அன்பர் இருவரைக் காத்த இளைஞர் சுப்புரத்தினம், கவிதைப் பணியும் நாட்டுத் தொண்டும் ஆற்றும் பாரதியின் நிலைபற்றிக் கவலை கொண்டு ஓடோடி வருகிறார். எங்காவது ஓரிடத்தில் தம் பெற்றோர்-உற வினர்-குடும்பத்தினர் இவர்களின் நிலை குறித்து வருந்தியதாக நாம் காண முடியவில்லையே!

கனக-சுப்புரத்தினம், கானக் குயில் அன்றோ! தனது தீங்குர லால் பாட்டிசைக்கும், மற்றோரை மகிழ்விக்கும், தன் கூட்டைப் பற்றி - குஞ்சுகளைப்பற்றி - குடும் பத்தைக் குறித்து அழுகுரல் எழுப்பியிருக்கிறதா எந்தக் குயி லாவது!

தன் நலத்துக்குக் குரல் கொடுப்பதில்லை; பிறர் நலத் துக்கு உயிரும் கொடுக்கும் அந்தப் பாட்டுக்குயில்!.

சூறையிலும் சொந்த நலனை உதறிவிட்ட அந்தக் குயில் பின் பொரு நாள் இப்படியும் பாடி யிருக்கிறது.

''ஊருக்குழைப்பது யோகம்
என்றே
உரைத்திட்ட பாரதியின்
பாட்டை, வாழ்வின்
வேருக்கு நீரென்று சொல்வார்
அந்நாள்!
வழலுக்கு நீர் பாய்ச்சும் இளைஞர்
இந்நாள்
பேருக்கும் பெருமைக்கும் யோகம்
பேசிப்
பெரும் பணத்தை இழக்கின்றார்,
அறிஞர் சொன்ன
ஊருக்கு உழைப்பதுதான் யோகம்
என்னும்
உண்மையிலே யோகத்தின்
உயிரைக் காண்பீர்'

பாடலைப் படித்தபின், என் வயது பதினெட்டாவதாக நான் உணர்கிறேன்.
நீங்கள்-?

பாவேந்தரின் கவிதை வரிகள் மட்டுமல்ல கையெழுத்துப் படிவமும் முத்து முத்தாக இருக்கும். அவர் தம் கைப்பட எழுதப் பெற்ற பாடல் ஒன்று இங்கே இடம் பெற்றிருக்கிறது.





பாவேந்தர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பொற்கிழி அளிக்கிறார்.
[29—7—1946]

பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்திய பொற்கிழி வழங்கு விழா முடிவுற்ற பின்னர் எடுக்கப்பெற்ற படம். இதில் பேரறிஞர் அண்ணா, திரு. என். வி. நடராசன், ஆகியோரையும் நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்களையும் காணலாம்.





# பாரதிதாசன் என் ஆசான்

உவமைக்கவிஞர் சுரதா

பகுதியெலாம் சொற்களுக்குத் தலைமை தாங்கும்;
பழங்களெல்லாம் விதைகளுக்குத் தலைமை தாங்கும்;
தகுதியெலாம் திறமைக்குத் தலைமை தாங்கும்;
தந்தங்கள் பற்களுக்குத் தலைமை தாங்கும்;
மிகுதியெலாம் நீரானால் கடலாய்த் தோன்றும்;
மிச்சமெல்லாம் அறிவானால் புகழாய்த் தோன்றும்;
விகுதியென நிற்காமல் பகுதி போன்று
விளங்கியவர் பாவேந்தர்; அவரென் ஆசான்!

கற்பிப்போன் ஆசானும்; அவனி டத்தில்
கற்போனே மாணவனும்; பண்டை நாளில்,
கற்பித்தோன் பெரும்புலமை பெற்றி ருந்தான்.
கற்றோனும் கசடறவே கல்வி கற்றான்.
பற்பலநாள் பாவேந்த ரோடி ருந்தும்
பாடம்நான் கேட்கவில்லை என்ற போதும்,
சிற்றருவி போன்றவன்யான் அவரி டத்தில்
தினந்தோறும் பாட்டெழுதிக் காட்டி வந்தேன்.

நீட்டுயர்ந்த திண்ணையின்மீ தமர்ந்தி ருப்பார்;
நின்றபடி நானிருப்பேன்; உள்ளே நீபோய்ப்
பாட்டுயர்ந்த சுவடிகளை நீண்ட நேரம்
படியென்பார்; நன்றாகப் புரிந்து கொண்டு
தீட்டுகநீ பாட்டென்பார், பிழையி ருந்தால்
திருத்துகின்றேன் நானென்பார்; எழுதி வந்து
காட்டிடுவேன், அதைத்திருத்திக் கொடுப்பார், அந்தக்
கவிதைகளென் கைவசத்தில் இப்போ தில்லை!

நீரைப்போல் அண்ணாவும், திண்மை கொண்ட
நிலத்தைப்போல் பெரியாரும், கரிகாற் சோழன்
தேரைப்போல் அழகிரியும் இருந்த நாளில்,
தீயைப்போல் பாவேந்தர் இருந்து வந்தார்.
நேருக்கு நேராகப் பகைவர் தம்மை
நின்றெதிர்த்த பெருங்கவிஞர் தம்வாழ் நாளில்
ஆருக்கும் அஞ்சாமல் வாழ்ந்து வந்தார்;
அவரேஎன் கவியாசான்; அதங்கோட் டாசான்!



# பாரதிதாசன் என் அரசன்

—கவியரசு முடியரசன்—

கவியரங்கே அரண்மனையாய், மக்கள் நெஞ்சே
காவலன்றன் அரியணையாய், துணிவஞ் சாமை
இவையிரண்டும் மெய்காப்பாய், பெருமி தத்தோ
டாழ்புலமை நல்லமைச்சாய், எழுது கோலே
நவைதவிர்ந்த செங்கோலாய்ச் சங்க நூல்கள்
நலஞ்செய்யும் வெண்குடையாய் விளங்க, வேந்தன்
கவியுலகை ஆள்கின்றான் ; அதுதான் நாடு,
காப்பளிக்கும் இலக்கணந்தான் எல்லைக் கோடு !

அடையார்தம் நெஞ்சத்தை நடுங்க வைக்கும்
அரிமாவின் தோற்றத்தன்; வகுத்த சாதிப்
படையாவும் துடிதுடித்துப் புறமிட் டோடப்
பகுத்தறிவுப் படைக்கலங்கள் செலுத்தும் வீரன் ;
தடையாகும் மதயானை அடக்குந் தோட்டி
தாங்கிவரும் உரனுடையன் ; பாண்டி வேந்தன்;
அடடாவோ என்னரசன் போர்தொ டுத்தால்
அவனெதிரில் நிற்பதற்கோர் ஆளே இல்லை !

பெரியாரைத் துணைக்கொண்டு செங்கோ லோச்சும்
பெருவேந்தன் பாரதியின் தாசன் நாட்டில்
சரியான சமநீதி வழங்குஞ் சட்டம்
தன்னிகர்த்த திருக்குறள்தான் ; அரசு மன்றில்
புரியாத எம்மொழிக்கும் ஆட்சி யில்லை
புதுமைமிகும் தமிழொலிதான் எங்கும் கேட்கும்;
எரியாது மாந்தருளம் ; அடுப்பில் எங்கும்
எரிவதனால் அவர்நெஞ்சம் குளிர்ந்தி ருக்கும்.

பாட்டென்ற வில்லெடுப்பான் பகைமு டிக்கப்
பகுத்தறிவு நாணேற்றிச் சொல்தொ டுப்பான் ;
'காட்டுன்றன் வீரத்தைப் புலியின் போத்தே
காப்பாற்றுன் தாயகத்தை' எனப்ப ணிப்பான்;
பாட்டாட்சிப் பாசறையில் பயிற்று வித்துப்
படைமறவர் பற்பலரைத் தோற்று வித்தான் ;
ஏட்டாட்சிப் போர்க்களத்தில் என்றன் மன்னன்
எனக்களித்தான் படைத்தலைமை ; அவன்பேர் வாழி!

# பாரதிதாசன் என்தாய்!

தமிழமுதச் சோறுக்கி, அறிவு நெய்யைத்
தன்மானக் குழம்பதனைப் பெய்தே ஊட்டி
இமைபோன்றே எமைவளர்த்த குயிலே! என்றும்
எங்களுக்குக் கவிதைத்தாய் நீயே யன்றோ?
'உமிமூடி இருப்பதெல்லாம் நெல்லா? அல்ல;
உதவாத பதர்கூட இருக்கும்!' என்றே
எமக்கிங்கே பகுத்தறிவை, தமிழ்வி ரத்தை
எப்படிஎப் படியெல்லாம் புகட்டி வைத்தாய்?

'குடும்பத்து விளக்'காகி நின்றாய்! நாட்டின்
கொடுமைமிகு 'கைம்மை'யதன் இழிவைச் சொன்னாய்!
விடிவெங்கே அவர்க்கென்றே 'நல்ல தீர்ப்'பை
'வீரத்தாய்' நீகேட்டாய்! 'தமிழி யக்க'
நெடுங்குன்றில் 'தேனருவி' பெருக்கிக் காட்டி
நெஞ்சமெலாம் 'இசையமு'தால் இனிக்க வைத்தாய்!
வெடிப்'புரட்சிக் கவி'வேந்தைப் பேச வைத்து
வியர்வையதன் ஆற்றலினை எடுத்துச் சொன்னாய்!

எழில்'அழகின் சிரிப்'பாலே வைய கத்தின்
ஏற்றமெலாம் சுவைபடநீ தொகுத்துச் சொன்னாய்!
'பொழில்' 'குன்றம்' 'கடல்' 'அருவி' 'வானம்' 'தென்றல்'
'பொற்பரிதி' 'புறா'க் 'கிளி'கள் இவற்றையெல்லாம்
அழகுச்சொல் லோவியத்தால் எங்கள் நெஞ்சில்
அற்புதமாய்ப் பதியவைத்த அன்னை நீயே!
கிழமுட மடமைப்புண், சாதி நோய்கள்
கிட்டஎம்மை நெருங்காமல் மருந்தைத் தந்தாய்!

**கவிஞர் கா.வேழவேந்தன்**

# பாரதிதாசன் எங் அண்ணல்

மூடத் தனம்எனும் முட்புதர் மண்டிய
முழுஇருள் நிலமான தமிழகத்தில்—அவன்
பாடத் தலைப்பட்ட நாள்முத லாகவே
பகுத்தறிவின் ஒளி பாய்ந்ததண்ணே !—மனப்
பார்வைக் குருடெல்லாம் தீர்ந்த தண்ணே !
வேடங் கலைந்தவோர் நாடக அரங்காக
வேதனை மிரண்டோட முனைந்ததண்ணே!—அவன்
பாடம் நடத்திய பாட்டரங் கம்எலாம்
பாலுறை யாகி நிறைந்ததண்ணே !—அந்தப்
பட்டாளத் தால்தெம்பு பிறந்ததண்ணே !

"நேருக்கு நேர்நின்று நெஞ்சுக்கு முன்நின்று
நின்னைக் குறிபார்க்கும் பகைவனிடம்—தம்பி,
போரிடக் கற்றுக்கொள்" என்று புறப்பட்ட
புரட்சிக் கவிஅவன் எரிமலைதான் !—அவன்
உதிர்த்த சிறுசொல்லும் பெருவிலைதான்!
ஆருக்கும் அஞ்சாமல் விலையாகிக் கெஞ்சாமல்
அறிவெனும் பாதையில் தான்நடந்து—இந்தச்
சீர்மிகு நாட்டிற்குச் செந்தமிழ் வீட்டிற்குச்
சிந்தை தெளிவிக்கும் சிந்திசைத்தான்—ஒன்றாய்ச்
சேர்ந்தாடும் தீமைவேர் வந்தசைத்தான் !

பாய்ந்து வரும்ஒரு காட்டா றுகவே
பாடிவந் தானந்தப் பாட்டாறு—தலை
சாய்ந்த சமூகத்தின் நெஞ்சு நிமிரவே
பாயவைத் தான்கவி தேனாறு!—கொள்கைப்
பயிர்வளர்த் தான்அவன் நம்பேறு !
ஆய்ந்த பலகலை வாணனவன், எங்கள்
அண்ணலவன் சுவைக் கன்னலவன்—அன்று
மாய்ந்த பழம்புகழ் மீட்டுத் தரவந்த
மறவனவன் கவிக் குரவனவன்—இந்த
மண்மானக் காப்பிற்கோர் வடிவம்அவன் !

வீரம்என் றேசொல்லும் சொல்லுக் கிலக்கண
மாக விளங்கிய வீரனவன்!—எந்த
நேரமும் நெஞ்சில் இனித்திடும் பூங்கவி
நெய்து உதவிய வேந்தனவன் !—பசும்
நெய்நிகர் நல்மண மாந்தனவன் !
பாரதி தாசன் எனும்அந்தப் பாமன்னன்
பண்பில் மணந்த புகழ்வண்ணன் !—இந்தப்
பாரில் பறந்து திரிந்து வலம்வந்த
பாவலர் வரிசையில் முதல்மகன்—மக்கள்,
பாசத்தில் கலந்தஓர் தலைமகன் !

கவிஞர் பொன்னடியான்

# பாரதிதாசன் என் தலைவன்

புலவர் தமிழ்ப்பித்தன்

ஐந்துபிள்ளைக் கனியமுது அன்புமனை என்றே
அறுவருக்கு நான்தலைவன் ஆகியுள்ளேன்; ஆனால்
நைந்ததிரு நாட்டின்மேல் நாட்டமிகக் கொண்டு
நறுங்கவிதைப் பிள்ளைபல பெற்றெடுக்கும் தொண்டில்
தேர்ந்திருந்தான் ஓர்தந்தை; தேசத்தார் நெஞ்சில்
செறிந்திருந்த நற்செம்மல்; சீர்புதுவை ஊரில்
வாழ்ந்திருந்த பாவேந்தன்; வண்டமிழ்த்தாய் மைந்தன்
வரகவிஞன் அன்னவனே என்தலைவன் ஆவான்!

இமயத்தைப் போய்த்தொட்டே இதமுறவே மீளும்
இருட்காகம் வெண்ணிறமே எய்துமென்றோர் கொள்கை
அமைந்ததுண்டு இந்நாட்டில்; அ:.தேபோல் சென்றேன்
அருவிதரும் இமயமென அறிவுதந்து நித்தம்
இமையுயர்த்தி, குரல்நிமிர்த்தி, இனியகவி சேர்த்த
இணையில்லாப் பாவேந்தை இரண்டொருநாள் பார்த்து,
சுவைமிகுந்த இதயத்தால் தொட்டிருக்கும் வாய்ப்பால்
சுவைத்தமிழின் கவிதைமனம் யான்கூடப் பெற்றேன்!

என்தலைவனார் கவிதைகளில் இந்தமிழ்க்கோர் ஏற்றம்,
எழில்நாட்டின் உயர்வாழ்வு, சீர்திருத்த நோக்கம்,
வன்மைநிறை பெருவீரம், புரட்சித்தீ தோன்றும்!
வளமான கருத்தாறு பாய்ந்திடும்எப் போதும்
என்புருகக் கவிபாடும் எந்தலைவர் சொல்லால்
எவர்நாவும் கவிபாடும்! மனமும:.தே நாடும்!
வெண்பாவா, கலிப்பாவா, விஞ்சுதமிழ்ச் சிந்தா,
விரைந்துவந்தே அவையனைத்தும் மகிழ்ந்துவிளை யாடும்!

இறையரணைத் தலைவனெனக் கொண்டதொண்டர் எல்லாம்
இடர்பெற்றார்; சோதனையில் புடம்போடப் பெற்றார்!
கறையில்லா அண்ணலெனும் காந்தியரைச் சேர்ந்து,
கவின்மிகுந்த நாட்டுக்குத் தொண்டுசெய்த வீரர்
சிறைப்பட்டார்; சொத்துசுகம் இழந்துநின்றார்; மேலாம்
சிரமிழந்தார்; தியாகியெனும் திருநாமம் பெற்றார்!
திறமிகுந்த என்தலைவன் பின்செல்வோர்க் கெல்லாம்
சிறையேது? துயரேது? தேன்கவியே கிட்டும்!

# புரட்சித் தீயின் போர்ப் பொறிகள்


கொண்டல் சு. மகாதேவன்,

தமிழ் வளர்ச்சி இயக்குநர்.


பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரால் தூண்டப்பட்டுப் பெருந் தீயாகக் கிளர்ந்து எழுந்தவர் பாவேந்தர் பாரதிதாசனார். அந்தப் புரட்சித் தீ சிந்திய போர்ப் பொறிகள் இன்று புதியதோர் உலகைப் படைத்துக் கொண்டுள்ளன ; போராடும் பழைய உலகை வேரோடு சாய்த்துக் கொண்டுள்ளன. ஆம், நம் புரட்சிக் க்விஞர் முன்னாள் புலவர்களின் தோள் மேல் ஏறி நின்று, பின்னாளில் வர இருக்கும் புலவர்களுக் கெல்லாம் பெரு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார். விடுதலை பெறுவதற்கு முன்னிருந்த நாட்டின் நிலைமை பற்றிய செய்திகளை விடுதலையின் பயனைத் துய்த்து மகிழ்ந்திருக்கும் நம்மில் பலர் அறிந்திருக்க முடியாது. நாமிருக்கும் இந்தப் பூமியுருண்டை நாளுக்கு ஒரு முறை சுழன்று கொண்டிருக்கின்றது என்ற நல்லுணர்வும் இல்லாமல் 'தேவர் உலகம்' என்றால் மேலே பார்த்துக் கொண்டும், 'நரகர் உலகம்' என்றால் கீழே பார்த்துக்கொண்டும் இருந்த நேரத்தில்தான் நம்மைப் பாவேந்தர் சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே கொண்டு சென்று நிறுத்திச் சிந்திக்கச் செய்தார். நாவலந் தீவு நல்ல முறையில் விடுதலை பெற்றாக வேண்டும் என்ற கொள்கையில் எவருக்கும் இளையவராக வைத்துக் காண முடியாத இவர் இந்திய நாடு அந்நாளில் அடிமைப்பட்டதற்குக் காரணங்களாகப்.

> "பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள்
> சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதிகாசங்கள்"

இருந்து வந்தமையே என்பதை விளக்கி,

> "ஓ என் சோதரரே ஒன்றுக்கும் அஞ்சாதீர்
> நாவலந் தீவு நம்மை விட்டுப் போகாது
> வாழ்கின்றார் மக்கள் முப்பத்து முக்கோடி என்றால்
> சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்"

என்ற வரிகளால், அடக்கி ஆண்டு வந்த ஆங்கிலேயரின் உள்ளத்தினை அப்படியே வெளிக் கொணர்ந்து காட்டினார். பாவேந்தர் எடுத்துக் காட்டிய உண்மையினை அன்று நாம் உள்ளத்தில் கொண்டு பேதம் அகற்றிச் செயல்பட்டிருந்தால் வரலாற்றில் 'துண்டு பட்ட' இந்தியாவைப் பெற்றதற்கு மாறாக ஒன்று பட்ட இந்தியாவையே பெற்று மகிழ்ந்திருப்போம்.

## இருட்டறையில் இருந்த நம் உலகம் :

அறியாமை இருளைப் போக்கி அறிவொளியை எய்துவதைத் தான் விடுதலை என்கிறோம். ஆங்கிலப் பேரரசில் சூரியனே மறைவதில்லை என்று அவர்கள் வீரம் பேசி வந்த நேரத்திலும் கூடப் பகுத்தறிவுப் பகலவன் ஒளிபடாது அறியாமை இருளில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம் என்ற கசப்பான உண்மையை உலகிற்குப் பிட்டுக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசனார்.

> "இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
> இருக்கின்றது என்பானும் இருக்கின் றானே!
> மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே
> வாயடியும் கையடியும் மறைவது) எந்நாள்?
> சுருட்டுகின்றார் தம் கையில் கிடைத்த வற்றைச்
> சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
> வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
> விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்"

என்றும் அவர்தம் பெருமுழக்கம் நம் விடுதலை இந்தியாவில் என்றுமே 'கெடுதலை' தலைகாட்டக் கூடாது என உறுதி பூணச் செய்கிறது.

## பெண்ணடிமை தீர்ந்ததா ?

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' எனத் தாய் உலகமே முன் வந்து கூறும் அளவிற்கு அந்நாளில் குடும்பம் ஒளி திகழ்ந்து கொண்டிருந்தது. ஆனால், இடைக் காலத்திலோ,

> "ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர்
> தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதும்
> அஞ்சுவதும் நாணுவதும் ஆமைபோல் வாழுவதும்
> கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்
> மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி"

என்ற நிலையை 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்று சொல்லி, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று அவலட்சண மொழி பேசுவோர் உருவாக்கிவிட்டனர். இந்த நிலையில்,

> "கல்வி இல்லாத பெண்கள்
> களர்நிலம் அந்நிலத்தில்
> புல்விளைந்திட லாம்! நல்ல
> புதல்வர்கள் விளைதல் இல்லை!"

என்ற உண்மையை உணர்ந்த பாவேந்தர் பிறந்த தாய்க் குலத்திற்குத் தொட்டிலில் வளரும் போதே,

> "சாணிக்குப் பொட்டிட்டுச்
> சாமியென்பார் செய்கைக்கு

நாணிக் கண்ணுறங்கு
நகைத்து நீ கண்ணுறங்கு"

என்று ஞானப் பால் ஊட்டுகின்றார். பிறந்த ஆடவர் குலத்தைத் தாலாட்டும் போதோ,

"மானிடரின் தோளின்
மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே என்
செந்தமிழே கண்ணுறங்கு"

என வாழ்த்தி வளரச் செய்கிறார்.

'பெண்டிர்க்கு அழகு பேசாதிருத்தல்' என்று கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டு மயங்கி, மாதரை மண்ணினும் கேடாக மதித்துப் பேச்சுரிமையும் அளிக்க மறுத்து வந்த சமுதாயத்தை எதிர்த்து,

''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே!''

என்று முழங்கினார் நம் பாவேந்தர்.

### வடமொழியும் தென்தமிழும் :

பாவேந்தர், மக்கள் மொழிக்கு என்றும் மதிப்புத் தருபவர். பில்கணீயம் என்ற வடமொழிக் கதையினையும், 'புரட்சிக் கனி'யாகப் புதுக்கித் தந்துள்ளார். ஆனால், வடமொழியைக் கடவுள் மொழி என்று சொல்லி, தமிழர்களைத் தூக்கிடும் தாம்பாகச் சிலர் அதனைத் திரித்து உருட்டுவதைத்தான் அவர் நஞ்சாக வெறுக்கின்றார். அவ்வகையில் காளிதாசனின் சாகுந்தலத்தை மொழிபெயர்த்த தமிழ்ச் செல்வர் மறைமலை அடிகளார் வழி நின்று பாவேந்தர் காட்சி தருகிறார். ஆம், இருவரும் வடமொழியைக் குறைவாக விரும்பவில்லை. ஆனால், தமிழை அதிகமாக விரும்பினார்கள் என்பதே உண்மை!

## பார்த்தோம் படித்தோம்

### அருமையான பேட்டிக்கட்டுரை

''நீரிழிவு நோய்'' பற்றித் 'தமிழரசு' இதழில் வெளிவந்த அருமையான பேட்டிக் கட்டுரை எண்ணிறந்தோர்க்கு நன்மை செய்யும் ஒன்றாகும். டாக்டர் கிஸார் அகமது அவர்கள் நீரிழிவு நோயாளிகள் நலத்துடன் முழு வாழ்வு வாழ அரும்பணியாற்றி வருகிறார்.

நீரிழிவு நோயாளிகள் ஒரு நாளில் எந்தெந்த வேளையில், என்னென்ன உணவு, எந்தெந்த அளவுகளில் உண்ணவேண்டுமென்று கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளார்கள்.

இதுவும் 'தமிழரசு' இதழில் வருமாயின் மிக்க நன்மை விளையும்.

மேலும், பல் பாதுகாப்பு, கண் பாதுகாப்பு, உடல் பயிற்சி முதலியன பற்றி மருத்துவர்களின் அறிவுரைகளையும் வெளியிடல் நன்று.

கட்டுரையாசிரியர் மாமூலன் அவர்களுக்கு நீரிழிவுநோயாளிகள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்.

—வ. உ. சி. சுப்பிரமணியம்,
சென்னை-600002.

*[நீரிழிவு நோயாளிகளுக்கு உணவு முறைகள் 16—3—1978 தமிழரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளது.
—ஆசிரியர்.]*

### 'ஒரு பத்திரிகை' அரசுப் பத்திரிகை

தமிழரசு 16-2-'78 இதழில் 'நீதி மன்றங்களில் தமிழ்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் அவர்கள் பேட்டியில் ஒரு பகுதியை எடுத்து வெளியிட்ட 'குமுதம்' பத்திரிகை, 'தமிழரசு' பத்திரிகை என்று குறிப்புப் போடாமல் 'ஒரு பத்திரிகை' ஒன்று வெளியிட்டுள்ளது. அரசு பத்திரிகையான 'தமிழரசின்' பெயரைப் போட்டால்' 'குமுதம்' என்ன குறைந்தா போய்விடும்?

—பி. கிருஷ்ணகுமார்,
கும்பகோணம்.

### இதழுக்கு ஒரு கவிதை வரட்டும்!

'வெண்பாப் போட்டி' போன்ற கவிதைகள் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழரசில்', இடையே கவிதையே வெளிவராமல் இருந்தது. இப்பொழுது கவிதைகள் வர ஆரம்பித்துள்ளன. இந்நிலை தொடரட்டும். இதழ்தோறும் ஒரு கவிதை கட்டாயம் வர வேண்டும்.

—தி. சந்திரசேகரன், மதுரை-11.

### எடுத்துக் காட்டுக்கு ஒரு கட்டுரை

''பத்திரிகையாளர் இங்கே உருவாகிறார்!'' என்னும். தலைப்பில் எங்கள் துறையினைப் பற்றி 'தமிழரசு' இதழில் வெளிவந்துள்ள கட்டுரை சிறப்பாக அமைந்துள்ளது.

தகவல்கள் முறையாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. சொல்லவேண்டிய செய்திகள் அனைத்துக்கும் அளவான இடம் அளிக்கப்பட்டுள்ளது. மொழி நடை ஆற்றொழுக்குப்போல் சரளமாகவும் நயமாகவும் அமைந்துள்ளது. பத்திரிகைக்கான கட்டுரை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்குத் தங்கள் இதழில் வெளியான இக்கட்டுரை சிறந்த எடுத்துக்காட்டு. இத்தகைய அருமையான கட்டுரை எங்கள் இதழியல் துறையினைப்பற்றி மக்கள் நன்கறிந்துகொள்ளத் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

தங்களுக்கும், இக்கட்டுரை ஆசிரியர் திரு எஸ். சண்முகசுந்தரம், அவர்களுக்கும் எனது அன்பு கலந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

து. சதாசிவன்
இதழ் இயல் துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்

### புதுப் பொலிவோடு வெளிவருகிறது!

'தமிழரசு' இப்போது புதுப் பொலிவோடு வெளிவருவதைப் பார்க்கிறேன். ஒவ்வொரு பக்கமும், மனத்தை ஈர்க்கின்ற வகையில் அமைந்து, அறிவுக்கு விருந்தூட்டுகின்றது.

எல்லாத் துறைகள் பற்றியும் அறிந்துகொள்ள, என்போன்ற பொதுஅறிவுப் பித்தர்களுக்குத் 'தமிழரசு' பெருந்துணை புரிந்து வருகின்றது.

—ம. இரத்தினவேல்,
திருப்பெரும்புதூர்.

### ஒரே ஒரு ஆவல்!

'தமிழரசு' அரசின் பல்வேறு துறைகள் பற்றிய கட்டுரைகளைத் தாங்கி மிகச் சிறப்போடு வெளிவருவது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது.

ஒரே ஒரு ஆவல்! 'தமிழரசில்' சிறுகதைகள் வெளிவரவேண்டும். என் ஆவலை நிறைவேற்றுவீர்களா?

—டி. சுவாமிநாதன்,
குடியாத்தம்.



# பாவேந்தரும் பைந்தமிழும்

சிலம்பொலி சு. செல்லப்பன்

பாவேந்தர் :

நெடிதுயர்ந்த தோற்றம்; நேர்கொண்ட பார்வை; அகன்ற நெற்றி; அடர்ந்த மீசை; கணீரென்ற குரல்; கரவறியா நெஞ்சம்; சிங்க நடை; சிறுமையிலாச் சிந்தனை ஆகிய அனைத்தின் தொகுப்பான பாவேந்தர் பாரதிதாசனாரைக் காலம் நம் கண்களிலிருந்து மறைத்து விட்டது என்றாலும் நம் நெஞ்சத்திலிருந்து எவராலும் எக்காலத்தும் பிரிக்க முடியாதவராக அவர் ஆகிவிட்டார். தமிழர் தம்முடைய 'உள்ளத்தே அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாக' அவர் என்றும் திகழ்ந்து வருவார். அவர் உடல் மறைந்ததே தவிர அவர் ஊட்டிய உணர்வு என்றும் மறையாது.

''உயிரில் உணர்விற் கலந்த கவிஞன்என்
உயிரில் உயிர்கொண்டு உலாவுகின்றான்
—வெறுந்
துயரில் நான்மூழ்கிக் கிடக்கவில்லை அவன்
தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன்''

என்ற 'தமிழ் ஒளி' இன்று எங்கும் வீசிச் சிறக்கிறது.

**தமிழ் மேகம் :**

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கவிதையை அமுத ஊற்றாகப் பெருக்கெடுக்க விட்டவர் பாவேந்தர். பல நூற்றாண்டுக் காலம் தொய்ந்து கிடந்த கவிதையுலகை முறுக்கேற்றிய முதற் புலவன் பாரதி. அவரமைத்த பாதையில் பீடு நடை போட்டு நடந்து, மேலும் முன்னேறிச் சென்றவர் பாரதிதாசன். காய்வெங் கோடையாய்க் கிடந்த தமிழ்க் கவிதையுலகில் காரெனத் தோன்றியவர் கவி வேந்தர் பாரதிதாசனார். இக் கவி மேகம் அறிவு மின்னலாய்ப் பளிச்சிட்டு, ஆகாதவற்றை அழித்தொழிக்கும் இடியாய் முழங்கி, கருத்து மழையாய்த் தமிழ் நிலம் குளிரப் பெய்து பயன் விளைவித்தது.

**தமிழ் உணர்வு :**

பகுத்தறிவுக் கருத்துக்களைப் பாருக்கு வழங்கியவர், பொதுவுடைமைக் கொள்கைகளைத் திசையெட்டும் பரப்பியவர், சாதிச் சனியனைச் சாய்த்தவர், மடைமைக் கொடுமைகளை மாய்த்தவர், தொழிலாளர் துயர் துடைத்தவர், முதலாளிகள் அஞ்சி நடுங்கப் போர்ப் பாட்டுப் பாடியவர் எனப் பாவேந்தர் பல்வகையாலும் பாராட்டப்பட்டாலும், நீரில் அழுத்தினும் மேலெழுந்தே நிற்கும் பந்துபோல, அவருடைய அனைத்துக் கருத்துக்களிலும் தமிழுணர்வே மேலோங்கி நிற்கிறது என்று கூறுவது மிகையாகாது.

**தமிழின் தொன்மை :**

மொழிகளுள் தமிழே முதன்மையானது என்ற கருத்தை மிகவும் அழுத்தமாகக் கவிஞர் வலியுறுத்துகிறார். 'முன்னைத்தோன்றிய மக்கள்முதன் முதலில் பேசிய மொழி' தமிழேயாம். உலகம் தோன்றிய அக்காலத்தே தமிழும் தோன்றியது என்பதை,

'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்'

என்றும்,

''பண்டுவந்த செழும்பொருளே
பார்அடர்ந்த இருட்கடலில்
படிந்த மக்கள்
கண்டுவந்த திருவிளக்கே!''

என்றும் களிப்புடன் கூறிடக் காண்கிறோம். 'தமிழே ஞாலத்தின் தாய்மொழி!' என்பதை அவர் யாண்டும் சுட்டியே செல்வார்.

**தமிழின் இனிமை :**

மங்கை ஒருத்தியின் காதலுக்காக மாபெரும் அரசையே துறந்து வெளியேறியவர்கள் உண்டு. ஆனால் பாரதிதாசனாரோ,

''மங்கை ஒருத்தி தரும்சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்று ரைப்போம்''

என்றும் தமிழ்ச் சுவையை எச்சுவையினும் விஞ்சிய தாக்கி விளம்புகிறார். தமிழ் இனிமையைப் பாவேந்தரைப்போற் பாடிய புலவர் வேறு எவரும் இல்லை என்றே கூறலாம். கனிச் சுளை, கரும்புச் சாறு, மலர்த் தேன், காய்ச்சிய பாகு, பசுவின் பால், குளிர்ந்த இளநீர் இவையெல்லாம் இனியனவே; ஆனால் தமிழோ இவற்றிலும் மேலான சுவையைத் தருகிறது கவிஞருக்கு.

தமிழைக் கற்பதற்குக் கவிஞர் கூறும் ஒரு காரணம் கற்கண்டாய் இனிக்கிறது.

''தமிழ் 'படித்தேன்' அதை உண்ணத்தான்
தமிழ் படித்தேன் நான்''

எனக் குறிப்பிடுகிறார். தமிழ் படித்தேன். அதாவது தமிழ் ஒரு படியளவு உள்ள தேனை இருக்கிறது; அதை உண்பதற்காக நான் தமிழ் படித்தேன் என்கிறார்.

''தமிழுக்கு அமுதென்று பேர் .

''இனிமைத் தமிழ்மொழி எமது—எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல்அமுது''

என்றெல்லாம் பலவாறாகத் தமிழினிமையை அவர் பாடல்களில் பரக்கக் காண்கிறோம்.

**தமிழே உயிர் :**

தமிழே கவிஞரின் உயிராய்த் திகழ்கிறது.

'வெங்குருதி தனிற்கமழ்ந்து
வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்'

என்பது அவருடைய வாக்குமூலம். தமிழ் இருந்தால் போதும்; வேறு எல்லாம் தாமாகவே வந்து சேர்ந்து விடும்!

"அமிழ்தென ஒருபொருள் உண்டெனக் காட்டும்
தமிழ்உன் மூச்சும் பேச்சும் ஆம்எனில்
என்ன இல்லை உன்பால்?''

நீரளவேயாகுமாம் நீராம்பல் என்பது போலத் தமிழளவேயாகும் தமிழர் வாழ்வு என்பதை,

''செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே''

என்று கூறுவார். தமிழ் தாழுமாயின் தமிழரின் வாழ்வைக் காக்க வேறெந்தச் சக்தியாலும் முடியாது.

''வண்டமிழ் நைந்திடில் எது நம்மைக் காக்கும்?''

தமிழ் வாழ்ந்தால் தமிழ்நாடு மட்டுமின்றி அதன் வளமான கருத்தால் இந்த வையகமே வாழும் என்பது கவிஞரின் கருத்தாகிறது.

## கவிதா மண்டலம்

"கவிதா மண்டலம்'' என்பது ஒரு மாதாந்தர உயர்தர கவிதைப் பத்திரிகை. இது, புதுச்சேரியிலிருந்து வெளி வருவது. தமிழ்நாட்டில் கவி பாடுவதில் வெகுகாலமாய்ப் பிரசித்தி பெற்றவரான தோழர் பாரதிதாசன் அவர்களே அதன் ஆசிரியராக இருக்கிறார். அவரைத் தமிழுலகம் நன்கறியும். அவர் சுமார் 20 ஆண்டுகளாக நமது தமிழ்நாட்டுக் கவிஞராய் விளங்குபவர்.

அவர் எழுதி வெளியிட்டிருக்கும் இன்னிசைப் பாக்கள் எண்ணிறந்தன. அவரது பாடல் ஒவ்வொன்றும் படிப்போர் நெஞ்சை அள்ளும் கவிகளாகும். அவைகளின் பொருள் நயத்தின் உயர்வையும் கருத்துக்களின் மேம்பாட்டையும் அறிஞர்கள் பெரிதும் பாராட்டி அப்பாக்களில் பலவற்றை இங்லீஷிலும், தெலுங்கிலும் பிற பாஷைகளிலும் அவ்வப் பாஷா ஞானிகளைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அவர், காலஞ்சென்ற கவி அரசர் பாரதியார் மீது அவருக்கிருந்த பக்தி மேலீட்டால் அவருடைய பெயர் "பாரதிதாசன்'' என வழங்கப் பெற்று வருகிறது.

தோழர் தாசன் அவர்கள் தமது நண்பரின் ஞாபகார்த்தமாகத் தமது பத்திரிகைக்கு "சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'' என்ற பெயரிட்டிருக்கிறார்.

பற்பல உணர்ச்சியை எழுப்பக் கூடிய கவிதைகளுக்கும், செவிக்கு இன்பச் சுவையூட்டும் பல திறப்பட்ட கீதங்களுக்கும் தமிழ்நாட்டில் ஒரு தனிப் பத்திரிகை வெளிவந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அநேக புராணக் கதைகளைப் பற்றிய கவிப்பகுதிகளைக் கொண்டு சஞ்சிகைகள் தமிழ்நாட்டில் பல உண்டு. ஆனால், ஒரு சாதாரண உயர்தரப் பத்திரிகையில் தோன்றக் கூடிய ருசிகரமான பற்பல விஷயங்களையும் கவிதைகளாகவும், இன்னிசைக் கீதங்களாகவும் கொண்டு வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை வேறு இல்லையென்றே சொல்லலாம்.

"கவிதா மண்டல''த்தில் அநேகவிதமான உயர்ந்த விஷயங்கள் காணப்படுகின்றன. பல உயர்தர மேனாட்டுப் பாட்டுக்களும் தமிழ்ப் பாட்டுக்களாக ஆக்கப்பட்டும் பிரசுரிக்கப்படுகின்றன.

அவை யாவும், யாவரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய இனிய எளிய முறையிலேயே அமைந்துள்ளன. இதில் வரும் விளம்பரமும் கவியாயிருப்பதைக் கண்டு வியப்படைந்தோம்.

—நகர தூதன் (வார ஏடு) 26-5-1935.

''வாழ்க தமிழ்! இவ்வையம் வாழ்க நன்றே!''

**தமிழ் உறவு :**

தாய், தந்தை, உடன்பிறந்தார் மற்றுமுள்ள சுற்றமெலாம் பாசத்தால் பிணிக்கப்பட்ட உறவு களாம். இந்த உறவுகளைவிடத் தமிழே கவிஞருக்குச் சிறந்த உறவாகிறது. உறவுகளை வெறுப்பவரல்லர் கவிஞர். இந்த உறவுகளோடு தமிழை ஒப்பிட்டு நோக்கும்போது தமிழ் அவரைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்கிறது. தேனும் இனிப்பே; வெல்லப்பாகும் இனிப்பே. ஆயினும் வெல்லப் பாகினும் இனிமையான தேனை நாம் விரும்புவது போலப் பாவேந்தரும் குடும்ப உறவையும், தமிழையும் ஒத்திட்டுப் பார்க்கையில், குடும்ப உறவினும் இனிமை வாய்ந்ததான தமிழ் உறவில் கட்டுண்டு விடுகிறார்.

''பயிலுறும் அண்ணன் தம்பி—அக்கம்
பக்கத்து உறவின் முறையார்
தயைமிக உடையாள் அன்னை—என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை
குயில்போற் பேசிடும் மனையாள்—அன்பைக்
கொட்டி வளர்த்திடும் பிள்ளை
அயலவ ராகும் வண்ணம்—தமிழ்என்
அறிவினில் உறைதல் கண்டீர்!''

முற்றும் துறந்த முனிவர்களாலும் துறக்க முடியாத தாய்ப் பாசம் கூடத் தமிழின் முன் வெற்றி பெற முடியவில்லை.

**தமிழ்த் தொண்டு :**

தமிழ்ப் பணியே சிறந்த பணி; இனிய பணி; அன்புப் பணி; என்றாலும் அஃது ஓயாப் பணியாகவும் இருக்க வேண்டும்.

''அமுதென்று சொல்லடா செந்தமிழ்ப் பணியினை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியினை''

''அமைவினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே
அன்பினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே''

''இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய்.''

தமிழுக்குச் செய்கின்ற தொண்டு அழியாத தொண்டு; அத் தொண்டு நிலைத்திருப்பது போலவே அத் தொண்டைச் செய்தவனும் நிலவுலகில் புகழால் என்றும் நிலைத்து நிற்பான்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவ தில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?

என்பது பாவேந்தரின் வினா.

**தமிழ்க் காதல் :**

''காதல் அடைதல் உயிர் இயற்கை; அது கட்டில் அகப்படும் தன்மையது அன்று''. சாதி, சமூக வேறுபாடுகள் காதலுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்பது கவிஞர் கொள்கை. காதலிலே இரண்டு சாதிகளே இருக்க வேண்டும்! ஒன்று ''ஆண் சாதி''; மற்றொன்று 'பெண் சாதி'.

''வந்தவன் ஆண்சாதி என்றால்—அவனை
மணந்தவள் பெண்சாதி தானே?''

சாதி அவ்வளவே! பிற சாதிகட்கு இங்கே வேலை இல்லை. காதலுக்காக எதையும் இழக்கலாம் என்று வலியுறுத்தும் கவிஞர், காதலே யாயினும் தமிழை இழந்துவிடக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார். காதல் என்ற பெயரால் தமிழ் தடைபட்டு விடக் கூடாது; காதலினும் தமிழே உயர்ந்து நிற்க வேண்டும்.

''மக்களில் வேற்றுமை ஏது?—காதல்
வாழ்க்கையில் நாம்புகும் போது?
அக்கால மனிதரும் நாமோ?—என்னை
அயலாள் என விலக்கிட லாமோ?

—உலகத்து மக்களில் வேற்றுமை உண்டோ?''

என்று காதல் கொள்ளும் 'அவள்' கேட்கிறாள்.

''சாதிகள் வீழ்ந்திட வேண்டும்—பெண்ணே
தமிழினமா வீழ்ந்திட வேண்டும்?
மாதொருத்தி வேண்டும் எனக்கும்—தமிழ்
மகளாய் இருந்தால்தான் இனிக்கும்!

—ஆதலால் என்மீதில் ஆசை வைக்காதே''

என 'அவள்' விரும்புகின்ற 'அவன்' கூறுகின்றான். தமிழனுக்கு அவன் காதலி தமிழ் பேசுபவளாக இருந்தால்தானே காதல் இனிக்கும்?

''. . . . . பேசுதற்குத்
தமிழின்றிக் காதலின்பம் செல்லுமோ?''

என்ற வினா, காதலுக்குக் கண்ணில்லாமல் இருக்கலாம், ஆனால் மொழி உண்டு என்ற உண்மையை நிலை நிறுத்துகிறது. கலப்புத் திருமணம் வேண்டியதே; ஆனால் அது மொழிக் கலப்பானால் இனிக்காது!

**தனித் தமிழ் :**

தொடக்க காலத்தில் பாரதிதாசன் தனித் தமிழில் எழுத வேண்டும் என்று எண்ணியதில்லை. அவருடைய முதற்றொகுதிக் கவிதைகளில் பிரசங்கம், சபாஷ், பொக்கிஷம் போன்ற பிற மொழிச் சொற்கள் பல இருந்திடக் காண்கிறோம். திரு. ஏ. கே. செட்டியார் பாரதிதாசனிடம் சில கேள்விகள் கேட்டதாகவும், அவற்றிற்கு அவர் கூறிய பதில்களாகவும் சிலவற்றை ஒரு நூலில் குறிப்பிட்டு உள்ளார். (பாரதிதாசன்: தொகுப்பு நூல்: தொகுப்பாளர் — முத்தையா; பக்கம் 72, 73). அவர் கேட்ட வினாக்களுள் ஒன்று; ''பிறமொழிச் சொற்களைத் தேவையான அளவு தமிழில் சேர்த்துக் கொள்ளலாமா?'' பாரதிதாசன் அதற்கு அளித்த மறுமொழி: 'அவசியம் சேர்த்துக் கொள்ளலாம்' என்பதாம். இத்தகைய கருத்துடன் இருந்தவர் மறைமலை அடிகளாரின் தனித் தமிழ் இயக்கத்தால் கவரப் பெற்று, பிற்காலத்தில் தூய தனித் தமிழில் எழுதத் தொடங்கினார் என்பதை அவருடைய கவிதைகளைப் படிப்பார் நன்குணர்வர்.

மறைமலை அடிகளாரிடம் அவர் கொண்ட ஈடுபாட்டைத் தம்முடைய 'மணிமேகலை வெண்பா' வில் அருமையாகக் குறிப்பிடுகிறார். அழகே உருவான மணிமேகலை பிக்குணிக் கோலம் பூண்டு அமுதசுரபியை ஏந்தித் தெருவில் வந்தபோது, அவளை ஊர் மக்கள் துயரத்துடன் சூழ்ந்து கொண்டனர். மணிமேகலைக் காப்பிய ஆசிரியராகிய சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையைச் சூழ்ந்திருந்த கூட்டம் கோசாம்பி நகரில் உதயணனைச் சிறை வைத்த போது அவனை விடுவிக்க உபாயம் செய்த யூகி, பைத்தியமாக நடித்து, வீதியில் திரிந்தபோது, அவனை மக்கள் எவ்வாறு சூழ்ந்தார்களோ அவவாறு இருந்தது என்பார். இந்த இடத்தைப் பாடுகின்ற பாவேந்தரோ மறைமலை அடிகளாரிடம் தாம் கொண்டுள்ள பற்றைப் புலப்படுத்திக் காட்டப் பயன்படுத்திக் கொள்கிறார்.

இளைய துறவியாக மணிமேகலை வீதியில் வருகிறாள். அவளைச் சூழ்ந்திருப்போர் எழுப்புகின்ற ஒலியானது, கடல் ஓசையோ அல்லது அண்ணல் மறைமலை அடிகளாரின் சொற்பெருக்கைக் கேட்டவரால் ஏற்பட்ட நிறைவான ஓசையோ என்று கூறும் வண்ணமாக இருந்ததாம்!

''அறவி அகத்தும் புறத்தும் இளைய
துறவி முகம்பார்த்துச் சூழ்ந்தார்—நிறைகவி
ஆர்கலியோ அண்ணல் மறைமலைசொல் கேட்டாரால்
நேர்கலியோ என்னும் நிலம்''

என்பது அவ்வருமையான வெண்பா.

**தமிழே அறிவு :**

மக்களில் கடைப்பட்டவர்கள், இடைப்பட்டவர்கள், தலைப்பட்டவர்கள் என்ற மூன்று வகையினர் உண்டு. தமிழ் படித்தவரே தலையாயினராய் இருக்க முடியும் என்கிறார் பாவேந்தர். உலகில் அறிவில்லாதவர் கடைப்பட்டவர், சிறிதளவு அறிவு உடையவர் இடைப்பட்டவர்; உணர்வு நிரம்பியவர் தலையாயர் ஆவர். உணர்வோ, தங்கு தடையில்லாமல் தமிழ் இலக்கியங்களை விரும்பி அடைந்தவர்க்கே வரும் ஆதலின் தமிழிலக்கியம் கற்றவரே உணர்வுடையோராக, மக்களில் தலையாயினர் என்ற புகழைப் பெற்றுத் திகழ்பவர் என்பதை,

கடையர் அறிவிலார்; இடையர் சிறிதே
உடையர்; தலையார் உணர்ந்தார்—தடையின்றி
வெள்ளத் தமிழின் இலக்கியம் வேண்டினோர்க்(கு)
உள்ளத் துணர்வு வரும்

என்ற வெண்பாவால் விளக்குகின்றார்.

**தமிழ்ப் பாதுகாப்பு :**

தமிழுக்கு ஊறு என்றால் உயிர் நமக்குப் பெரிதல்ல. தமிழைக் காக்க உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்தாக வேண்டும்.

''எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத் தமிழ்மொழிக்கே தருவோம்''

என்பது தமிழன் ஒவ்வொருவரின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

''பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே—உடற்
பச்சைரத் தம்பரி மாறிடுவோம்''

என்பது போர்ப் பரணியாக ஒலிக்க வேண்டும். தமிழைக் காப்பதிலும் தமிழ் உயர்வைப் பேணுவதிலும் இடுக்கண் நேருமானால் அந்த இடுக்கணை ஒருவன் தனக்கு நேர்ந்த இன்பமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ''தமிழுக்காகச் சிறை செல்ல நேரிட்டால் அதைச் சிறை என்று கருதாதே; திருமண அறை என்று கருது'' என்கிறார் பாவேந்தர்.

''சிறையறை திருமண அறை உனக்கு''

தமிழ் எனும்போது சிறை அறையே மண அறையாக மாறிவிடுகிறது.

**எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!**

மணக்க வரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை!

என்ற அவருடைய மனக்குறை இன்றும் முற்றிலும் அகன்றுவிட்டது என்று கூறுதற்கில்லை. குறையகன்று நிறைகாணப் பாவேந்தரின் தமிழுணர்வு நமக்கு வழிகாட்டியாய் அமைவதாக! அவருடைய பாடல்களைப் படிக்கின்ற நாம், 'தமிழா ஒன்றுபடு; தமிழால் ஒன்றுபடு; தமிழுக்காக ஒன்றுபடு'' என்ற உணர்வைப் பெற்று, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்குவோமாக!

## பாவேந்தரின் திரைப்படத் தொண்டு

| | |
|---|---|
| 1937 | பாலாமணி அல்லது பக்காத் திருடன் திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதினார் (திரு டி. கே. சண்முகம் சகோதரர்கள் நடித்தனர்.) |
| 1939 | கவிகாளமேகம் - திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். (நாதசுரச் சக்கரவர்த்தி திரு டி. என். இராசரத்தினம் கதாநாயகனாக நடித்தார்) |
| 1944 | சுலோசனா (திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான திரு டி. ஆர். சுந்தரம் கதாநாயகனாக நடித்தார்) |
| 1947 | ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி. (திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். திரு பி. எஸ். கோவிந்தன் கதாநாயகனாக நடித்தார்) |
| 1949 | பொன்முடி (எதிர்பாராத முத்தம் என்னும் காவியம், பொன்முடி என்னும் பெயரால் தயாரித்து வெளியிடப்பட்டது. திரு பி. வி. நரசிம்மபாரதி கதாநாயகனாக நடித்தார்) |
| 1952 | வளையாபதி (திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். ஜி. முத்துக்கிருஷ்ணன் கதாநாயகனாக நடித்தார். இதன்பின்னர், அவர் வளையாபதி முத்துக்கிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டார்.) |

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

# 2 சிறப்பு முதற் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 லட்சம்

## 3 சிறப்பு இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1 லட்சம்

(எல்லா வரிசைகளுக்கும் பொது)

**ஆண்டுக்கு ஒரு நாள்
திருநாள் —
வாழ்வில்
ஆனந்தம் பொங்கும்
புது நாள்.
புத்தாண்டு நன்னாளில்
பொன்னான வாய்ப்பு!
தமிழ் புத்தாண்டுச்
சிறப்புக் குலுக்கல்**

தவிர ஒவ்வொரு வரிசைக்கும் இரண்டு முதற் பரிசுகள். ஒவ்வொன்றும் ரூ. 50,000. மற்றும் உள்ளம் மகிழ் விக்கும் உன்னதப் பரிசுகள். மொத்தப் பரிசுகள் 13,075. மொத்தப் பரிசுத்தொகை ரூ. 41 லட்சம்.

பரிசுச் சீட்டின் விலை: ரூ. 1.

குலுக்கல் தேதி: 20-4-1978.

**கிராமங்களில் குடிநீர் வழங்கும் நற்பணி மேலோங்கிட இன்றே வாங்குவீர் தமிழ்நாடு பரிசுச்சீட்டு!**




வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச்சீட்டுத் திட்டம்,
சென்னை 600 002

காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

# அண்ணா எனும் இலக்கியவாதி

⑥

-பி.சி.கணேசன்

அண்ணா பல்வேறு இலக்கிய வடிவங்களைப் பிரச்சாரத்திற்குத் தேர்ந்து எடுத்துக் கொண்டாரே தவிர எந்த ஓர் இலக்கிய வடிவத்திலும் தனிக் கவனம் செலுத்தினார் என்று சொல்ல முடியாது. எதைத் தொட்டாலும் அதைச் சிறப்பாகச் செய்யும் ஆற்றல் அண்ணாவிடம் இருந்தது. அதனால்தான் பிரச்சாரம் என்கிற அளவில் இலக்கியத்தின் மூலமாக அவர் செய்த காரியங்கள் பெருமளவுக்கு அவருக்கு வெற்றியைத் தேடித் தந்தன.

இலக்கிய வடிவங்களை அமைக்கும்போது அண்ணா அதில் மிகுந்த பிரயாசையும், கவனமும் எடுத்துக் கொண்டார். பிரச்சாரத்திற்காகப் பாத்திரப் படைப்புக்களைச் செய்தபோதும் பாத்திரங்கள் என்கிற தன்மையில் முரண்பாடு இல்லாமல் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டார். எதுகையும், மோனையும் அவர் நடைக்குத் தனிச் சிறப்புத் தந்தன என்பது உண்மை. 'அடுக்கு மொழி அண்ணா' என்ற அடைமொழியும் அவருக்கு இருந்தது உண்டு. ஆனால் பிரச்சாரத்திற்கு வலிவு என்கிற அளவிலே மட்டும்தான் அடுக்குத் தொடர்களையும் எதுகை மோனை உத்தியினையும் அவர் கையாண்டார். மற்றபடி எதுகை மோனை சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக எண்ணங்களை அவர் பின்னுக்குத் தள்ளியது கிடையாது. நடை அழகு வேண்டும் என்பதற்காகக் கருத்துக்களை அவர் பலி கொடுத்தது இல்லை. ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட கருத்தை வெளியிடத் தேவை என்றால் எதுகை இருக்க வேண்டுமே, மோனை அமைய வேண்டுமே என்பதற்காக அந்தச் சொல்லை நீக்கிவிட்டு வேறு சொல்லை அவர் தேடிச் செல்வது கிடையாது. அடுக்கு மொழி நடை என்பது அண்ணாவுக்கு இயற்கையாக அமைந்துவிட்ட ஒன்று. இன்னும் சொல்லப் போனால் அது தான் அண்ணாவின் பாணியும் ஆகும்.

இலக்கிய வடிவங்களை உருவாக்கும்போது சில சமயங்களில் சில தவறுகளைத் தெரிந்தே அண்ணா செய்தது உண்டு. ஆனால் அவர் ஓர் மேதை என்பதால் தவற்றினை, தான், உணர்ந்தே செய்து இருப்பதை வேறு ஒரு நிலையில் தெளிவாக்கிக் காட்டி விடுவார். இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்ல முடியும் என்றாலும் அண்ணா எழுதிய ''வேலைக்காரி'' திரைப்படக் காட்சியிலிருந்து ஒன்றை நான் சுட்டிக் காட்ட முடியும்:

''வேலைக்காரியில் குற்றம் சாட்டும் வக்கீல் பாத்திரத்தில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி நடிக்கிறார். அவர் தன்னுடைய கட்சியை வழக்கு மன்றத்தில் அடுக்கடுக்கான தொடர்களோடு நீண்ட நேரமாக விவாதிக்கிறார். நாடக பாணிக்காகச் சில வசனங்களையும் பேசுகிறார். இம்மாதிரியான சொற்பொழிவினை வக்கீல் நிகழ்த்துவதை கோர்ட் அனுமதிக்காது என்று அண்ணாவுக்குத் தெரியும். நாடக அமைப்புக்கு அது தேவை என்பதற்காக அண்ணா அருமையான வசனங்களை அந்தக் காட்சியில் அமைத்து இருக்கிறார். ஆனாலும் விமர்சகர்கள் அதைக் குறையாகச் சுட்டிக் காட்டக் கூடும் என்று எதிர்பார்த்துச் சாமர்த்தியமாக அந்த இடத்தில் எதிர் தரப்பு வக்கீலைக் குறுக்கிட வைக்கிறார். குறுக்கிடும் வக்கீல் அழுத்தம் திருத்தமாக ''கடிகாரம் இல்லாத இடத்தில் செய்ய வேண்டிய பிரசங்கத்தை நண்பர் இங்கே செய்கிறார் என்று நான் ஆட்சேபிக்கிறேன்'' என்று குறிப்பிடுகிறார்.

ஆக, பார்வையாளர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை அறிந்து பக்குவமாக இன்னொரு கதா பாத்திரத்தின் மூலமாகக் குறையைச் சரிக்கட்டி விடுகிறார். இதுதான் அண்ணாவின் பாணி. பிரச்சாரத்தையும் இலக்கியத்தையும் எப்படிப் பக்குவம் கெடாமல் இணைப்பது என்பது அண்ணாவுக்கு நன்கு தெரியும்.

அவர் எழுதிய அனைத்துமே பிரச்சாரங்களாகத்தான் இருந்தன. பிரச்சாரத்தை விட்டுவிட்டு அண்ணா எதையும் எழுதியதில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியும். இதனால் அரசியல்வாதி அண்ணாவுக்குள்ளே இலக்கியவாதி அண்ணா மறைந்து போனார். இலக்கியத்தின் அங்கமான எல்லாத் துறைகளையும் அவர் தொட்டாரே தவிர எந்தத் துறையிலும் அவர் தனியான சாதனை புரிந்தார் என்று சொல்ல முடியாமல் போய்விட்டது. இந்த உண்மை அண்ணாவுக்கும் தெரியும்.

என்னை ஒட்டி நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கொண்டு இதை 1952-ஆம் ஆண்டிலேயே நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். கா. சா. சுப்பாராவ் அப்போது நடத்திக் கொண்டிருந்த ''சுதந்திரா'' ஆங்கில வார இதழ் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. இந்தியாவின் இரண்டு சிறந்த ஆங்கிலப் பத்திரிகையாளர்கள் (English Journalists) என்று சொல்லப் பட்ட இருவரில் ஒருவராக காசா சுப்பாராவ் விளங்கினார். மற்றொருவர் போத்தன் ஜோசப்; அப்போதே அண்ணாவின் எழுத்துக்களில் அதிகமான ஈடுபாடும்

மயக்கமும் கொண்டிருந்தவன் நான். ஆகவே, கா சா சுப்பா ராவ் 'சுதந்திரா' இதழுக்கு அண்ணாவின் எழுத்தாற்றலை விமர்சித்துக் கட்டுரை ஒன்றை எழுதினேன். அப்போது இருந்த சூழ்நிலையில் அண்ணாவைப் பற்றிய கட்டுரையை 'சுதந்திரா' போன்ற ஆங்கில வார இதழ் வெளியிடுமா என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருந்தது. ஆங்கிலத்தில் வெளி வந்த வார இதழில் 'சுதந்திரா' இலக்கியத் தரம் உடையது என்பதால் அந்தப் பத்திரிகைக்கு அண்ணாவைப் பற்றிய விமர்சனக் கட்டுரையை அனுப்பி வைத்தேன். காசா சுப்பாராவ் பெருந்தன்மையோடு அதைப் பிரசுரித்தார். அண்ணாவைப் பற்றி முதல் முதல் வெளியான ஆங்கிலக் கட்டுரையும் அதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தக் கட்டுரையில் சிறு கதைத் துறையில் அண்ணா படு தோல்வி அடைந்து விட்டார் என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். பெர்னார்ட் ஷாவின் பாணியை அவர் சிறு கதைகளில் பின்பற்றுவதாகவும், ஆனால் அந்த முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை என்றும் குறிப்பிட்டு இருந்தேன். கட்டுரை முழுவதிலும் அண்ணாவின் எழுத்தைச் சிறப்பித்து நான் எழுதி இருந்த போதிலும் சிறு கதைத் துறையில் அவர் தோல்வி அடைந்து விட்டார் என்று குறிப்பிட்டுள்ளதை அவருடைய ரசிகர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அண்ணாவைப் பற்றி முதல் முதல் வெளி வந்த ஆங்கிலக் கட்டுரை என்பதால் அது பரபரப்பை ஏற்படுத்தியது போலவே, சிறு கதைத் துறையில் அண்ணாவைப் பற்றி நான் குறிப்பிட்டுள்ள விஷயத்தால் அது இன்னொரு வகையில் புயலை ஏற்படுத்தியது.

ஆனால், இதனால் பாதிக்கப் படாமல் என்னிடத்தில் அண்ணா மிகுந்த அக்கறையினைக் காட்டத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. 'கவனமாகப் பரிசீலித்துச் சரியாக எடை போட்டு விமர்சனம் செய்து இருக்கிறார்' என்று அண்ணா தனக்கு நெருக்கமான நண்பர்கள் சிலரிடத்திலே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்.

இந்தக் கட்டுரையில் இதை நான் குறிப்பிடுவதற்குச் சிறப்பான காரணம் உண்டு. அண்ணா ஒரு முதிர்ந்த, பண்பட்ட, இலக்கியவாதியாக இருந்ததால் தன்னுடைய எழுத்துக்களின் குறைகளைப் பிறர் விமர்சிக்கும்போது அதை அவர் பாராட்டவே செய்தார். என்னுடைய கட்டுரை வெளியான பிறகு அண்ணா என்னைப் பார்க்க வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்க, அவரைச் சந்தித்து அவருடைய அன்புக்குப் பாத்திரமாகும் வாய்ப்பை நான் பெற்றேன்.

கடுமையான விமர்சனங்களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் பண்பாளராக அண்ணா இருந்தார்.

— தொடரும்

தமது வெளியீட்டின் தரத்தைத் தாமே ஒப்புக்கொண்டு பேசுவது பாவேந்தரின் சிறப்பியல்பாகும். அதற்குச் சான்று பகர்கிறது "காதலா, கடமையா' என்னும் தமது நூலுக்கு அவரே எழுதியுள்ள இந்த முன்னுரை.

# பாவேந்தரின் பதிப்புரை

இந்நூலை நான் பல ஆண்டுகளின் முன் எழுதினேன். சில ஆண்டுகளின் முன் அச்சிட எண்ணினேன். அச்சிட்டேன் பல திங்கள் முன். ஒரு திங்கள் ஆயிற்று மேலட்டைபோட. மிக விரைவில் நூல் வேலை முடிந்து விட்டதல்லவா?

ஏன் இப்படி—நானே என் நூலை வெளியிட வேண்டும்? எனக்குரிய அச்சகத்தில்தான் அச்சாக வேண்டும்— இப்படி ஓர் உறுதி.

உறுதி சரிதான். அவ்வுறுதியை நிறைவேற்ற அச்சகம் நல்ல முறையில் விரிவாக ஏற்பாடு செய்யப்பட்டதா? அதுதான் கிடையாது! மிகச் சிறிது.

இந்தப் பதிப்பு மிக மட்டம். என் வாடிக்கைக்காரர் உயர்ந்த பதிப்பைப் பெரு விலை கொடுத்து வாங்க வருந்துகிறார்கள். பணக்காரர் மட்டும் வாங்கினால் போதும் என்றும் நான் நினைப்பதில்லை.

இந்நூலின் நடை சிறிது கடினமாகத் தோன்றலாம்.

படிப்பவர்க்கு—அருகிலிருக்கும் மொழிகளையே அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சிறிது தொலைவில் குவிந்திருக்கும் அரிய மொழிகளில் சிலவற்றையேனும் புலப்படுத்தத்தான் வேண்டும்.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**டாகடர். ச. வே. சுப்பிரமணியன்**

'யா'தும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கை மானிடம் தழுவிய கொள்கை என்பது உலகறிந்த உண்மை. அதனை ஆராய்ச்சி உலகத்திலும் நடு நாயகக் கொள்கையாக ஏற்று, நாளும் தமிழாராய்ச்சிப் பணியைப் பரப்பி வருவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

உலகின் பல பகுதிகளிலும் தமிழாராய்ச்சி தொடங்கப் பெற்று அதனை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாகப் போற்றும் வகையில் பல அறிஞர்கள் பணி புரிந்து வருவதை யாவரும் அறிவர்.

'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற புதுமைக் கவியின் பொன்மொழிக் கேற்ப நம்மவர் பண்பாட்டுச் செல்வத்தை மேலைநாட்டார் நன்கு அறிந்து போற்றிடப் பல முதல் முயற்சிகளில் இவ்வாய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. வெளிநாட்டார், நம்மவரின் இலக்கியச் செல்வத்தையும், பண்பாட்டுக் கருவூலத்தையும், நாகரிக நல்லொளியையும் கண்டு போற்றும் வண்ணம் பல திட்டங்களை உருவாக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நிறுவனம் கருக்கொள்ளத் திட்டம் தீட்டியவர் பூனா டெக்கான் கல்லூரி ஆராய்ச்சிக் கழக நெறியாளர் டாக்டர் எஸ். எம். கத்ரே. மேலும் இது அமைதற்கு உரிய தொடக்க காலத் திட்டங்களை அவர் சுட்டிக் காட்டினார்.

அதன் பெருமையையும், சிறப்பையும், தொலைநோக்கையும், உணர்ந்த அன்றைய தமிழ்நாடு முதல்வர் பேரறிஞர் அண்ணா உடனடியாக அத்திட்டம் உருவாகப் பச்சைக் கொடி காட்டினார். அவர், தம் செம்மாந்த மொழியில் தமிழறிஞர்களை நோக்கிப் 'பிரெஞ்சுக் கலைக் கழகத்தின் அடிப்படையில் நீங்கள் இந்நிறுவனத்தை உருவாக்குங்கள். அப்படி உருவாக்கும் நிறுவனம் வளமான நிறுவனமாக நிலை பெறும். அதற்குத் தமிழ்நாடு அரசு தன்னால் இயன்ற உதவியை என்றும் செய்யத் தயங்காது'' என உறுதி அளித்தார். அவர் தந்த உறுதிமொழியின் உரத்தால் இந்நிறுவனம் இன்று செழித்து வளர்ந்து வருகிறது.

தமிழகத்தில் தோன்றிய இந்நிறுவனத்தின் வளர்ச்சியை உலகம் தழுவிய வளர்ச்சியாக மாற்றப் பேரார்வம் கொண்டார் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா. யுனெஸ்கோ அரங்கில் இதனை முன் வைத்து இதன் வளர்ச்சிக்கு உரிய உதவிகளைச் செய்ய முன் வந்தார். அதன் விளைவாக இன்று இந்நிறுவனம் யுனெஸ்கோ உதவிகள் பல பெற்று மேலும் வலுவுடையத் தன்னை வளர்த்து வருகிறது.

இந்நிறுவனம் 1970-ல் தொடங்கியது. அன்று முதல் இன்றுவரை, பல தமிழறிஞர்களின் இயக்கும் நெறியில் நல்லுரம் பெற்றுள்ளது. ஆராய்ச்சி வளர்வதற்கு ஆவன செய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியில் தேர்ந்தெடுத்த பண்பாட்டின் ஆழத்தைப் பற்றி ஆராய்வது, உலகம் தழுவிய உயர் அளவு ஆய்வுத் திட்டங்களை முடிப்பது எனும் இந்நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்களை அறிந்த பல நாட்டு நல்லறிஞர்கள் உடனுக்குடன் தத்தம் உதவிகளை நல்குவதாக உறுதி அளித்தனர்.

இதுவரை புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ்ப் பண்பாட்டுக் கல்வியை மேலைநாடுகள் உணரத் தம்மால் ஆவனவற்றைச் செய்வதாக வாஷிங்டன் பல்கலைக் கழக வடமொழிப் பேராசிரியர் எட்வின் ஜெரோ கூறினார். மேற்கு ஆஸ்திரேலியாப் பல்கலைக் கழகத்திலுள்ள ஆசிய மைய ஆய்வு நிறுவன நெறியாளர் ஓவன் இந்நிறுவனத்துடன் தம்மால் இயன்ற அளவு உறவு கொண்டு, ஆக்கப் பணிகள் புரிவதாக வாக்களித்தார்.

பேராசிரியர் கமில் சுலபில் தம் குழுவுடன் இணைந்து ஆய்வு நெறிகளைச் சீரிய முறையில் கூறவும், கல்வி அமைப்பு நெறிகள் பற்றி நேரிடையாகத் தொடர்பு கொள்ளவும், அறிஞர்களைப் பருவங்கள் தோறும் ஆய்வு வளர்ச்சிக்காகப் பரிமாறிக் கொள்ளவும் முன்வந்தார். இவ்வாறு இந்நிறுவனம் வெளிநாட்டார் துணைபெறுதற்குத் தக்கதோர் கொள்கலமாக விளங்குகிறது.

யுனெஸ்கோவின் உதவியால் அமெரிக்கா, போன்ற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தலைசிறந்த பல்கலைக் கழகங்களில் மொழி கற்பிக்கும் நெறிகள், இலக்கியத் திறனாய்வு பற்றி ஆழ்ந்த புலமை பெற்று வரச் சில ஆய்வாளர்கள் சென்று, திறம் பெற்றுத் திரும்பி வந்தனர். அதன் விளைவை நிறுவனம் பல துறைகளிலும் பயன் படுத்தி வருகிறது.

1972 முதல் அடையாறு பல்தொழில் நுட்ப மையத்தில் நிறுவனம் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கென 5 ஏக்கர் நிலமும் கட்டடம் கட்ட 5.25 இலட்சம் ரூபாயும் ஒதுக்கி, விரைவில் நிறுவனத்திற்கெனத் தனிக் கட்டடம் அமைத்திடப் பெரிதும் முயன்று வருகிறது.

தமிழ் ஆய்வு நன்கு நடைபெற அவ்வப்போது வெளிவரும் சிறந்த தமிழ்-ஆங்கில மற்றுமுள்ள மொழிகளில் வெளியாகும் நூல்களை உடனுக்குடன் இந்நிறுவனம் வாங்கி நூலக வளத்தைப் பெருக்குகிறது. அதன் விளைவாக, இக்குறுகிய காலத்திற்குள் 10,000-க்கு மேற்பட்ட புத்தகங்களும், இவை தவிர ஆய்வு இதழ்களும் கட்டுரைகளும் நூலகக் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. இதனால் ஆராய்ச்சி பற்றி அண்மையில் வெளிவந்துள்ளவை குறித்து அறிந்து அவற்றைப் பயன்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்து தரமுடிகிறது. தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்து ஆய்வு மாணவர்கள், அறிஞர்கள் அவ்வப்போது வந்து நூலகத்தை நன்கு பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக வெளிநாட்டு ஆய்வு மாணவர்கள், தமிழ் பயிலுவோர் ஆகியோர் இதன் பயனை நன்கு துய்க்கின்றனர்.

அரிய நூல்கள் பலவற்றை யுனெஸ்கோ இந்நூலகத்திற்கு நன்கொடையாக நல்கியிருப்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். மேலும் அது நல்கிய மின்படிப் பொறியால் பல அரிய ஏடுகளைப் படியெடுத்து வைக்க முடிகிறது, ஆய்வாளர்கள் அதனைப் பயன் படுத்தவும் முடிகிறது.

வெளிநாட்டார் தமிழைக் கற்க யுனெஸ்கோ நல்கிய மொழிப் பயிற்சிக் கூடம் மிக உயர்ந்த கலை நுணுக்கமுடைய பகுதியாகும். இது நிறுவனத்திலமைந்

துள்ள தனிச் சிறப்புப் பகுதி யாகும்.

இதில் எளிமையாகவும் இனிமையாகவும் தமிழ்க் கல்வியைத் தொடக்க நிலையிலும், உயர்நிலையிலும் பலரும் கற்று மகிழ்கின்றனர். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ் பயின்றுள்ளனர். அவர்களில் 44 பேர் வெளிநாட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கெனப் பயிற்சி நூல் ஒன்றினை நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தமிழ் ஆய்வினை உலக அறிஞர்கள் அறிவதற்கென இந்நிறுவனம் ஆண்டிற்கு இருமுறை வெளிவரும் 'தமிழியல்' இதழை 1972 முதல் வெளியிட்டு வருகிறது.

மேல்நாட்டு அறிஞர்களில் ஆண்டர்னேவ், ஆஷர், எமனேவ், கமில் சுவலபில், பிலியோசா போன்றவர்களும் பல தலைசிறந்த ஆய்வாளர்களும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவ்விதம் உலகில் பலநாடுகளிலுமுள்ள பல்கலைக் கழக ஆய்வுத் துறைகளின் தமிழாய்வு பற்றிய செய்தியை நல்கும் துணைவனாக விளங்குகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் ஆய்வு செய்வதற்குரிய நிலையமாக இந்நிறுவனத்தை ஏற்றுள்ளது. அதனால் 30 ஆய்வு மாணவர்கள் டாக்டர் பட்டத்திற்கெனப் பல்வேறு துறைகளில்—குறிப்பாக இலக்கணம், இலக்கியம், மொழியியல், நாட்டுப்புற இயல், ஒப்பிலக்கியம் போன்றவற்றில் ஆய்வு செய்து வருகின்றனர். திங்கள் தோறும் ஆய்வாளர்கள் கூடி ஆய்வுக் கட்டுரைகள் எழுதிக் கலந்துரையாடி ஆய்வைப் பெருக்குகின்றனர். தமிழகத்திலுள்ள பல ஆய்வு அறிஞர்களின் துணைகொண்டும் நிறுவன ஆய்வு அலுவலர்களின் துணைகொண்டும் இதுவரை 43 கருத்தரங்குகளில் இலக்கியக் கொள்கை பற்றிய ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளன. அவற்றை இரு தொகுதியாக இதுவரை நிறுவனம் வெளியிட்டுத் தமிழ் இலக்கியக் கொள்கையை உருவாக்கும் தனது பங்கை ஆற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் மதிப்புறு இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் மு. வ. அவர்களது எதிர்பாராத மறைவினால் அவரது நினைவு குறித்து டாக்டர் மு. வ. பற்றிய ஆய்வு நூலை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

நிறுவனத்தின் சிறப்புக் கருத்தரங்குகளில், ஆராய்ச்சி நெறிமுறைகள் பற்றி 1975 டிசம்பரிலும் நாட்டுப்புற இயல் பற்றி 1977 ஏப்ரலிலும், தமிழரின் பண்பாட்டு மரபுச் செல்வம் குறித்து 1978 பிப்ரவரியிலும் பல அறிஞர்கள் கட்டுரைகள் வெளியிட்டனர். இதனால் ஆய்வுக்கு அடிப்படையான நெறிமுறைகளைப் பல துறைகளின் அறிஞர்கள் வாயிலாக நன்முறையில் அறிந்து, அதனை ஆய்வுக் களத்தில் பயன்படுத்த 'ஆராய்ச்சி நெறிமுறைகள்' என்ற நூலினை நிறுவனம் வெளியிட்டது. இப்பணியின் தொடர்ச்சியாகத் தமிழ் ஆய்விதழ்களில் வெளிவந்த ஆய்வுச் செய்திக் கதிர் மணிகளையும் இதுவரை தமிழில் வெளிவந்த டாக்டர் பட்ட ஆய்வுரைப் பட்டியலையும், மற்றும் முற்ற பட்டங்களுக்கு அளித்த ஆய்வு நூல்களின் பட்டியலையும் தொகுத்து வெளியிட்டுள்ளது. இது எதிர்காலத் தமிழ் ஆய்வாளர்களுக்குப் பெரும் துணை புரியும் ஏடுகளாகும்.

தமிழில் காணும் விடுகதைகளை எல்லாம் திரட்டி இதுவரை தமிழில் வெளிவராத வண்ணம் வெளியிட்டுள்ளது. அதுபோன்று தனிப்பட்ட முறையில் அடியார்க்கு நல்லாரின் உரைத்திறன், வெளி வந்துள்ளது. உலகில் தமிழ் ஆராய்ச்சி எங்கெங்கு எங்ஙனம் நடைபெறுகிறதென்பதை எளிய முறையில் அறியும் வகையில் 'உலகில் தமிழும் தமிழரும்' என்ற நூலினை வெளியிட்டுள்ளது.

மைசூரிலுள்ள நடுவண்-மைய மொழிகள் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றியதன் வாயிலாகத் தமிழகத்தில் கல்லூரி புகும் மாணவர்க்கு மொழி இணைப்புப் பயிற்சி, தக்கதோர் பாலமாக அமையத் தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்து, 6 மொழிப் பயிற்சி நூல்கள் தமிழில் வெளிவர நிறுவனம் துணை செய்தமை குறிப்பிடத் தக்கது. 'செக்' நாட்டு அறிஞர் 'வாசக்' என்பவருடன் இணைந்து பிறமொழியினர்க்குத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப் படுத்தும் பணியில் இந்நிறுவனம் முனைந்துள்ளது.

நிறுவனத்தின் சிறப்புப் பணியெனக் குறிப்பிட விழையும் போது, தமிழ் இலக்கியத்தை வெளி உலகத்தார் அறியும் வண்ணம் 'தமிழ் இலக்கியத் துணைவன்' என்ற பெரு நூலினை ஆக்ஸ்போர்டு வெளியிட்ட ஆங்கில இலக்கியத் துணைவன் சென்ற நெறியில் உருவாக்கத் தன்னால் இயன்ற ஆய்வுப் பணியினைச் செய்து வருகிறது.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்றல், இதுவரை தமிழில் வெளிவந்துள்ள பிறமொழி இலக்கியங்கள், பிறமொழிகளில் வெளியிடப்பட்ட தமிழ் இலக்கியங்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்தல் ஆகிய நல்வாய்வுப் பணிகளை நடத்தும் முயற்சிகளில் இந்நிறுவனம் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. இத்தகைய பணிக்குத் தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் ஊக்கமும், உறுபொருளும் நல்குவது பேரறிஞர் அண்ணா காட்டிய வழிக்குத் துணை செய்து வளமூட்டுவதாகும்.

## பாரதியாரைப் போலவே....

பாரதியாரைப்பற்றி நல்ல விவரங்கள் கொடுக்கக் கூடியவர்களுள் முதன்மையானவர் மண்டையம் சீனிவாஸாச்சாரியர். அவர் சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் வசித்து வருகிறார். இன்னொருவர் துரைசாமி ஐயர். இவர் சென்னையில் பிரபல வக்கீல். ராயப்பேட்டையில் பழைய ''பாம் குரோவ்'' என்ற பங்களாவில் இருந்தார். இப்பொழுது புதுச்சேரியில் அரவிந்த ஆசிரமத்திலேயே இருந்து வருகிறார். ''லோகோபகாரி'' பத்திரிகையின் ஆசிரியர் பரலி சு. நெல்லையப்ப பிள்ளைக்குப் பல குறிப்புகள் தெரிந்திருக்கலாம். பாரதியாரின் மனைவி திருமதி செல்லம்மாள், பாரதியாரின் குடும்ப வாழ்க்கையையும் மற்றும் பல விவரங்களையும் பற்றி உண்மையான தகவல்களைத் தர முடியும். புதுச்சேரியில் வசிப்பவரும் ''பாரதிதாஸன்'' என்ற புனை பெயருடன் பாரதியாரைப் போலவே அருமையாகக் கவி பாடும் ஆற்றல் கொண்டவருமான வாத்தியார் சுப்புரத்தினம், பல விநோதத் துக்கடாக்கள் சொல்லக்கூடும்.

—1944 ஆம் ஆண்டில் அறிஞர் வ. ரா. அவர்கள் எழுதி வெளிவந்த 'மகாகவி பாரதியார்' என்னும் நூலிலிருந்து.

# கத்தரிக்காய் வெண்டைக்காய்-விரதம்

## -மே.சு.பரதன்

என் தந்தையார் புலவர் மே. சக்கரவர்த்தி நயினார் அவர்கள் முத்தமிழ் நிலையம் என்ற பெயரில் பல புத்தகங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவுகளை நூலாக்கி மிகக் குறைந்த விலையில் தமிழகமெங்கும் பரப்பி வந்தார்கள்.

அப்போதுதான் என் தந்தையாருக்கும், பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. அடிக்கடி எங்கள் வீட்டிற்குப் பாவேந்தர் வருவார். மணிக்கணக்காக இருவரும் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

காலையில் பாவேந்தர் வருகிறார் என்றால் அன்று மாலை வரை இருப்பார் என்று அதற்குப் பொருள்.

எப்போதும் ரிக்ஷாவில்தான் வருவார்கள். எங்கள் வீட்டுக் கூடத்தில் பெரிய ஈசிசேர் போட்டிருக்கும். வந்த உடனே அந்த ஈசிசேரில்தான் சாய்ந்து கொள்வார்கள்.

''நயினார்! கறியும், மீனுமாகத் தின்று அலுத்துப் போச்சுப்பா, இன்றைக்கு-கத்தரிக்காய், முருங்கைக்காய் விரதம். அம்மாவைக் கூப்பிடு. சமையலுக்குச் சொல்லிடணும்'' என்பார்.

தென்னாட்டுச் சமணர்களிடம் ஒரு மரபு இருக்கிறது. அது, வீட்டிற்கு யார் வந்தாலும் உடனே எதிர்ப்படும் அனைவரும் வந்தவரை உடனே 'வாருங்கள்' என்று சொல்லி வாயார வரவேற்பார்கள். அதன் பின்னரே வந்தவர் யாரென்றும், எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதையும் விசாரித்துத் தெரிந்து கொள்வார்கள்.

அந்த மரபுக்கு ஒப்ப எங்கள் வீட்டிலும் அனைவரும் எதிரே வந்து 'வாருங்கள்' என்று அழைப்பது வழக்கம்.

''என்னப்பா, நயினார்! குஞ்சு குழந்தை முதல் எல்லோரும் வாருங்கள், வாருங்கள் என்று கூப்பிடுறாங்களே! நல்லபழக்கம்பா, சிலர் வீட்டுக்குப்போனால் 'எங்க வந்தீங்க, நீங்கயாரு? என்ன வேணும்?' என்பாங்க! வாங்க, வாங்கண்ணு கூப்பிடறதே மனசுக்கு மகிழ்ச்சியாய் இருக்குப்பா'' என்பார்.

'வாருங்கள், வாருங்கள்' என்று வாயார வரவேற்கும் பண்புக்காகவே ஒரு நாள் பாவேந்தர் ஒரு பாடலையே எழுதிக் கொடுத்துவிட்டார். (அந்தப் பாடல் தற்போது பூம்புகார் பிரசுரத்தினர் வெளியிடும் 'புகழ் மலர்கள்' என்ற பாவேந்தரின் நூலில் இடம் பெற்றிருக்கிறது.)

சமையற்கட்டிலிருந்து என் தாயார் வந்து 'வாருங்கள்' என்பார்கள்.

''இதோடு பத்துப் பேருக்கு மேலே வாருங்கள், வாருங்கள் என்று கூப்பிட்டு விட்டார்கள். நீங்கள் பதினொன்றாவது; தலையை ஆட்டி ஆட்டி, கழுத்து வலிக்கிறது. இனிமே மொத்தப் பேருக்குமாகச்சேர்த்து யாராவது ஒருத்தர் வாங்கண்ணு கூப்பிட்டாப் போதும்'' என்பார்.

''இதோ பாரும்மா, இன்னிக்கு இங்கதான் சாப்பாடு, என்ன சமைக்கப் போறே?'' என்பார்.

ஆலங்குப்பம் சிற்றூரில் புயல் அடித்தபோது, பாவேந்தரால் காக்கப் பெற்ற வைத்திலிங்கம் என்பவர் பாவேந்தருக்கு வலப்புறத்தில் இருக்கிறார். இடப்புறத்தில் அதே சிற்றூரைச் சேர்ந்த விவசாயி அமர்ந்திருக்கிறார்.



பதில் சொல்வதற்கு முன்னர் அவரே சொல்ல ஆரம்பித்து விடுவார்.

''கத்தரிக்காய், முருங்கைக் காய் சாம்பார். மாங்காய் கிடைத்தால் இரண்டு துண்டு நறுக்கிப் போட்டால் நல்லா யிருக்கும். மணத்தக்காளிக் கீரையும், பச்சைப் பயிறும் போட்டு கூட்டு; ஏதாவது ஒரு கீரை கடைஞ்சு வச்சுடு. நல்ல ரசம். மத்தப்படி இருக்கிற காய்கறியிலே ஏதோ கூட்டும் பொரியலும் செய்தாப்போதும்''

சமையல் வகைகள் அவர் கேட்டவாறே தொடங்கிவிடும்.

இதற்குள் இரண்டு மணி நேரம் கடந்திருக்கும். என் தகப்பனாரும், பாவேந்தரும் காரசாரமான விவாதத்தில் இறங்கி விட்டிருப்பார்கள்.

என்ன விவாதம் தெரியுமா? மரக்கறி உணவையும், மாமிச உணவையும் பற்றித்தான்.

''மரக்கறி உணவு சாப்பிட்ட வர்களால்தான் தமிழில் ஐம் பெருங்காப்பியங்களைச் செய்ய முடிந்தது. திருக்குறள் எழுத முடிந்தது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களை எழுத முடிந் தது. சிரஞ்சீவி இலக்கியங்களை யும், தமிழுக்கு இலக்கணத்தை யும் வகுத்தவர்கள் மரக்கறி உண்டவர்கள்தான்'' என்று என் தகப்பனார் வாதிப்பார்.

பாவேந்தருக்கு ஆவேசம் வந்துவிடும். ''யோவ், நயினாரே, வரட்டுவாதம் எடுபடாதய்யா'' என்று ஆரம்பிப்பார்.

சங்க இலக்கியங்களில் மாமி சம் உண்டதைப் பற்றிய இடங் களையெல்லாம் எடுத்து விளக்கு வார்.

மணிக்கணக்காக-இதே பேச் சையே அலுக்காமல் இப்படியே பேசிக் கொண்டிருப்பார்கள்.

மதியம் இரண்டு மணி அளவில் தான் சாப்பிட உட்காருவோம்.

அவர் காலையில் கேட்டவாறே சமையல் நடந்திருக்கும். அவர் கேட்காத-ஆனால் அவருக்கு மிக வும் பிடித்த வாழைப்பூக் கலந்த மசால்வடையும் பரிமாறப்படும்.

உடனே பெருங்குரலில் ''ஆஹா, வாழைப்பூ வடை கூடவா!'' என்று மகிழ்ச்சியுடன் கூவுவார். ஆர அமர நன்றாக ரசித்துச் சாப்பிடுவார். எங் களோடு கவிஞர் குயிலன், காலஞ்சென்ற கவிஞர் தமிழ் ஒளி ஆகியோரும் கலந்து கொள் வார்கள். எல்லோரும் உண்டு முடித்ததும் மீண்டும் இலக்கிய விவாதம் தொடரும். ஓயவே ஓயாது.

இதற்கிடையில் மீண்டும் என் தாயாரைக் கூப்பிடுவார்.

''சாயந்திரம் என்னம்மா பல காரம் செய்யப் போறே? நான் ஆறு மணிக்கெல்லாம் போகணும்'' என்பார்.

''என்ன பலகாரம் வேண்டு டுமோ சொல்லுங்க ஐயா, அதையே செய்துடுறேன'' என் பார்கள் என்தாயார்.

''நயினார் வீட்டுகளிலே செய் வீங்களே அந்த அரிசிப் பூரி அதையே செய்துடும்மா. போன தடவை உங்க வீட்டுக்கு வந்த போது சாப்பிட்டதுதான். கூடவே வேர்க்கடலைச் சட்டினி செய்துட ணும்'' என்பார்.

தென்னாட்டுச் சமணர்கள் வீடு களில் மட்டுமே செய்யும் ஒரு பலகாரம் உண்டு. அதற்கு 'வெள்ளைப்பூரி' என்று பெயர். அரிசியும், துவரம்பருப்பும் கலந்து, பூண்டும் பச்சை வெங் காயமும் போட்டு அரைத்த மாவி னால் செய்யும் பூரியாகும். இது கோதுமைப் பூரிபோலவே உப்பிக் கொண்டு இருக்கும். அதில் எள் ளும் சேர்த்திருப்பார்கள். இந்த அரிசிப் பூரி மிகவும் சுவையுடை யது. சமணர்கள் வீடுகளில் தவிர வேறு எங்கும் இந்த வகைப் பலகாரம் நிச்சயமாகக் கிடை யாது. இதற்குத் தொட்டுக் கொள்ள வேர்க்கடலைச் சட்டினி தான் மிகவும் ருசியாய் இருக்கும்.

இந்தப் பலகாரத்தை ஒரு முறை சாப்பிட்ட பாவேந்தர் அவர்கள், பின்னர் எப்போது வந்தாலும் இந்த வெள்ளைப் பூரியையே செய்யச் சொல்லி விரும்பிச் சாப்பிடுவார்.

மாலை ஐந்து மணிக்குப் பிறகு மேற்கூறிய பலகாரத்தைச் சாப் பிட்டுவிட்டுத்தான் கிளம்புவார்.

'இன்னிக்கு கத்தரிக்காய் - முருங்கைக்காய் விரதம்பா'— விரதம் முடிஞ்சுது! எல்லாருக் கும் போயிட்டு வாரேன்' என்று கூறிக் கொண்டு சிறுவர்களாய் இருந்த எங்களுக்கெல்லாம் ஓரணா, இரண்டணா அன்பளிப்புத் தருவார். நாங்களும் மகிழ்ச்சி யுடன் வாங்கிக் கொள்வோம்.

ஒருநாள் காலையில் மழை லேசாகத் தூறிக் கொண்டிருந்தது. பாவேந்தர் வழக்கம்போல் ரிக் ஷாவில் வந்து இறங்கினார். நானும் என் சகோதரிகளும் கூச்சலிட்டவாறே அவரை வர வேற்கத் தெருவுக்கு ஓடினோம்.

சிறுவர் கும்பலிலே என் தம்பியை மட்டும் காணவில்லை. அவன் எங்கே போய்விட்டான்?

பாவேந்தரின் கையை இரண்டு பக்கமும் பிடித்துக்கொண்டு வீட்டினுள் கூச்சலும், கும்மாள முமாய் அழைத்துச் சென்றோம்.

கூடத்துத் தூணில் சாய்ந்து, கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு திருதுருவென்று விழித் துக் கொண்டே என் தம்பி நின்று கொண்டிருந்தான். அப் படி அவன் அமைதியாய் நின்று கொண்டு திருதிருவென்று விழித் துக் கொண்டிருந்தால் ஏதோ விஷமம் செய்திருக்கிறான் என்று அர்த்தம்.

எத்தனை நாற்காலிகள், சோபாக்கள் இருந்தாலும் பாவேந்தர் அவற்றில் அமர மாட்டார்கள். பெரிய 'ஈசி சேரில்'தான் சாய்ந்து படுத்து கால்களை நீட்டிக் கொள்வார்கள்.

நாங்கள் அழைத்து வந்ததும் பாவேந்தர் ஈசிசேரில் உட்கார்ந் தார்கள். 'தடால்' என்ற சத் தம்; ஈசிசேரின் துணிக்குக் குறுக்கே இருக்கும் மரச்சட்டம் கழற்றப்பட்டிருக்கிறது.

இதுவரை அமைதியாய் கம் பத்தின் ஓரம் நின்றிருந்த என் தம்பி, ''ஐ, பார்த்திங்களா? பாட்டு எழுதற தாத்தாவைத் தள்ளிவிட்டேன்'' என்று கை கொட்டிச் சிரிக்க ஆரம்பித்துவிட் டான்.

நாங்கள், விழுந்த பாவேந்த ரைக் கைத்தாங்கலாகத் தாங்கித் தூக்கிவிட்டோம்.

எழுந்த பாவேந்தர் என் தம்பியைப் பார்த்து, ''டேய், என்னைப் பாட்டாலே யாரும் தள்ள முடியாதுடா? சும்மா தாண்டா தள்ள முடியும்'' என்று கூறிச் சமாளித்தார்.

விழுந்து அடிபட்டபோதும் ''பாட்டாலே யாரும் என்னைத் தள்ள முடியாது' என்று சொன்ன பாவேந்தரின் வாக்கை நாங்கள் இதுவரை மறக்கவில்லை.

அன்றிலிருந்து பாவேந்தர் எப்போது எங்கள் வீட்டிற்கு வந்தாலும் முன்னெச்சரிக்கை யாகச் சாய்வு நாற்காலியைச் சரி பார்த்த பின்னரே அமர்வார். போக்கிரித்தனம் செய்யும் என் தம்பிக்கு இரட்டிப்புப் பங்கு சன்மானமும் தருவார்.

# தமிழ் மணம் கமழட்டும்

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான அமைச்சரவை 1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பொறுப்பேற்றது.

தேமதுரத் தமிழ் மொழியில் வரலாற்றேட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு புகழ் மிக்க ஆண்டாக 1968-ஆம் ஆண்டு விளங்கியது. ஆம்! அந்த ஆண்டுத் தொடக்கத்தில் தான் இன்பத் தமிழ் மொழியின் இணையிலாச் சிறப்பினை இந்த உலகுக்கே எடுத்து உணர்த்தும் வகையில், தமிழகத்தின் தலைநகரான சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் வாரத்தில் நடைபெற்றது. அதனையடுத்த சில நாட்களிலேயே, அதாவது அதே ஆண்டு சனவரித் திங்கள் 23-ஆம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையில்,

''தமிழ் நாட்டில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சிமொழியாகவும், பாட மொழியாகவும், பல்வேறு துறைகளில் நிருவாக மொழியாகவும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான விரைந்த நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது'' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பிறகு, 1969-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரு சீரிய திருப்பம் ஏற்பட்டது.

27-9-1969 முதல், துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்தும் தமக்குள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

தமிழறியான் தமிழர் நெறி, தமிழர்களின் தேவை, வாழ்வு தமையறிதல் உண்டோ? எந்நாளும் இல்லை என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தமிழர் தம் நிலை, நெறி, தேவை, வாழ்வு இவை அனைத்தும் ஒருங்கிணைந்து, அவர் தம் வாழ்வு வளங்கொழிக்க வழி வகுக்க அரசு அலுவலர்கள் அனைவரும் தமிழில் நல்லுணர்வும், நல்லறிவும் பெற வேண்டும் என்னும் சீரிய நோக்கத்துடன் 1970-ஆம் ஆண்டு வரை பொது (தமிழ் வளர்ச்சி)த் துறையாகவும், ஆட்சி மொழிக் குழு அலுவலகமாகவும் இயங்கி வந்த தமிழ் வளர்ச்சித் துறை, 1971-ஆம் ஆண்டு முதல், தமிழ் வளர்ச்சி இயக்ககம் எனத் தனித் துறைத் தலைமை அலுவலகமாக அமைக்கப் பெற்றது.

தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, தூய்மை ஆகியவற்றைக் காத்தலும், அதே நேரத்தில் அரசு நிர்வாகம் மற்றும் இலக்கிய வளர்ச்சி ஆகிய துறைகளில் தமிழ் மொழிப் பயன்பாட்டை மிகுதிப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் இத்துறையின் தலையாய பணிகளாகும்.



மேற்கூறிய செயற்பாடுகளுக்குத் துணை புரியும் வகையில் ஆட்சிச் சொல்லகராதிகள் அமைத்தல், மொழி பெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்தல், தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்து அதற்கேற்பத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை அமைக்க வழி வகை காணல், ''எண்ணுக தமிழில்'', ''எழுதுக தமிழில்'' என்னும் அடிப்படையில் அரசு அலுவலகங்களில் தமிழில் வரைவுகள் குறிப்புகளை எழுத ஊக்குவித்தல், பல்வேறு துறை அறிஞர்களையும் தமிழில் நூல்களை எழுத ஊக்குவித்தல் ஆகிய பணிகளைச் சிறப்பாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.




எதிர்கால ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் வகையில் இதுகாறும் தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தையும் தொகுத்துத் தமிழ்நூல் விவர அட்டவணை வெளியிடுதல், பிற மாநிலங்களில் தமிழ் பரவுவதற்கு வகைசெய்தல் போன்ற பணிகளைச் செய்து முடிப்பது இத்துறையின் நோக்கங்களில் ஒரு சிலவாகும். 1967-ஆம் ஆண்டு முதல், தொடக்கத்தில் பொது (தமிழ் வளர்ச்சி)த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள எல்லாப் பிரிவுகளிலும், அலுவலகங்களிலும், தமிழ்மொழி முழுமையாகச் செயற்படுத்தப்பட்டன. பின்னர், பொது (செய்தி விளம்பரத்)துறையிலும் ஆட்சிமொழித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. தற்போது சட்டம், நீதி, சட்டமன்றம், சட்டப் பேரவை முதலிய துறைகளும் தமிழ்த் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. தலைமைச் செயலகத்தில் பல துறைகளில் அரசாணைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. ''ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்'' என்னும் உயர் மொழியை உளங்கொண்டு தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஒல்லும் வகையால் தமிழ்ப் பணியைச் செல்லும் வாயெல்லாம் செயலாற்றி வருகின்றது.

## மொழி பெயர்ப்பு

அரசு அலுவலகங்களில் வரைவுகள், குறிப்புகளை ஆங்கிலத்திலேயே எழுதிப் பழகிவந்த பணியாளர்கள் வரைவுகள் அனைத்தையும் தமிழில் வரைய- எல்லா அலுவலகங்களில் பயன்படுத்தப் பெறும் பொதுவான ஆங்கிலச் சொற்களுக்கும், அவ்வத் துறைகளில் பயன்படுத்தப் பெறும் சிறப்புச் சொற்களுக்கும் உரிய தமிழ்ச் சொற்கள் தேவையன்றோ? அச்சொற்களைப் பெற அவர்கள் ஒவ்வொரு முறையும் பொது அகராதியைப் புரட்டி அல்லலுறின் அரசுப் பணி நடைபெறுமா? எனவே, தமிழ் வளர்ச்சித் துறை, அரசுப் பணியாளர்கள், நாடோறும் நடைமுறையில் பயன்படுத்தும் சொற்களை மட்டும் மொழி பெயர்த்துத் தொகுத்து ''ஆட்சிச் சொல் அகராதி'' என்னும் பெயரில் நூல் [illegible]வெளியிட்டு வருகின்றது. [illegible]களை [illegible]ப்புக்களை இதுவரை மூன்று பது[illegible] வெளியிட்ட இத்துறை இப்போது விரிவான நான்காம் பதிப்பை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது, இத்துடன் ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சிறப்புச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களை உருவாக்கி வெளியிட்டு வருகிறது. மேலும் இத்துறையிலுள்ள மொழி பெயர்ப்புப் பிரிவினால் அனைத்துத் துறைத் தலைவர்களாலும் அனுப்பப்படும் விதிகள், விதித் தொகுப்புகள், படிவங்கள் போன்றவற்றின் மொழி பெயர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் தமிழ்நாடு அரசால் வெளியிடப் பெற்ற பிற மொழிகளிலுள்ள சிறந்த நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்குரிய திட்டத்தையும் இவ்வியக்ககம் செயற்படுத்த முனைந்துள்ளது.

## ஆய்வுப் பணி

ஆட்சி மொழித் திட்டம் அலுவலகங்களில் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை நேரில் காணத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் துறைத்தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் நீங்கலாகப் பிற அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் குறித்து ஆய்வு நிகழ்த்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பணியை மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரும், ஆய்வுத் தனி அலுவலர்க்கும் தமிழ் மொழியை அரசு அலுவலகங்களில் விரைந்து செயற்படுத்த வேண்டுமென்ற அரசின் தூய நோக்கம் எந்த அளவு செயற்படுத்தப்படுகின்றது என்பதை ஆய்வதுடன் அவ்வாறு செயற்படுங்கால் ஏற்படும் இடையூறுகளை அவ்வப்பொழுது களைந்து, அரசு அலுவலர்களைத் தமிழின்கண் ஆற்றுப்படுத்தும் பணியையும் மேற்கொள்ளுகின்றனர். நம் தமிழ்நாட்டில் ஆட்சிமொழி சீரிய முறையில் விரைந்து செயற்படுத்தப் பெற்ற வருகிற தென்பதை, அண்மையில் குஜராத், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலிருந்து வருகை தந்த ஆட்சிமொழிக் குழுக்கள் பாராட்டி உள்ளன என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.



## தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு

1867-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்களின் விவர அட்டவணையைத் தொகுக்கும்நோக்குடன் தமிழ் நூல் விவர அட்டவணைப் பிரிவு தொடங்கப் பெற்றுச் செயற்பட்டு வருகின்றது. 1867-ஆம் ஆண்டு முதல் வெளியாகிப் பதிவு செய்யப்பட்ட தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் அந்நூல்கள் அனைத்தும் பொருட்பாகுபாடின்றிப் பதிவு செய்யப்பட்ட கால அடிப்படையில் ஒருங்கே கட்டி வைக்கப்படுகின்றன. இவை ஆவணக் காப்பகத்திலிருந்து, பெறப்பட்டுப் பொருட்பாகுபாடு செய்யப்பட்டு நூல்களைப் பற்றிய குறிப்புகளுடனும், நூல் அகராதி வரிசை, ஆசிரியர் அகர வரிசை முதலியவற்றுடனும், தமிழ் நூல் விவர அட்டவணை என்ற பெயரில் வெளியிடப் பெற்று வருகிறது. 1867 முதல் 1900 வரை பதிவு செய்யப்பட்ட நூல்கள் . பற்றிய குறிப்புகள் 'முதல் தொகுதி' வாயிலாகவும், 1901 முதல் 1910 வரை பதிவு செய்யப்பட்டவை 'இரண்டாம் தொகுதி' 1911 முதல் 1915 வரை பதிவு செய்யப் பெற்றவை மூன்றும் தொகுதி என்ற பெயரிலும் வெளியிடப் பெற்றன. நான்கு, ஐந்து, ஆறு, ஏழாம் தொகுதிகள் அச்சிடப் பெற்று வருகின்றன. 1867-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகள் அடங்கிய 'மரீடாக்' நூல்கள் அட்டவணையுடன், 'டெய்லர்' நூல் அட்டவணை, பிரிட்டன் தொல்பொருட்காட்சிச் சாலையிலுள்ள தமிழ் நூல்களின் அட்டவணை ஆகியவற்றையும் இணைத்து இத்துறை வெளியிட்டுள்ளது.

## தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நூலாசிரியர்க்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்

''செந்தமிழிற் புதுப்புது நூல் விளைப்பதற்குச் செல்வத்தைச் செலவு செய்தால் நந்தமிழ் நாடுயராதோ? நலிவெல்லாம் தீராதோ?'' என்ற புரட்சிக் கவிஞரின் கருத்துக்களை உளங்கொண்ட தமிழக அரசு, தமிழ் மொழியில் சிறந்த நூல்களை வெளியிட விரும்புகின்றவர்களுக்கு இத்துறையின் வாயிலாகப் பொருளுதவி செய்து வருகின்றது. அச்சிடத் தகுந்ததென வல்லுநர் குழு தேர்ந்தெடுத்த நூல்களை அச்சிடுவதற்காகும் செலவில் பாதி அல்லது ரூ. 5,000, இதில் எது குறைவானதோ அதை வழங்கி;தமிழ் மொழிகளில் புதுப் புது நூல் வெளிவர வழி வகுக்

கின்றது. இத்திட்டத்தின் கீழ் 'ஓதாளர் குறவஞ்சி', 'நாட்டுப் புறப்பாடல்கள் திறனாய்வு', 'கெடிலக்கரை நாகரிகம்', 'தொல்காப்பியக் களஞ்சியம்', 'எழுநூறு ஆண்டுகளில் நன்னூல்', 'இலக்கிய சாசன வழக்காறுகள்' திருக்குறள் இசை மலர், யாழ் நூல், நாடகத்தமிழ் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இது வரை சிறந்த தமிழ் நூல்கள் வெளியிடுவதற்கு ஒன்பது நூலாசிரியர்களுக்கு சுமார் ரூ. 25,700 நிதியுதவியாக அரசு வழங்கியுள்ளது. மேலும் இரு நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப் பட இருக்கிறது.

## சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவது

தமிழில் சிறந்த நூல்கள் இயற்றப்படுவதை ஊக்குவிப்பதற்காகச் சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் வகுக்கப் பெற்றது. இத்திட்டத்தின்படி 1960 ஆம் ஆண்டுவரை, இப்பரிசுகளைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கியது. பின்னர், இத்திட்டத்தைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், இத்திட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமெனவும், தமிழ் வளர்ச்சிக் கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அரசு அதற்கான திருந்திய விதிகளைப் பிறப்பித்தது. அவற்றின்படி 20 தலைப்புகளில் நூல்கள் வகைப்படுத்தப்பட்டு, அவற்றுள், முதல் பத்துத் தலைப்புகளில் வெளியாகும் நூல்களுக்கு அடுத்த ஆண்டிலும் பரிசளிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப் பெறும் நூல்களுக்கும் முதற் பரிசாக 2,000 ரூபாயும் இரண்டாம் பரிசாக 1,000ரூபாயும் வழங்கப்படுகிறது. சிறந்த நூல்களுக்கு 1971, 1973, 1975-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறந்த நூல்களுக்காக 83 நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை ரூ. 98,000 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

## வெளிமாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் இருக்கை நிறுவ, நிதியுதவி

வெளிமாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை நிறுவுவதற்கும், தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தவும், தமிழ்ப் பட்டப் படிப்பை ஊக்குவிக்கவும், தமிழ் மொழியில் ஆய்வுக் கூடங்கள் நடத்தவும், இவ்வரசு நிதியுதவி செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை தமிழக அரசு திருவேங்கடவன் பல்கலைக் கழகம், ஆக்ராப் பல்கலைக்கழகம், கல்கத்தாப் பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகம், கேரளப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திராவிட மொழிகள் சங்கம், உஸ்மானியாப் பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக் கழகம், கருநாடகப் பல்கலைக் கழகம், பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம், சென்னையில் உள்ள சமஸ்கிருத-தமிழ் ஆராய்ச்சிச் சங்கம் ஆகியவற்றிற்கு நிதி உதவி அளித்துள்ளது. இதன் வகையில் தமிழ்நாடு அரசு இவ்வியக்ககத்தின் வாயிலாக 1971 முதல் இதுவரை ரூ. 5,27,730 வழங்கி உள்ளது

## பயிற்சி வகுப்பு

அலுவலகக் குறிப்புகள், வரைவுகளைத் தமிழில் எழுதப் பயிற்சி கொடுப்பதற்காக மின்வாரியம், தலைமைச் செயலகம், சம்பளக் கணக்கு அலுவலகம், கருவூலக் கணக்குத் துறை போன்றவற்றில் உள்ள அரசு ஊழியர்களுக்குத் தமிழ் அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்றன. இவ்வகுப்புகளில் வரைவுகளைத் தமிழில் எழுதும் முறைகளும், தமிழில் எழுதும் போது ஏற்படும் சிக்கல்களை நீக்கும் வழி வகைகளும் விளக்கப் பட்டன. தலைமைச் செயலகத்திலுள்ள நிதித் துறைப் பணியாளர்களுக்கு அண்மையில் தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெற்றன. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு வாயிலாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது இளநிலை உதவியாளராக, உதவியாளராகப் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் அடிப்படைப் பயிற்சியோடு தமிழ்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. புதிதாக அமர்த்தப் பெறும் ஐ. பி. எஸ்., ஐ. ஏ. எஸ். அலுவலர்களுக்கும் தமிழ்த் திட்டப் பயிற்சி இவ்வியக்ககத்தின் வாயிலாக அளிக்கப் பெற்று வருகின்றது. இப்பயிற்சியால் பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட அலுவலர்களும் தமிழை ஆட்சிமொழியாகச் செயற்படுத்துங்கால் ஏற்படும் அடிப்படைச் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

## தமிழில் சிறந்த குறிப்புகள் வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசு

தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் குறிப்புகள், வரைவுகளைத் தமிழில் எழுதத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழி வகுத்து வருவது யாவரும் அறிந்ததே. அலுவலகக் குறிப்புகள், வரைவுகள் ஆகியவற்றைத் தெளிவாகவும், சீரிய முறையிலும் எழுத அரசு ஊழியர்களை ஊக்குவிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசுப் பணியாளர்களில் ஒருவர்க்கும் ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பணியாளர்களில் ஒரு

வர்க்கும், நகராட்சிப் பணியாளர்களில் ஒருவர்க்கும் 1970 முதல் ரூ. 5,000 பரிசு வழங்கப்பட்டு வந்து, சென்னை நகரத்திலுள்ள அரசுப் பணியாளர்களைப் பொறுத்த மட்டிலும் இருவருக்கு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன.

1974 முதல் தற்பொழுது அளிக்கப்பட்டு வரும் பரிசுகளின் எண்ணிக்கையை மூன்றாக உயர்த்தி முதற்பரிசு ரூ. 500-ம் இரண்டாம் பரிசு ரூ. 300-ம் மூன்றாம் பரிசு ரூ. 200-ம் என வழங்க அரசு அனுமதித்துள்ளது. தமிழ்நாடு அரசு 1970 முதல் இன்றுவரை 60 மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் 40 பேருக்குமாக மொத்தம் ரூ. 50,000 பரிசாக வழங்கியுள்ளது.

**தமிழ்நாட்டு வரலாறு எழுதும் பணி**

''கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்தகுடி தமிழ்க் குடி'' என்பார்கள்; ஆம் தமிழினம் காலத்தாலும், கருத்தாலும் மிகமிக மூத்த இனம்.

'தொன்று நிகழ்ந்தது
அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும்-இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளா மெங்கள் தாய்!'

என்று பாரதியார் கூறியது, தமிழுக்கும், தமிழினத்திற்கும் சாலப் பொருத்தமுடையதாகும்.

பொதுவாக இந்திய வரலாற்றின் தொடக்கமும், நாகரிகமும் தொடங்க வேண்டிய இடம் காவிரிக் கரையே தவிர கங்கைக் கரையன்று, உயர்ந்த நாகரிகத்தின் பிறப்பிடமும் தமிழகமே என்பதை வரலாற்று வல்லுநர் பலரும் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், தமிழகத்தின் தொன்மையான வரலாறு-தொடர்பான வரலாறு இதுகாறும் தொகுக்கப்படவில்லை என்பது ஒரு மாபெருங் குறையாகும். தொன்மைச் சிறப்புடைய தமிழக வரலாறு, இந்திய வரலாற்றில் ஆங்காங்கே சில இடங்களில் நிழலாக இழையோடிக் காணப்படுகின்றன அவ்வளவுதான்!.

தமிழக மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர் தம் ஆட்சிக் காலத்தையும், அவர் தம் ஆட்சியின் போதும் தமிழகம் பெற்றிருந்த சிறப்பினையும், உலகோடு தொடர்பு கொண்டு உலகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தது என்பதனையும், தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்குக் காணப் பெறும் சில குறிப்புகளைக் கொண்டு நாம் உணர முடிகிறதே தவிர வரலாற்றுப் பெருமை முழுவதையும் நாம் அறிய முடியவில்லை; அறிய வாய்ப்பில்லை. ஆதார பூர்வமான வரலாறு எழுதப்படவில்லை. இந்திய வரலாற்றைத் தொகுதி தொகுதியாக எழுதிய பல வரலாற்றுப் பேராசிரியர்கள் தொன்மை மிக்க தமிழக வரலாற்றை-பன்னெடுங்காலத்திற்கு முன்பு பார் புகழும் பேறு பெற்ற தமிழ் நாகரிகத்தை-ஒரு சில பக்கங்களில் தொட்டுக் காட்டிச் சென்றுள்ளனர். அவ்வளவுதான்.

மேனுட்டுக் கொலம்பசும், மெகல்லனும் கடற்பயணம் மேற்கொள்ளுமுன்னரே, நியூசிலாந்து நாட்டைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்கள் என்ற உண்மையை ரஷ்யர்கள் கண்டுபிடித்துக் கூறிய பின்னர்தான், கப்பல் கட்டும் கலையில் நாம் முன்னேடி என்பதை எண்ணி வியக்கின்ருேம்!!

தமிழகத்திற்குத் தனி வரலாறு-தமிழகத்தின் வரலாறு எழுதப்படவில்லை என்ற குறை, பலகாலமாக இருந்து வந்ததாலும், இவ்வரலாறு எழுதப்பட வேண்டும் என்னும் கோரிக்கை அவ்வப்போது பலரால் வற்புறுத்தப்பட்டு வந்திருந்ததாலும் பல ஆண்டுகளாகத் தமிழ் வளர்ச்சிக் கழகம் இதனை வலியுறுத்தி வந்திருந்ததாலும், 1971-ஆம் ஆண்டு டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் தலைமையில் ஒரு குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டு வரலாற்றினை இக்குழு கீழ்க்கண்டவாறு வெளியிட முடிவு செய்து செயலாற்றி வருகிறது.

தொல் பழங்காலம், சங்க காலத் தமிழகம், பல்லவ, பாண்டிய காலத் தமிழகம், சோழப் பெருவேந்தர் காலத் தமிழகம், பிற்காலம், இக்காலம் என்று ஆறு தொகுதிகளில் நூல்கள் வெளியிடும் பணியினைக் குழு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றுப் பிரிவின் கீழ்ச் செயற்படும் இக்குழு, தொல் பழங்கால வரலாறு என்னும் தலைப்பில் நில அமைப்பின் வரலாறு, பழைய கற்காலம், பெருங்கற்காலமும் உலோகக் காலமும், இன மரபு• வரலாறு ஆகிய பொருள்களில் கட்டுரைகளைக் கொண்ட முதல் தொகுதியைத் தயாரித்துத் தந்தது. இந்நூல் 1975-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டு வரலாற்றின் இரண்டாவது தொகுதியான சங்ககாலத் தமிழகம் எழுதி முடிக்கப்பட்டு அச்சிடத் தக்க நிலையில் உள்ளது. மூன்ருவது நான்காவது தலைப்புகளான பல்லவர், பாண்டியர் காலத் தமிழகம், சோழப் பெருவேந்தர் காலத் தமிழகம் ஆகியவற்றைக் குழு உறுப்பினர்களும், பதிப்பாசிரியர்களும், வரலாற்று அறிஞர் பெருமக்களும், தற்பொழுது எழுதி வருகின்றனர்.

**பிற விவரங்கள்**

(1) தமிழகத்தில் எழுத்து வடிவம் பெருத நாட்டுப் புறப் பாடல்களைத் தேடித் திரட்டி நூல் வடிவத்தில் கொண்டு வரத் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(2) தமிழகத்தில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் பொருட்குழப்பம் ஏற்படும் வகையில் ஒலிமாறி உருத திரிந்து போன திருவையார் (திருவையாறு) வடவார் (வடவாறு), கல்லார் (கல்லாறு) போன்ற ஊர்ப் பெயர்களையெல்லாம் தமிழில் திருத்தம் செய்து புதிய பட்டியல் வெளியிட இந்திய மைய நில அளவைத் துறைக்கும் அரசுக்கும் (அஞ்சல் தந்தி ரயில்வே துறை உள்பட) 420 ஊர்களுக்குத் தமிழ் எழுத்துக் கூட்டல்கள் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது.

(3) தொன்மையும் இலக்கியச் சிறப்பும் மிக்க ஏட்டுச் சுவடி நூல்களைச் சேகரித்துப் பதிப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(4) தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் நூல்களை 10 தொகுதிகளாக வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு இதுவரை சுமார் 1,85,000 ரூபாயை தமிழ்நாடு அரசு இவ்வியக்ககத்தின் வாயிலாக நிதியுதவியாக வழங்கியுள்ளது.

(5) தமிழில் யுனெஸ்கோ கூரியரை வெளியிடுவதற்காகத் தென்மொழிகளின் புத்தக நிறுவனத்திற்கு 1967-68 முதல் இதுவரை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24,500 வீதம், 1974-75 முதல் ரூ. 49,500-ம் நிதியுதவியளித்து வருகிறது. 1976-77 முதல் நிருவாகத்திற்காக ரூ. 25,000 மும் நிதியுதவியளித்து வருகிறது.

(6) இவ்வியக்ககத்தின் • வாயிலாக, வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் அண்மையில் அளிக்கப் பெற்றது. இத்திட்டத்தினுல் ஒவ்வொரு ஆண்டும் வறுமையால் வாடும் தமிழறிஞர் ஐம்பதின்மர் பயன் பெறுவர். திங்கள் தோறும் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் நிதி உதவி வழங்கப்பெறும். அண்மையில் வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ந்த திருவள்ளுவர் நாள் விழாவில் முதுபெரும் தமிழறிஞர்களான மயிலை சீனி. வேங்கடசாமி, கவிஞர் சுரதா உள்ளிட்ட ஐவருக்கு முதல் தவணையாக நிதியுதவி மாண்புமிகு தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் வழங்கப் பெற்றது. இவ்வாண்டிற்கு மேலும் 45 பேரைத் தேர்ந்தெடுத்து, நிதியுதவி வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி இயக்ககம், தக்க வகையில் எல்லாம் தமிழ்ப் பணியைச் செய்து வருகிறது; தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தொண்டு செய்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்

குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்ருக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்ருக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!

**தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு**

பதிவு எண். M. 8676

# "தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு"

- வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை!
- தமிழ் வரலாறு எழுதுவோர்க்கு ஊக்க உதவி!
- தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கான புதுத் திட்டங்கள்!
- சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மையம்!
- மதுரையில் தமிழ் இசைக் கல்லூரி!
- அரசவைக் கவிஞர் நியமனம்!

**எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!**

என்பதே நமது அரசின இலட்சியம்.
இப்பணியில் வெற்றி குவிக்க
எல்லாரும் பாடுபடுவோம்!